ரிஜிஸ்டர் நெ. 2041. | தனிப்பிரதி விலை ஒரு அணா.

குடி அரசு

வருட சந்தா முன் பணம்	— ரூ. 3—0
6-மாத சந்தா ,,	— ,, 1—12
வெளி நாட்டிற்கு ,,	— ,, 5—0

ஞாயிறுதோறும் வெளிவரும்.

வியாபார விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீண்டகால விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 8. | ஈரோடு, ஆங்கிரஸ-ஹ தை-மீ 17-வ (29—1—1933) | மலர் 40.

கடவுளையும், காங்கிரசையும் ஒழிப்பது பார்ப்பனீயத்தையும், சோம்பேறி வாழ்க்கையும் ஒழிப்பதாகும்.



கொழும்பு சுயமரியாதைச் சங்க ஆண்டுவிழாவின் போது எடுத்த படம்.

மதத்தையும், தேசியத்தையும் ஒழிப்பது முதலாளித்தனத்தையும், ஏகாதிபத்தியத்தையும் ஒழிப்பதாகும்.

தொழிலாளர் விண்ணப்பம்.

(பில ஹரி கண்ணி.)

(பாரதிதாஸன்.)

காடு களைந்தோம்—நல்ல
கழனிதிருத்தியும் உழவுபுரிந்தும்
நாடுகள் செய்தோம்—அங்கு
நாற்றிசை வீதிகள் தோற்றவும் செய்தோம்
வீடுகள் கண்டோம்—அங்கு
வேண்டியபண்டங்கள் ஈண்டிடச்செய்தோம்
பாடுகள் பட்டோம்—புவி
பதமுறவே நாங்கள் நிதமும் உழைத்தோம். (1)

மலையைப் பிளந்தோம்—புவி
வாழவென்றேகடல் ஆழமும் தூர்த்தோம்
அலைகடல்மீதில்—பல்
லாயிரங்கப்பல்கள் போய்வரச்செய்தோம்
பல தொல்லையுற்றேம்—யாம்
பாதாளம் சென்று பசும்பொன் எடுத்தோம்
உலையில் இரும்பை—யாம்
உருக்கிப்பல் யந்திரம் பெருக்கியுந்தந்தோம். (2)

ஆடைகள் நெய்தோம்—பெரும்
ஆற்றை வளைத்து நெல் நாற்றுக்கள் நட்டோம்
கூடைக்கலங்கள்—இங்குக்
கொட்டிடும் தானியம் நட்டுக்கொழித்தோம்
கோடையைக் காக்க—யாம்
குடையளித்தோம் நல்ல நடையன்கள் செய்தோம்
தேடிய பண்டம்—இந்தச்
செகத்தில் நிறைந்திட முகத்தெதிர்வைத்தோம். (3)

வாழ்வுக்கொவ்வாத—இந்த
வையத்தை இந்நிலை எய்தப்புரிந்தோம்
ஆழ்கடல், காடு,—மலை
அத்தனையிற்பல சத்தை யெடுத்தோம்
ஏழை, அசுத்தம்—குப்பை
இவை என்னவே எங்கள் தலையிற் சுமந்தோம்
சூழக்கிடந்தோம்—புவித்
தொழிலாளராம் எங்கள் நிலைமையைக்கேளீர்! (4)

கந்தையணிந்தோம்—இரு
கையை விரித்தெங்கள் மெய்யினைப்போர்த்தோம்
மொந்தையிற் கூழைப்—பலர்
மொய்த்துக் குடித்துப்பசித்துக் கிடந்தோம்
சந்தையில் மாடாய்—யாம்
சந்ததம் தங்கிட வீடுமில்லாமல்
சிந்தை மெலிந்தோம்—எங்கள்
சேவைக்கெலாம் இது செய் நன்றிதானோ? (5)

தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க.

மதத்தின் தலைவீர்!—இந்த
மண்ணை விளைத்துள்ள அன்னாத்தைமாரே!
குதர்க்கம் விளைத்தே—பெருங்
கோயிலிற் சேர்த்திட்ட கோடீசுரர்காள்!
வாதக்கிப் பிழிந்தே—சொத்தை
வடிகட்டி எம்மைத் துடிக்கவிட்டீரே
நீதியின் பெருக்கம்—விளை
நிலமுற்றும் உங்கள்வசம் பண்ணிவிட்டீர். (6)

செப்புதல் கேட்பீர்!—இந்தச்
செகத்தொழிலாளர்கள் மிகப்பலர் ஆதலின்
சுப்பல்களாக—இனித்
தொழும்பாகளாக மதித்திட வேண்டாம்!
இப்பொழுதே நீர்—பொது
இன்பம் விளைந்திட உங்களின் சொத்தை
ஒப்படைப்பீரே—எங்கள்
உடலில் இரத்தம்கொதிப்பேறுமுன்பே (ஒப்படைப்பீரே.) (7)

———

"SUPERSTITION OF KHADI"

A Discussion By S. Ramanathan, Pattabhi Sitharamyya, & N. S. Varadachari in English.

Price annas. 0-2.0

1933ஹு காலண்டர் இனும்!
மதன காமேஸ்வரி லேகியம்.
பெயர்பெற்ற மலபார் கஞ்சா தாது புஷ்டி மருந்து இதுவே. ராத்தல் 1-க்கு ரூ. 8. தபாற் சிலவு அணா 8.
கேட்லாக் இனும்.
சித்தஒளஷதவைத்தியசாலை, A. போஸ்டு, மூல்லச்சேரி,
தென் மலையாளம்.

'சமத்துவபோதினி'

தாழ்த்தப்பட்டார் சமத்துவம் முன்னேற்றம் கருதி கொழும்பினின்று வெளியாகும் மாதப்பத்திரிகை
ஆசிரியர்- வி. நைனன்.
வருஷ சந்தா—2—8—0
விலாசம்:—சமத்வபோதினி
டிக்கோயா சிலோன்.

இந்தியாவின் குறைபாடுகள்.
The Crux of the Indian Problem
என்னும் புஸ்தகத்தை வாங்கிவாசியுங்கள்.

இந்து மக்களின் பகுத்தறிவு வளர்ச்சியை பெருக்க என்றே பம்பாய் அரசாங்கக்கல்வி மந்திரியாய் இருந்த Dr. பராஞ்சிபே M. A. D; Sc., அவர்களால் எழுதப்பட்டு, லண்டன் பகுத்தறிவு சங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஓர் அறிவும், அனுபவமும், ஆராய்ச்சியும் கொண்டதான அரிய நூல் (+இன் தமிழ் மொழி பெயர்ப்பு) ஆகும். இதில் இந்தியக்கல்வியின் சீர்கேடு, மதம், மதபுத்தகங்களும் அவற்றிலுள்ள குற்றங்களும், பகுத்தறிவு, மரணம், ஒழுக்கம், சோதிடமும் சகுனமும், முதலியனபற்றிய ஆராய்ச்சியும், கண்டனங்களும்நிறைந்த கட்டுரைகள். ஆழ்ந்த அநுபவக்கருத்துக்கள், பாரபட்சமற்ற மணிவாசகங்கள், இந்திய சமுதாய வாழ்க்கையின் அலங்கோலத்தை அறிய விரும்பும் ஒவ்வொருவரும் படிக்கவேண்டுவதவசியம். முகவுரை, முடிவுரையுடன் 160 பக்கங்களுக்கு மேற்கொண்டது. இதில் எப்படிப்பட்ட தேசியம் வேண்டும்? எப்படிப்பட்ட அரசியல்வேண்டும்? என்பவைகளைப்பற்றியும், யாவற்றிற்கும் இந்திய மக்களுக்கு சுயமரியாதை உணர்ச்சி ஏற்படவேண்டியதே முக்கிய தேவை என்பதுபற்றியும் தெளிவான நடையில் விளக்கப்பட்டுள்ளது.

இதன் விலை அணா	0—8—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா ...	0—6—0

மொத்தமாய் வேண்டியவர்களுக்கு குறைந்த விலைக்கு கொடுக்கப்படும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

"கடவுளும், பிரபஞ்சமும்"

என்ற சிறந்த ஆராய்ச்சி நூல். கடவுள் ஒருவர் உண்டா என்பதும், கடவுளுக்கும் பிரபஞ்சத்திற்குமுள்ள சம்பந்தா சம்பந்தமும், கடவுளது வேலை என்ன என்பதையும், சவிஸ்தாரமாக ஆராய்ச்சி அறிவுடனும், பூத பௌதிக விஞ்ஞான சாஸ்திர விளக்கங்களுடனும், தக்க மேற்கோள் உதாரணங்களுடனும், இனிய தமிழில், எளிய நடையில், யாவரும் படித்துணரும் வண்ணம் எழுதப்பட்ட ஓர்சிறந்த நூல். "கோழி முதலில் உண்டானதா முட்டைமுதலில் உண்டானதா", "மரம் முந்தியதா, வித்து முந்தியதா", "பில்லி சூனியம்", முதலியன பற்றிய சந்தேகங்களுக்கு விடையும், அநுபந்தமும் சேர்க்கப்பட்டுளது. அதிக பக்கங்கள், குறைந்த விலை. உங்கள் ஆர்டரை இன்றே பதிவு செய்துகொள்ளுங்கள்.

பிரதி 1-க்கு விலை அணா 0-4-0 தனிப்பிரதி வேண்டுவோர் 5-அணா தபால்தலைகள் அனுப்பவேண்டும்

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

ஆத்திக நாத்திகவாதம்.

ஏது மனித அனுபவத்திற்கு பொருத்தியாது?

இரண்டாம் பாகம்.

[தோழர். ம. சிங்காரவேலு பி. ஏ., பி. எல்.,]

(சென்ற வாரத்தொடர்ச்சி)

இந்துக்களுக்கும் புத்தர்களுக்கும் இவ்வாதம் பொருத்தமில்லை. இவர்கள் "தாம் தாம் செய்த வினை தாமே அனுபவிப்பார்" என்ற சித்தாந்தத்தை நம்புகின்றவர்களாதலால் (Free will) சுயமாக நடக்கும் சக்தியை ஒத்துக்கொள்வதில்லை. ஆனால் கிறிஸ்துவர்கள் மாத்திரம் இந்த சுயமாக நடக்கும் சக்தியை ஆதியில் கடவுள் ஆதிமனிதனுக்குள் புகுத்தார் என்று நம்புகின்றார்கள். ஆதாம் (Adam) ஏவாளை (Eve) படைத்தபோது (Free will) அதாவது சுய நடத்தையை கடவுள் அளித்தனராம். அந்த சக்தியைக்கொண்டு நன்மை தின்மை இது வெனக் கண்டு நடக்க கடமைப் பட்டுள்ளோம். ஆனால், ஒரு கேள்வி. கொலை செய்யும் தக்ஸ் (Thuggs) என்ற கூட்டத்தார் கொலை செய்வதே அவர்களுடைய கடமை என்ற போது, இந்த வாதத்தின் பயன் என்ன? பிறந்த முதல் சாகும் வரை, கொலையோ, களவோ அவர்களுடைய நோக்காக இருக்க (Ideal) free wi l என்ற சுயநடத்தை வாதம் ஆபாஸமாக முடிகின்ற தன்றோ? கொலை செய்யாத தக்சை, அவனது சமூகத்தார் தண்டிக்கின்றார்கள். அச்சமூகத்தில் கொலை செய்வது அவர்கள் சமூகத்திற்கு (Survival value) ஆக பிழைக்க இடம் தருகின்றது. நமது சமூகத்திற்கு கொல்லாமை எவ்விதமாக (Survival value) அதாவது பிழைத்தொழுக வழியாக இருக்கின்றதோ, அது போலவே தக்ஸ்கூட்டத்தாருக்கு கொலையே பிழைக்கும் வழியாக இருக்கின்றது. புலி, கரடி, சிவகம், முதலிய மாம்சபதார்த்தம் வுண்ணும் மிருகங்களுக்கு கொலை செய்து வுண்ணுவதே நற் கருமமாகும். அது போலவே தக்சுகளுக்கும் கொலை செய்து சீவிப்பதே நற்கருமமாகும். இவ்விரண்டு சீவ இனங்களுக்கு இந்த "நற்கருமங்களை"ச் செய்யச் சொல்லும் சக்தி, யார் படைத்தார் எனவும் கேட்கின்றோம்? நன்மை செய்யச் சொல்லும் சக்தியைப் படைத்தவர் தீமையைச் செய்யவும் படைத்தனரர்க முடியுமன்றோ? ஆதலின், சுயமாக நடக்கும் சக்தியை படைத்தவருக்கு அது தீமையில் வுபயோகிக்கப் படுமென்பது தெரியாமற் போனதாகாதா? எல்லா முணர்ந்த ஈசனுக்கு, முன் யோசனை யில்லாமற்போயிற்றென்ற தோஷ மேற்படும் இந்த ஆபாச நிலைமையினின்று தப்பிக்கும் வழியாது? ஆதலின் இந்த (Free will) வாதம் முற்றிலும் முரணாகவே முடிகிறது. நாம் முன் கூறி வந்த பிரகாரம், அவனவன் இச்சை பிரகாரம் நடப்பதென்று சொல்லும் சொற்களுக்குப் பொருள் என்ன வெனில், அவனவன் பழக்க வழக்கங்களின்படி நடப்பதையே அவனவன் இச்சை என்று கூறுகின்றோம். தக்சுக்கு பழக்கம் கொலை; இந்துக்கு பழக்கம் ஜாதி; மகமதியனுக்குப் பழக்கம்மாலையில் மெக்காவை நோக்கித் தொழுதல்; கிறிஸ்தவனுக்குப் பழக்கம் மாதாகோவிலைக் கண்டால், Ave mary ஆவ் மேரி என்று முணு முணுத்தல். அவனவனுக்கு எந்தப் பழக்கமோ அந்தப் பழக்கப் படியே, தனது கோரிக்கையைச் செலுத்துகின்றான். இதனை Free will என்றுஅழைத்தாலுஞ்சரி, அல்லது Determinism என்றாலும் சரி எல்லாம் பழக்கத்தால் உண்டாகும் சக்திகளே. நமது திரேகமும் அதன் அவயவங்களும், களிமண்ணைப் போன்றவை. களிமண்ணைக் கொண்டு பிள்ளையாரையும் பிடிக்கலாம் அல்லது குரங்கையும் பிடிக்கலாம். அது போலவே மனிதனை சாதுவாகவும் செய்யலாம், அல்லது சண்டாளனுகவும் செய்யலாம். எல்லாம்பழக்கமே. மத வைராக்கியமற்ற நாஸ்திகனுகவும் Atheist செய்யலாம். அல்லது மதத்துவேஷங் கொண்ட ஆஸ்திகனுவும் செய்யலாம். இதுவும் பழக்கமே. இது தான் Free will doctrine அதாவது சுயேச்சை என்ற பிரச்னையைப் பற்றிய, மெஞ்ஞான முடிவு.

ஆனால் சில மதப்பற்றுள்ள மெஞ்ஞானிகள் முக்கியமாக எட்டிங்டன் (Eddington) என்ற வானசாஸ்திரி மதசார்பாக (Leaning towards religion) தனது சில சொந்த அபிப்பிராயத்தை Free will சுயேச்சை சம்பந்தமாக தெரிவித்துள்ளார். இவர் சொந்த அபிப்பிராயத்தைக் கேட்ட மதஸ்தர்கள், அவரை புகழ ஆரம்பித்து விட்டார்கள் "வான சாஸ்திரியே தங்களது Free will சுயேச்சைப் பிரச்சினைக்கு ஆதரவு அளித்து விட்டார்கள் !! தங்கள் முக்கிய மதக் கோட்பாடாகிய, சுயேச்சை சித்தாந்தத்திற்கு, மெஞ்ஞானத்தில் ஆதரவு கிடைத்து விட்டது !!! கர்ம சித்தாந்திகள் (Determinists) இனி வாய் பொத்திக் கை கட்டிக் கொள்ள வேண்டியது தான் !!!! நாஸ்திகன் குறும்பு அடங்கி விட்டது. குறும்பு அடங்கி விட்டது ?" என்று மகிழ்வுறுகின்றனர். இந்த "நாஸ்திகக் கூற்றை" சற்று விசாரித்தல் வேண்டும்.

(Determinism) அதாவது, ஒவ்வொரு நிகழ்ச்சியும், அதற்குரிய காரணத்தால் நிகழ்வ தென்பது மெஞ்ஞானத்தின் முக்கிய சித்தாந்தமாகும். பூத பௌதிக நிகழ்ச்சிகள் யாவும், காரிய முறைப்படி நிகழ்வ தென்பது நன்கு அறிந்த அநுபவம் பிராணிகளின் சம்பவங்களிலும் (Phenamena of life), காரண காரிய முறைப்படி நடந்தே வருகிறது என்று பலத்த நம்பிக்கையுண்டு. ஏதோ சில நுட்ப சம்பவங்களுக்கு (Subtleprocess) காரணம் தெரியாமற்போனால், அது நமது அறியாமையே வொழிய காரணமின்றி நடக்கும் காட்சி அல்ல. நமக்குத் தெரிந்துள்ள சம்பவங்கள் யாவும், Physical, Biological, Astronomical. யாவும் காரண முறையால் நிகழ்வுறுகின்றன என்ற நம்பிக்கை விஞ்ஞானத்திற்குண்டு. இந்த சர்வ சம்மத நம்பிக்கைக்கு, எவ்வித ஆக்ஷேபமும் (Exception) இதுகாறும் விஞ்ஞானத்தில் ஏற்படவில்லை. இந்த நம்பிக்கையை, சர்வ வியாபகம் (Universal) எனவும் கூறலாம் ஆனால் மத சார்பாக எழுதும் விஞ்ஞானிகளில் சிலர், என்ன கூறுகின்றார்கள் என்றால், பரமாணுக்களாகிய Electrons and Protons எலெக்டிரான்ஸ், பிரோடான்ஸ், இவைகளின் அசைவுகளுக்கு (Motion) காரணம் (Cause) தெரியவில்லை. ஆதலின் அவைகள் தங்கள் இஷ்டம்போல் நடப்பதாக உத்தேசிக்கலா மென்று கூறுகின்றனர். ஆனால், இதை நிச்சயமென்று கூறவும் முடியா தென்கின்றார்கள். இன்னொரு பிரபலவான சாஸ்திரி (Sir james jeans) மதச்சார்பாக பௌதிகர் பொருள்களின் நடத்தை காரண காரிய முறைக்கு அதீதப் பட்டதாக தோன்றிய போதிலும், அதனை நிச்சயமென்று சொல்லவும் திறமில்லை என்கின்றார். இத்தியாதி யோசனைகள் எல்லாம், Frankly speculative and uncertain வாஸ்தவமாகவே வெறும் வுத்தேசமெனவும், நிச்சயமில்லாத கற்பனைகளென்றே ஒத்துக் கொள்ளுகின்றார் (Confesses). எத்தனை தடவை இம்மாதிரியாக, விஞ்ஞானத்திற்கு தெரியாத இடங்களிலெல்லாம் மதங்களிலெல்லாம் மதங்கள் நுழையப் பார்த்தது, ஆனால் எத்தனையோ தடவை காரண காரிய முறை நோக்கியே சென்று கொண்டிருக்கின்றது. இந்த பரமா அணுக்களின் அசைவின் காரணமும் காலி நிகழ்ச்சியில் தெரிந்தாலும், தெரியும் என்று, தனது "மறைவான பிரபஞ்சம்" என்ற நூலில், (Mysterious universe) வரைந்துள்ளார். மதப்பித்து பிரபலமான சாஸ்திரியையும், விடவில்லை! என் செய்வார் பாபம்!! யாரைவிட்டது கொடிய பழக்கவாசனை? "யாரைவிட்டதண்ணே விதி வசம்" என்றார் நமது கவிஞரும். "விதி" யாவது நமது பழக்கமே. இளமையிலிருந்து இரவும், பகலும், மதப்பழக்கத்திலேயே இருந்துவிட்டு கோயிலையும், கோபுரங்களையும், குருமார்களையும், சந்திலும், பொந்திலும், எங்கும் தரிசித்துவிட்டு அவைகளின் கற்பனைகளையும், சித்தாந்தங்களையும், விட்டுவிடுவதென்றால் முடியுமா? இப்பழக்கவாசனையால்தான் விஞ்ஞானிகளையும், மதவாசனை விட்டொழிவதில்லை. இடிந்துகொண்டு வரும் இந்த மத வீட்டை..., இங்கொருகல், அங்கொருகல் வைத்து புதிப்பிக்கப்பார்க்கும் பிரயத்தனங்களெல்லாம் பயனற்றுப்போகுமென அறிக.

மெஞ்ஞானிகளில சிலர், சிதருண்டு கிடக்கும் மதத்தை சற்று நிமிர வைக்க முயற்சிப்பது புதியதல்ல. விஞ்ஞானம் போகிற போக்கில் (On the onward march of Science) எதாகிலும் தடையுண்டானால், அங்கெல்லாம், மதம் எதிர் நின்றுகொண்டு இந்த இடத்தில் மெஞ்ஞானம் பலிக்காது, நான் தான் அங்கெல்லாம் அதிகாரி என்று துடைதட்டி நின்றது. காலகதியால் அங்கெல்லாம் மதம் விரட்டி துரத்தப்பட்டது. எங்கே தெரியாமையோ அங்கே மதம் நுழையப் பார்க்கும் பழக்கம், புதியதல்ல. இருட்டறையில் மதஸ்தர் நுழைவதே அவர்களுக்கு பழக்கமாய்விட்டது. இத்தகையபழக்கத்தை சற்று விவரிப்பாம்.

மழை எவ்விதமாக பெய்கின்றது என்பதைத்தெரிந்து கொள்ளாத வரைக்கும் சிறுசிறு கடவுளரை சிருஷ்டிசெய்து மழை இந்திரனாலும், காற்று வருண பகவானாலும், ஜலம் கங்காதேவியாலும் உண்டாகின்றன வென மதஸ்தர்கள் கற்பித்துக்கொண்டார்கள். இன்றைக்கு அந்தே வதைகளெல்லாம் பறந்தோடிப் போயினர். சூரியன் இன்னவஸ்துவென்று தெரியாதவரை சூர்யதேவனென்று மதஸ்தர் வணங்கி வந்தனர். இன்று சூரியன் ஓர் பெரிய நெருப்பு என்று தெரிந்தவுடன் சூரியபகவான் போல் வெறுஞ்சூரியனுகி விட்டது. சூரியனை பூமியும், நவக்

தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க.

சாஸ்திரத்தை தலைகீழாய்ப் புரட்டும் 'காந்தீயத்திற்கும்' 'வைதீகத்திற்கும்' ஓர் வேண்டுகோள்.

ஆலயத்துக்குரியவர்கள் மூடர்கள், புத்தி குன்றியவர்கள், பாமரர்கள் என்பது தான் சாஸ்திரம்.

உழுது பயிரிடும் உத்தம கிருஷிகளுக்கு கோயில் வேண்டாம்.

(சித்தக்காடு கே. ராமையா)

இந்த வியாசம் சாஸ்திர சம்மதமாக தோழர் காந்தி கூட்டத்தார்களுக்கும், வைதிகர்களுக்கும் சமர்ப்பித்துக்கொண்டதாகும்:—

பொதுவாக விக்கிரக ஆராதனையில் பக்தியும் பரவசமும் கொண்ட வைதிகர் என்று சொல்லப்படுபவர்களுக்கும் அவர்களின் ஒரு அங்கமான தோழர் காந்தி கோஷ்டிக்கும் "புனா ஒப்பந்தத்திற்கு" பிறகு ஆலயப் பிரவேசத்தைப் பொருத்து அபிப்பிராய பேதம் பலமாகக் கிளம்பி விட்டது. தோன்றிய அபிப்பிராய பேதம் மைனர் விஷயமாய் இருந்தாலும் அது அகில உலகமும் விளம்பரமாகி விட்டது. அதில் அதுதான் குறிப்பிடத்தக்க விஷயம். இக்கிளர்ச்சியில் இந்து மதத்தினர் என்று சொல்லும் ஒரு சாரார் அதாவது தோழர் காந்தி கோஷ்டியார் ஆதி திராவிடர்-பஞ்சமர்-பறையர் என்று சொல்லும் தீண்டப்படாதவர்களை ஆலயத்தில் அனுமதிக்கவேணுமாய்ச் சொல்லுகிறார்கள். பிரிதோர் சாரார் அதாவது வைதீகம், சனாதனம், பிராமணியம் என்று சொல்லிக்கொள்கிறவர்கள் ஆதிதிராவிடக்கூட்டத்தை ஆலயத்துக்குள் அனுமதித்தால் புராதன சம்பிரதாயங்களுக்கெல்லாம் ஆபத்து! ஆபத்து!! ஆபத்து!!! என்று சொல்லுகிறார்கள். ஆனால் இவ்விரு சாரார்களும் தங்கள், தங்கள் அபிப்பிராயத்தை அழுத்தம் திருத்தமாகச் சொல்லும் போது இந்து மதத்தின் உண்மை அறிந்த ஆதி சனாதனவம்ச பரம்பரையிலுதித்த பிராமணீயர்கள், வைதிகர்கள் என்று சொல்லிக் கொள்வதில் ஒவ்வொரு சாராரும் பின் வாங்குவதில்லை. அதோடு அவ்விரு கூட்டத்தாரும் தங்கள் தங்கள் சனாதனத்துக்கும், பிராமணீயத்துக்கும், வைதீகத்துக்கும் மேற்கோளாக தூக்கிக்கொண்டிருக்கும் ஆதாரமெல்லாம், வேதாகம புராண ஸ்மிருதிகளே! இவைகளையே அடிப்படையாகக்கொண்டிருக்கிறார்கள். அடியற்ற இந்துமத சாஸ்திரங்களை அடிப்படையாகக்கொண்டு இதுவரை புரிந்து வந்த தர்க்க வாதங்களில் முடிவு கண்டவர்கள் எவருமிலர் என்பது ஒருபக்கமிருக்கட்டும்.

ஆலயப்பிரவேசம் ஒரு சூழ்ச்சி.

பிரஸ்தாபவாதம் பிரதிவாதமெல்லாம் கேவலம் "ஆலயப் பிரவேசம்" "விக்கிரக ஆராதனை" என்ற அற்ப விஷயத்தில் உச்சஸ்தானத்திலிருக்கும் வைதீகம், சனாதனம், பிராமணீயம், யோகம், ஞானம், பசியின்மை, பட்டினி கிடப்புப் போன்றவைகள் இரண்டறக் கலந்து போர் தொடுத்திருப்பதை பார்க்கும் போது இது தெரிந்து செய்யும் வஞ்சகமென்று சொல்ல வேண்டியிருக்கிறது. நாசிகளுக்கும், வேசிகளுக்கும், பிறப்பிடமாயும், சமதிருட்டிடமாகவும், பகுத்தறிவுக்கும் சமரசத்திற்கும் இல்லாததுமான ஆலயங்களில் சனாதனிகளுக்கும், வைதிகர்களுக்கும் என்ன வேலை? இத்துறையில் ஆதிதிராவிடர்களை அனுமதிப்பதென்பது அவர்களின் எதிர்கால முன்னேற்றத்தில் மண்ணைப்போடுவதோடு மீண்டும் மூடத்தனத்திலாழ்த்தவே செய்யப்படும் சூழ்ச்சி என்றே சொல்லவேண்டும். தேவாலயமெல்லாம் விபசார விடுதி என்று கும்பகோணம் பிரசங்கத்தில் காந்தியே சொன்னார்.

வேறு வேலை இல்லையா?

பலதுறைகளிலும் சீர்கெட்டிருக்கும் ஜனசமூகத்தை சீர்தூக்குவதற்கு மகத்தான வேலைகள் பல கண்முன்னே நிற்கிறது. அத்துறைகளில் கவனம் செலுத்தாமல், கல் பொம்மைக்கும், மண் பொம்மைக்கும், செம்பு பொம்மைக்கும், சடங்கு, உற்சவம் போன்ற நீண்ட நாளைய மூடத்தனத்தில் உழுது பயிரிடும் உத்தமர்களை அனுமதிக்கலாமா அனுமதிக்கக் கூடாதா என்ற வாதத்தில் ஒரு பெரிய படித்த கூட்டம் கவனம் செலுத்துவதென்பது வெட்கக்கேடான காரியமே! இக்கூற்றைப்பார்க்கும் இதர நாட்டினர் காரி உமிழ்வதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும். இந்தியாவுக்கே பூரண பிற்போக்கைப் பரம்பரையாக விளைவித்து வந்திருப்பது ஆலயமும் அதனுள் இருக்கும் சாமி என்ற பொம்மைகளும் தான். புராதன நாகரீகத்தில் கல்வி நிலயம், தொழில் நிலயம் என்பதெல்லாம் மறந்து, கோயில் கட்டுவதென்ற யோசனை சொல்லப்பட்டு என்று அங்கீகரிக்கப்பட்டதோ, அன்றே இந்த நாட்டுக்குக் கேடுகாலம் பிடித்தது. அன்றிருந்தே அயோக்கியத்தனங்களுக்கும், திருட்டுத்தனங்களுக்கும் புத்துயிர் அளிக்கப்பெற்றது.

பிறர் சொத்தை கொள்ளை அடிப்பது.

இதற்கு உதாரணமாக கோவில்களுக்கு ஆதாரமாக விருக்கும் புராணங்களிலேயே அயோக்கியர்களுக்கும், காமுகர்களுக்கும், பிறர் சொத்தை கொள்ளை அடிப்பவர்களுக்கும் மோக்ஷத்தில் இடமேற்பட்டிருப்பதாகச் சொல்வதே போதியதாகும். பிறர் சொத்தை கொள்ளை அடித்து கோயில் கட்டுவது, சிவ கைங்கர்யம் செய்வது, அடியார்களுக்கிடுவது போன்ற காரியங்கள் பாவமில்லை என்பதிலிருந்து தெளிவாகிறது.

இவைகளின் உண்மைகளை அதாவது ஆலயத்தின் அடிப்படையான தீமைகளை அந்தக்காலத்தில் தோன்றிய பெரியார்கள் உணர்ந்து வன்மையாகக் கண்டித்திருக்கிறார்கள். "கோயிலாவ தேதடா? குளங்களாவ தேதடா" என்றும், "நட்டகல்லை தெய்வமென்று நாலு புட்பம் சாத்தியே, சுற்றிவந்து முணு முணு என்று சொல்லும் மந்திரமேதடா" என்றும், இன்னும் பலர்கள் பாடியிருப்பதும் இதுபற்றியேதான். ஆரிய சமாஜம், பிரம சமாஜம் போன்றவைகள் விக்கிரகாராதனையைக் கண்டிக்கின்றன.

மூடர்களுக்கே கோவில்.

ஆகவே விக்கிரகாராதனை என்பது மிக, மிக கேவலமான விஷயம் அதாவது மூடர்கள், புத்திகுன்றியவர்கள், பாமரர்கள் செய்கை என்பதும் சாஸ்திர நிதர்சனம். இத்தகைய மூட பக்தியில் உழுது பயிரிடும் உண்மையாளர்களை அர்ச்சகன் முதுகண்டை கைகட்டி நிற்கச் செய்வானேன்? பஞ்சமர்களின் எதிர்காலம் படிப்பையும், பகுத்தறிவையும், தொழிலையும் நோக்கிக் கொண்டிருக்கிறது. பிரஸ்தாப ஆலயப் பிரவேச விஷயத்தில் ஆதிதிராவிடர்களை அனுமதிக்கக் கூடாதென்று சொல்லும் வைதீகர்களையும் அனுமதிக்க வேண்டுமென்று சொல்லுகிற காந்தி கோஷ்டியாரையும் ஒன்று கேட்டுக் கொள்ளுகிறோம். அதாவது "ஆதிதிராவிடர்களை அனுமதிப்பது, அனுமதிக்காதது என்று இரு அபிப்பிராயத்தில் நீங்கள் போர் புரிந்து கொள்வதை பூரணமாக நிறுத்துவதோடு, ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்ற அஞ்ஞான இருளிலிருந்து நீங்கள் இரு கூட்டத்தாரும் விடுபடுங்கள் என்பதே." இந்த வேண்டுகோளை அபிப்பிராயமென்ற முறையிலோ பகுத்தறிவுக்குப் பட்டதென்றோ உங்களுக்குச் சொல்லவில்லை. சாஸ்திர சம்மதமாகவே சொல்லி கேட்டுக் கொள்வதாகும். உதாரணமாக சில சாஸ்திர சம்மதமான மேற்கோள்களையும் சொல்கிறேன்.

"சாஸ்த்திர தர்மம்"

அப்ஸுதேவா மனுஷ்யாணாம்; திவிதேவாம் நிஷிணாம்; காஷ்ட லோஷ்டேஷு, மூடானாம்; யுத்தஸ் யாத்மநிதேவதாம்;

சதாதபவசனம்.

இதன் பொருள்:—சாதாரண ஜனங்களுக்கு தெய்வம்நீரில், சற்றுதெரியாதவர்களுக்கு தெய்வம் ஆகாசத்தில், மூடர்களுக்கு தெய்வம் கல்லிலும் கட்டையிலும், யோகிகளுக்கு தெய்வம் அவரவர்களுக்குள்ளே என்று சொல்லப் பட்டிருக்கிறது.

ஸ்கந்தம் ஞானயோக காண்டம்
நாடி சக்கிராம்.

"தீர்த்தேதா நேநதபோயஜ்ஞே சாஷ்டேபாஷாண கேஸதா, சிவம் பச்யதி மூடாத்மா. சிவோதேஹே பிரதிஷ்டித, ஸர்வத்ரா வஸ்த்திதம் சாந்தம் நபச்யதி சசங்கரம், ஜ்ஞானச் சக்ஷுர் விஹீநதவாத் அஹோமாயா பலம்முநே! ஆத்ம சம்ஸதம் பிண்டமுத்ஸ்ருஜ்யலிஹேத்கூர்ப் பரமாத்மந சிவாமாத்ம நிபச்யந்திப்ரதி மாஸுநயோகிந அக்ஞா நாம் பாவ நார்த்தாய ந்ரதிமா பரிகல்பிதா அபூர்வம் நாபரம் பிரஹ்மஸ்வாதமாநம் ஸத்யமத்வயம் ப்ரக்ஞாந கநமாநந்தம்ய, பச்யதி, ஸர்வபூத ஸ்தாத்மமாநம் விசுத்தக் ஞானதேஹிநம், ஸ்வாத்மங்ய பச்யத் பாஹ்யேஷுபச்யமாநந்த நபச்யதி.

பொருள்:—மூடாத்மாக்கள் தீர்த்தத்திலும், தானத்திலும், தபசிலும், கல்லிலும் சிவனிருப்பதாக நினைக்கிறார்கள். ஓ முனியே! ஞானக் கண்ணில்லாமையாலும், மாயையின் பலத்தாலும், எங்கும் வசிக்கும் சாந்தமூர்த்தியாகிய சங்கரனை காணகிறதில்லை. தனக்குள்ளேயிருக்கும் சிவனைவிட்டுவிட்டு சிவன் வெளியிலிருப்பதாய் பூஜிப்பவன் உள்ளங்கையிலுள்ள சோற்றை எறிந்து விட்டு புறங்கையை நக்குவான்போல யோகிகள் சிவனை தனக்குள்ளே காண்பார்களேயன்றி பிரதிமைகளிற் காணார். அஞ்ஞானிகளுக்கு பாவனார்த்தம் பிரதிமைகளிற் செய்யப்பட்டிருக்கின்றன........பாகவதம் 3-வது ஸ்கந்தம் 29-வது அத்தியாயத்தில்

விக்கிரக வணக்கம் பரிகாசம்.

"அகதம் ஸர்வேஷு பூதேஷு பூதாத்மாவஸ்திதஸ்ஸதா தமவக்ஞாய மாமர்த்ய, குதேர்சசாவிடம்பரம், யஸ்துஸர்வேஷு பூதேஷு ஸந்தமாத்மா நமீசவரம் ஹித்வார்ச் சாம்ப ஜதே மௌட்யாத் பஸ்மர்யேவ ஜுஹோதிஸ், அஹமுச்சவசைர்தரவ்யை க்ரியயோதபம் நயாநகே நைவதுஷ்யேர்ச்சிதோ அர்ச்சாயாம் பூதக்ராமாவமாநிந:

இதன் பொருள்:—நான் எப்போதும் சகல பூதங்களிலும், ஆத்மசுரூபமாய் இருக்கிறேன். அப்படிப்பட்ட என்னை மனிதன் அவமதித்து அர்ச்சையாகிய (விக்கிரகம்) பரிகாசத்தை சே

தொடர்ச்சி 17ம பக்கம் பாரக்க.

மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன?

ஆத்மார்த்தம் என்பது சோம்பேரி வாழ்க்கைக்கு அஸ்திவாரம்.

(தோழர் பெட்ரண் ரஸ்ஸல் M. A., F. R. S.)

(முன் தொடர்ச்சி)

ஆத்மாவும் அழியாமையும்?

1. ஒவ்வொருவருக்கும் ஆத்மா (Soul) உண்டு என்ற கொள்கையே, ஏனைய சித்தாந்தங்களிலெல்லாம் தலை சிறந்ததெனக் கிறிஸ்து மதம் பறைசாற்றுகின்றது. பலம் குன்றி, மனம் சிதைந்து, அறிவற்று, அரசியல் துறைகளில் ஒரு சிறிதும் பற்றற்று ஒடுங்கித்தண்ணீர்த் தொட்டிகளில் தனித்து வசித்தலே பிரதானமாக நினைத்துவந்த சோம்பேதிக் கூட்டத்தைச் சேர்ந்த ஸ்டோயிக்ஸ் (Stoics) எனப்படுவோருடைய கொள்கையே போன்று, மனிதனுக்குள் ஆத்மா என்பதாக தனித்ததோர் பொருள் மனிதனுக்குள் அந்தர்யாமியாக (கண்களுக்கு எட்டக்கூடாததாக) இருக்கின்றது என்ற கொள்கையும், சுயநலப் பிரியர்களால் கற்பிக்கப்பட்ட மௌடீகக் கூற்றேயாகும்.

2. தேகமனோதிடனுள்ள ஒவ்வொரு மனிதனும் பிறருக்கு நன்மை செய்யவேண்டும் என்பதாகவே இயற்கையாக நினைக்கின்றான். ஆனால் அவனுடைய தேகதிடம் குன்றி, மனோசுகம் சிதைவுறும் காலத்தில் பிறருக்கு நன்மை செய்யவேண்டும் (to do good) என்ற சுபாவ குணம் தடைபட்டு, ஒவ்வொருவரும் நன்னடத்தையுடையவராக இருக்க வேண்டும். (to be good) என்பதாக நினைக்க ஆரம்பிக்கின்றான். இது இயற்கையாக மாந்தருடைய மானச உலகில் நிகழும் ஓர் (மாறுதல்) சம்பவமாகும்.

3. கிறிஸ்து மதம் ஏற்பட்ட காலத்திலே, இம்மாதிரியான மனப்பான்மைதான் மனிதர்களுடைய உள்ளத்தில் இயற்கையாக நிலைபெறுவதாயிற்று. ஏனெனில் அக்காலத்திலே அவர்களுக்குத்தேக சுகமும் இல்லை, அறிவு விளக்கமும் கிடையாது. இதனாலேதான் அவர்கள் முதலில் தன்னுடைய சொந்த நன்மை நடத்தையையே பிரதானமாக நினைக்கவேண்டியதாயிற்று. பிறருக்கு நன்மை செய்யவேண்டுமெனின் அதில் பல கஷ்டங்களிருக்கின்றன, அதற்குப்பல வசதிகளும் வேண்டியிருக்கின்றன. ஆனால சுயநன்மையையடைய வேண்டுமெனின் அதற்குப் பிரமாத கஷ்டமும் வேண்டுவதில்லை. தவிர அதனை அடைதற்கு வேண்டிய வசதிகளும் அதிகம்இல்லை எனவே பரோபகார சிந்தையை இயற்கையாக உடைய மனிதன்; காலதேச வர்த்தமானங்களுக்கேற்ப சோம்பேரி வாழ்க்கையிலீடுபட்டு, மதிமயங்கி, சுயநன்மையே பிரதானமென நினைக்க ஆரம்பித்துவிட்டான். இதனால் தத்தம் ஆத்மநன்மை வேறென்றும், பொது நன்மை வேறென்றும், இவற்றுள் ஆத்மசுகமே பிரதானமென்றும், பிறர்சுகம் நிஷ்பிரயோசனமென்றும்—பாகுபாடுகள் ஏற்படலாயின. ஆத்மசுகம் எனப்படுவது சோம்பேரித்தனமாக இருந்து கஷ்டமன்னியில் நன்மை பெறுதலாக இருத்தலின் அதுவே மேலானதென்றும். பொது நலம் எனப்படுவது சரீர உழைப்பாலே மக்களுடைய சக்திகளனைத்தையும் கவர்வதாக இருத்தலின் அது நிஷ்பிரயோசனமென்றும்—'சீ! சீ இந்தப்பழம் புளிக்கும்' என்ற முறையில் வெகுநளினமாக மனிதன் எண்ணிவிட்டான். ஆகவே கிறிஸ்துமதக் கட்டளைகளிலே பிறர் நன்மை, சமதர்மம் முதலிய பரந்த நோக்கங்களுக்கு இடம் இல்லாமற் போனதற்கு மூலகாரணம் ஆத்மா உண்டு அதற்காகத்தான் ஒவ்வொருவரும் பாடுபடவேண்டுமென்ற திட்டம் (அதாவது அவனவன் கடைத்தேற அவனவன் பாடுபட்டாகவேண்டும் என்று) ஏற்பட்டிருத்தலேயாம்.

4. இக்காலத்திலே மதப்பற்றுள்ள கிறிஸ்துவர்கள் எதை மேலானதாகக் கருதுகின்றார்கள்? விபசாரம் மஹாபாவமாம். தேசியப் பித்தலாட்டம் உலகதர்மமாம்! விபசாரம் என்பது தனிப்பட்ட வகையில் ஏற்படும் குற்றமாகும்; ஆனால் தேசியப் பித்தலாட்டம் எனப்படுவது பல்லாயிரம் மக்களுடைய பொது நன்மைக்காக உழைக்க முன்வந்த ஒரு தேசியவாதி சுயநலத்தால் ஒரு சமூகத்தாரிடமிருந்து பரிதானம் (கூலி) வாங்கிக்கொண்டு மற்றொரு சமூகத்தினரை அடக்கியொடுக்கி இம்சிக்க வெகு சாதுர்யமாக முற்படுதலாகும் இவை இரண்டில் ஆத்மா எனும் ஒரு பொருளைக் கலங்கச்செய்யும் விபசாரம் என்பது மஹா பாவமாம். பல கோடி மக்களை மீளவொட்டாது தேசியப் பித்தலாட்டத்தால் நசிக்கும்படி அடக்கி வைத்திருப்பது—வெளிப்படையான அதாவது ஆத்மாவிற்கு வேறுபட்ட பொருளின் சம்பந்தமாக இருத்தலின்—அது பாவமல்லவாம், இவை சமய சாதுர்யமெனும் உலகதர்மமாம்! என்னே இவர்களது மூடக்கொள்கை. உண்மையில் அந்த விபசாரியைவிட இந்த தேசிய வாதியன்றோ எத்தனையோ ஆயிரம்மடங்கு அதிகமான பாவத்தைச்செய்கின்றான்!

5. மத்திய காலத்திலே (Mediaeval period) எது பரமதர்மம் என்பதாகக் கொள்ளப்பட்டதென்பதை அக்காலத்திய சித்திரங்களிலிருந்தும், பதுமைகளிலிருந்தும் நன்கு உணரலாம். மிக்க தாழ்மையும், தற்பெருமையுங்கூடிய ஆசா ஆபாசங்களே அவற்றிலிருந்து வெளியாகின்றன. உலகத்தைத் துறந்து சந்யாசியாக வெளியேறினவனே (ஒரு வேலையும் செய்யாமல் ஊரார் உழைப்பில் உண்டுகளித்து இருப்பவனே) மஹா புருஷனும் ஞானியாம்! உலக மக்களின் மேனோக்கத்தை உதாசீனம் செய்து, அவர்களுடைய நன்மையைப் புறக்கணித்து; அதாவது பரோபகாரச் சிந்தையை அறவே ஒழித்து—ஏதோ தன்னுள் இருக்கும் ஆத்மாவெனும் ஒரு போலி பொருளின் நன்மைக்காக (தன்னுடைய சுயநல மேன்மைக்காக.) சோம்பேரியாய் இயற்கைக்கு மாறுபட்டவகையில் காடு, குகைகளிலே தன்னந்தனியனாய் விலங்கென்ன ஒளிந்து திரியும் அவன் எவ்வாறு மஹான் ஆவானோ அறிகிலேன்! இத்தகைய மஹாஞானிகள் ஒருபுறமிருக்க உலக விஷயங்களில் ஈடுபட்ட எத்தகைய மனிதரை மதம் பாராட்டி பரமபுருஷர் பட்டம் அளிக்கின்றதென்பதையும் ஆராய்வோம். லூயிஸ் (St. Louis) என்பவரை கிறிஸ்துமதம் போற்றுகின்றது அவர் என்ன செய்தார்? பொது நன்மைக்கு ஏதாவது பாடுபட்டாரா? இல்லை. ஆனால் என்ன செய்தார்? கிறிஸ்து மதத்தின் பேரால், கிறிஸ்துவ மக்களின் பேரால், தங்கள் இனம் ஆதிக்கம் பெறவேண்டுமென்ற மௌடீக அகங்கார பித்தால் துருக்கியரை எதிர்த்து இருதிறத்தாருக்கும் பெருத்த தீங்கையே விளைவித்தார். மற்றபடி ஜனங்களுக்குப் பொருளாதார சம்பந்தமான நன்மைகளைச் செய்வோரையும், கிரிமினல் சிவில் முதலிய சட்டங்களைச் சீர்திருத்தம் செய்து பொதுநன்மையைக் காப்பாற்ற முற்படுவோரையும் கிறிஸ்துமதக் கோவில்கள் (Churches) ஒரு சிறிதும் பொருட்படுத்துவதில்லை! இவற்றினின்றும் நாம் என்ன அறிகின்றோம்? மக்களது நன்மையை முன்னிட்டுச் செய்யப்படும் காரியங்கள் பிரயோசனமற்றதென்பதே. மதசம்பிரதாயமென்பது நன்கு விளங்குகின்றதல்லவா. தவிர பஞ்சாங்கத்தை (Calender) ப்புரட்டிப்பார்த்தால் அதில் குறிக்கப்பட்டுள்ள ஞானிகள் (Saints) எனக்கூறப்படுவோர் எவரை எடுத்துக்கொண்டபோதிலும், பொதுஜன ஊழியத்தை மேற்கொண்டு தொண்டாற்றியவர் ஒருவராவது அதில் இருப்பதாகத் தெரிகின்றதா? இல்லவே இல்லை.

6. இம்மாதிரி மக்களுடைய செயல்களிலே தனக்கு ஒன்று பிறருக்கு மற்றொன்று என்பதான பிரிவு மதத்திலே ஏற்பட்டதன் காரணமாகத்தான்; தனிப்பட்ட மனிதனிலும் அக்கொள்கை தன் ஆத்மா ஒன்று அதற்கு வேறான தேகம் மற்றொன்று என்பதாகப் படிப்படியே பிரிவு ஏற்பட்டு—அவைகள் கிறிஸ்து மத வேத சம்பிரதாயங்களிகளிலும் டெஸ்கார்ட்ஸ் (Descartes) என்ற ஞானியார் வகுத்த தர்மக் கட்டளைகளிலும் சாஸ்வதமாக வேரூன்றி நிலைநாட்டப் பெற்றது. இன்னும் நன்றாக விளக்க வேண்டுமானால் சுயநலமே ஆத்மா, பொது நலமே தேகம்; தனிப்படையான மனிதனே ஆத்மா, பொதுத் தொகுதியான உலகமே தேகம், இதைத் தவிர ஆத்மா என்ற பொருளுக்கு வேறு அர்த்தமில்லை.

7. எனவே கிறிஸ்துமத தர்மங்கள் மனிதனுடைய ஆத்மாவை மேன்மைப் படுத்தி தேகத்தைத் தாழ்மைப் படுத்துவதன் நோக்கம் அம்மதம் ஒரு சுயநலக் காரியம் என்பதனாலேயே யாகும்.

8. எனவே நான் மேற்கூறிய விஷயங்களிலிருந்து, கிறிஸ்து மதம் சென்ற இருபது நூற்றாண்டுகளாக மக்களைச் சுயநலப் பிரியர்களாக்கி இயற்கைக்கு மாறாகத் தங்களது ஆத்மாவிற் குள்ளேயே அடைபடுமாறு செய்து வந்திருக்கின்றதென்பது வெளிப்படை. மனிதனைச் சுயநலத்தினின்றும் பிரித்து வெளியிட்டுச் செல்லுவது பெண்ணின்பமும், மக்கள் மேல் காதலும், சமூகப் பற்றும் ஜனசமூக ஒற்றுமையுமேயாம். இக்காரன்கையும் கிறிஸ்து மதம் தலையெடுக்காதபடி செய்திருக்கின்றது. முதலாவதான பெண்ணினத்தை மஹா கேவலமானதென்று அடக்கியொடுக்கத் தன்னாலான முயற்சிகளனைத்தையும் கிறிஸ்து மதம் மேற்கொண்டிருக்கின்றதென்பதை முன்னர் நன்றாக விளக்கியிருக்கின்றோம். தவிர மக்கள் மேல் காதல் கொள்ளுதலை ஏசுவே தவிர அவருடைய பிரதம சிஷ்ய கோடிகளனைவரும் வெறுத்து உதாசீனம் செய்தே வருகின்றனர். மேலும் கிறிஸ்து மதம் மேலோங்கியிருந்த காலத்திலே, ரோமாபுரியின் ஏகாதிபத்தியத்திற்குட்பட்ட தேசங்களில் சமூகப்பற்று எவ்வாறு முறியடிக்கப் பட்டதென்

தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க.

விபசாரத் தடை.

மதுரையில் விபசாரத் தடை மசோதா அமுலுக்கு வந்திருப்பதாக தெரிய வருகின்றது. சென்னையிலும் அது முன்னமேயே அமுலுக்கு வந்து விட்டது. மற்ற ஜில்லாக்களுக்கும் அது உடனே அமுலுக்கு வரவேண்டியதாகும். குறைந்த அளவு 30 ஆயிரம் ஜனங்கள் உள்ள ஈரோட்டில் 300 பேர்களுக்கு குறையாத விபசாரிகள் என்போர்கள் அதாவது ஒரு அணா இரண்டு அணா ரேட்டுமுதல் விபசாரித்தனம் செய்துஜீவிக்க வேண்டிய பெண்கள் இருந்து வருகின்றார்கள் என்றால் மற்ற பெரிய பட்டணங்களைப் பற்றி கேள்க்கவும் வேண்டுமா?

விபசாரத்தடை மசோதா வருவது என்பது சற்று தாமதமானாலும் ஆங்காங்குள்ள போலீஸ் அதிகாரிகளாவது இவ்விஷயங்களில் சற்று கவலை செலுத்தி அவர்கள்-(விபசாரிகள்) தெருவில் நின்று மக்களை அழைப்பதையும், தெருக்களில் சில்லரைக் கலகங்களை ஏற்படுவதையும், இவர்கள்பயனாய் ஆபாச பேச்சவார்த்தைகள் நடப்பதையும், மற்றும் சில வாலிபர்கள் காலித்தனமாய் நடக்க ஏற்படுவதையும் ஒருவாறு தடுக்கலாம் என்றே கருதுகின்றோம்.

இப்படிப்பட்டகாரியங்களில்சின்னசிப்பந்திகள்பிரவேசிக்கஇடம் கொடுக்காமல் சற்று மேல் அதிகாரிகளாய் இருப்பவர்களே பிரவேசித்து ஏதாவது செய்ய முயற்சிப்பார்களானால் உடனே காரியம் கை கூடும் என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

துருக்கியில் "அல்லாஹ்"

துருக்கி தேச அரசாங்கமானது அல்லாஹ் என்கின்ற பெயரை உபயோகிக்கக் கூடாது என்று ஒரு உத்திரவு போட்டு இருக்கிறதாம். அதைக் கண்டு துருக்கி தற்போது விபரீதப் போக்கில் நுழைந்திருப்பதைக் கண்டு எல்லோரும் வருந்துவார்கள்.

"அல்லாஹ்" என்ற பதத்தையே ஒழித்து அதற்கு பதிலாக "தான்ரா" என்ற துருக்கிப் பதத்தையே இனி வழங்குவதென்று துருக்கி கவர்மெண்டார் உத்திரவு பிறப்பித்து விட்டார்கள் என்று திருச்சி "சமரசம்" என்னும் பத்திரிகை எழுதி இருக்கிறது.

காஞ்சீபுரத்தில் சுயமரியாதைக் கூட்டங்கள்.

காங்கிரஸ் காரர்களின் சூழ்ச்சியும், பார்ப்பனீயப் பாதகச்செயலும் பலிக்கவில்லை.

சுயமரியாதைக்கு வெற்றிமேல் வெற்றி.

வி. பி. எஸ். மணியர்.

20, 21, 22-1-33-ல் கூட்டங்கள் பொதுமக்களுக்கு துண்டுவிளம்பரங்கள் மூலியாய் அறிவித்தபடி 20-1-33 மாலை காஞ்சிபுரம் சங்கூசா பேட்டை மைதானத்தில் பெருந்திரளான கூட்டத்தினிடையே காஞ்சிபுரம் தோழர் நாஸ்திகன் சி. கெ. குப்புஸாமி அவர்கள் தலைமையில், தோழர்கள் சி. கலியாண சுந்தரம், வி. பி. எஸ். மணியர் ஆகிய இவர்கள் முறையே சுயமரியாதை இயக்கம் பார்ப்பனீயம் முதலியவைகளைக் குறித்து மிகவும் தெளிவாக பேசி முடித்தார்கள். தலைவர் முடிவுரைக்குப்பின் இரவு 9மணிக்கு கூட்டம் கலைந்தது.

மறுநாள்.

எஸ். வி. லிங்கம்.

எஸ். குருசாமி.

சனிக்கிழமை டை மைதானத்தில் காஞ்சிபுரம் தோழர் பி. எஸ். மாணிக்கவாசகம் அவர்கள் தலைமையில் பெருங் கூட்டத்தினிடையே மாயவரம் எஸ். வி. லிங்கம் சுயமரியாதை இயக்கம் என்பதைப்பற்றிப் பேசுகையில் சில காங்கிரஸ் காரர்கள்கலாட்டா செய்து கூட்டத்தை கலைக்க முயற்சித்தும் கூட்டம்கலையாமல் டை காங்கிரஸ் காரர்களுக்கு பொது ஜனங்களால் அறிவுறுத்தப் பட்டு மேலும் பெருவாரியான கூட்டம் சேர்ந்து விட்டது. சென்னைத் தோழர் எஸ். குருஸாமி பி. ஏ. அவர்கள் "பார்ப்பனீயக்கொடுமை" யென்னும்விஷயத்தை பெருங்கர கோஷத்தினிடையே நீண்ட நேரம் பேசினார். பிறகு தலைவர் முடிவுரைக்குப் பின் இரவு 9.30 மணிக்கு கூட்டம் அமைதியாக முடிவுற்றது.

அடுத்த நாள் தோழர்கள்

சிங்காரவேலு, வல்லத்தரசு, எஸ் குருசாமி, வி. பி. எஸ். மணியர்.

22-1-33ந்தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை முறையே துண்டுபிரசுரமூலமும் தண்டோராமூலமும் அறிவித்திருந்தபடி பெரிய காஞ்சிபுரம் பதினாறுகால் மண்டபத்தில் நடக்க இருந்த கூட்டம் நடைபெற்றால் ஒருசமயம் தங்கள் யோக்கியதைகள் வெளிப்பட்டு விடுமென்ற பீதியினால் சனாதனதர்மிகளென சொல்லிக்கொள்ளும் பார்ப்பனர்களும் சில குருக்களும் கூடி மேல்படி மண்டபத்தில் ஒரு கம்பத்தில் செதுக்கப்பட்டிருக்கும் கடல்தாண்டியென்னும் குரங்குக்கு அபிஷேகம் செய்வதுபோல, பெரிய பெரியடமாரங்களை முழக்கி பிரசங்கத்தைக்கேழ்க்க வொட்டாமல், சூழ்ச்சிசெய்ய எத்தனித்தபடியால், அடுத்தாப்போல் உள்ளதேரடிமைதானத்தில் கூட்டம் கூடப்பட்டது. மேல்படி பார்ப்பனர்கள் பாதகச்செயல் பலிக்காமல்குறித்தகாலத்திற்கு முன்னாடியே பெருந்திரளான ஜனங்கள் கூடி விட்டார்கள். பிறகு ஆலந்தூர் செங்காதரம் "அவர்கள்" அவைத்தலைமையில் சென்னைத் தோழர் எம் சிங்காரவேலு பி. ஏ. பி. எல். அவர்கள் சமதர்மம் என்பது பற்றியும் புதுக்கோட்டை தோழர் முத்துசாமி வல்லத்தரசு பி. ஏ. பி. எல். எம். எல். சி. (புதுக்கோட்டைஸ்டேட்) அவர்கள் சுயமரியாதை என்னும் விஷயத்தையும் மக்கள் மனதில் பசு மரத்தாணிபோல் பதியுமாறு சமதர்மக்கொள்கையின் நோக்கங்களையும் பார்ப்பனப்புரட்டுகளையும் மிகவும் விரிவாக 4மணிநேரம் பேசிமுடித்தார்கள். இரவு 9-30 மணிக்குதலைவர் முடிவுரைக்குப்பின் வெற்றிமேல் வெற்றி என்னும் கரகோஷத்தினிடையே கூட்டம் முடிவுற்றது.

மேல்கண்ட மூன்று கூட்டங்களுக்கும் பெருவாரியான தோழர்களும், பிரபல வியாபாரிகளும், முனிசிபல் கௌன்சிலர்களும், இன்னும் சிலஸ்தாபன பிரமுகர்களும் விஜயம் செய்திருந்ததுகுறிப்பிடத்தக்கது. மறுநாள் காலையில் 8, 30மணிவண்டியில் தோழர்கள் எம். சிங்காரவேலு, கே. முத்துசாமி வல்லத்தரசு எஸ். குருசாமி எஸ். வி லிங்கம், செங்காதரம், வி. பி. எஸ். மணியர், முதலியவர்கள் சென்னைக்கு சென்று விட்டார்கள்.

ஒரு நிருபர்.

நான்குனேரி தாலூகா ஆதிதிராவிட ஸ்பெஷல் மகாநாடு.

7-1-33ல் சனிக்கிழமை காலை 11மணிக்கு நான்குனேரி இர்வின் பாடசாலையில் அமைக்கப்பட்டிருந்த பந்தலில் தோழர் பி. நம்பியபிள்ளை அவர்களின் தலைமையின் கீழ்கூடியது.

தோழர்கள் எஸ். முத்தையா, ஜி. எஸ். ஏ. வெங்கட்ராம், பண்டிதர் இ. எம். சுப்பிரமணியபிள்ளை முதலியவர்கள் விஜயம் செய்திருந்தார்கள்.

தோழர் எஸ் முத்தையா "கல்வி" மூடநம்பிக்கை, சங்கத்தின் அவசியம் என்பது பற்றியும், தோழர் எஸ். ஏ. வெங்கடராம், "மதம்" என்னும் பொருள் பற்றியும், தோழர் பி. தேவதாஸ் "சீர்திருத்தம்" என்னும் பொருள் பற்றியும் சொற்பொழிவு செய்தார்கள் பல தீர்மானங்கள் நிறைவேறிய பின். காரியதரிசி அவர்களால் வந்த ஞேபசாரம் கூடியபின் கூட்டம் கலைந்தது. ஒரு நிருபர்.

சென்னை,

"சுயமரியாதை இளைஞர் மன்றம்"

டைமன்றத்தின் வாராந்திரக் கூட்டம் நான்காவது தடவையாக 22-1-33 பகல் 2மணிக்கு தோழர் டி. ராதா கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது, அது சமயம் தோழர்கள் என். பி. பத்மநாபன், எஸ்-ரங்நாதன், கெ. எஸ். நாதன் எல். லூயிஸ்,. பி எஸ். சம்பந்தம், சி. எஸ் சண்முகம், எஸ். பிரகாசம் முதலியோர்கள் "சுயமரியாதை இளைஞர் கடமை" என்பது பற்றி நீண்ட நேரம் சொற்பெழிவு நிகழ்த்தினார்கள்.

ஒரு நிருபர் எழுதுகிறார்.

கோலாலம்பூர்

சுயமரியாதை சங்கம்.

20-12-32 தோழர் ஜி. குமாரசாமி அவர்கள் தலைமையின் கீழ் முதலாவது பொதுக் கூட்டம் கூடியது அது பொழுது எஸ். எஸ். வெள்ளையம்மாள், சன்முகம் ராமதாஸ் முதலியோர்கள் பிரசங்கம் செய்த பின் கீழ்கண்ட தீர்மானம் நிறைவேறியது

தோழர் வி. பி. ஏ. சௌந்தர பாண்டியன் அவர்கள் தந்தையாரும், ஆர். கெ. சண்முகம், அவர்கள் துணைவியாரும் காலஞ் சென்றமைக்கு அனுதாப படுகின்றது. சுயமரியாதை இயக்கங் கண்ட தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் மேனாடு சென்று சுகமுடன் திரும்பியதற்கும் அவரை பாராட்டுகின்றது.

ஒரு நிருபர்

பரதூர் வாலிப சுயமரியாதைச்சங்கம்.

13-1-33ல்-மாலை 4மணிக்கு காரியதரிசி வீட்டின் மேல் மாட்டியில் மாதாந்திரக்கூட்டம் கூடிற்று.

தோழர் எம். நடேசன் தலைமைவகித்தார் தலைவர் நாட்டிற்கு வேண்டிய கல்வி எது என்பதுபற்றியும், சங்க செக்ரட்டரி பி. எஸ். ரெங்கநாதன் புராண இதிகாசம் என்பது பற்றியும் தோழர் பி. ஜே. ஜி. ராஜன் நாட்டிற்கு தற்காலம் வேண்டியது எது என்பது பற்றியும் பி. எஸ். தங்கராஜன் அவர்கள பெண்கள் முன்னேற்றம் என்பது பற்றியும் முறையே வெகு ஆர்வமுடன் பேசினார்கள் பின்னர் தலைவர் முடிவுரை கூறப்பட்டு கூட்டம் இரவு 8மணிக்குக்கூட்டம் கலைந்தது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

கீழூரல்.

சமுகசீர்திருத்தசங்கம்.

டை சங்கத்தினரவில் 13-1-33ல் அதன் மாதாந்திரக் கூட்டம் நடைபெற்றது. அதற்குத் தோழர். தே. முத்தையா அவர்கள் தலைமைவகித்தார். அச்சயம் சில முக்கிய தீர்மானங்கள் நிறைவேறியது. ஒரு நிருபர்.

பகுத்தறிவு (அல்லது) கத்தோலிக்க குரு "ஜீன் மெஸ்லியரின்" மரணசாசனம்.

மொழிபெயர்ப்பாளர் தோழர் S. குருசாமி B. A.]

(14)

(முன் தொடர்ச்சி)

54. இல்லை; ஒரு அறிவுள்ள ஜீவனால் உலகம் ஆளப்படவே இல்லை.

ஒரு காரணத்தை அதன் பலன்களால்தான் நிர்ணயிக்க வேண்டுமென்று பகுத்தறிவின் தர்க்க ஞாயம் கூறும். ஒரு விஷயமானது நன்மையும், உபயோகமுள்ளதும், சௌக்கியமானதுமான பலன்களை எப்போதும் செய்து கொண்டிருந்தாலொழிய அதை நன்மையின் சொரூபமென்று புகழ முடியாது. சில சமயங்களில் நன்மையையும், சில சமயங்களில் தீமையையும் செய்துகொண்டிருக்கும் ஒரு காரணத்தை நன்மையையும், தீமையையும் கலந்தது என்று தான் சொல்லவேண்டும். ஆனால் மதங்களின் தர்க்கமானது இதை ஒத்துக்கொள்வதில்லை. அவைகள் சொல்வதென்னவென்றால், இயற்கைத்தோற்றங்களையும், அவைகளின் பலாபலன்களையும் பார்த்தால், இவைகளுக்கெல்லாம் காரணமாய் நன்மையே சொரூபமான ஒரு காரணம் இருக்கவேண்டுமென்றும், அக்காரணம் தான் கடவுள் என்று ருசுவாகிறதென்றும் சொல்லுகின்றன. இந்த உலகமானது கெடுதிகளே நிறைந்ததாயிருந்தும், அடிக்கடி குழப்பங்களுமே நிகழ்ந்துகொண்டிருந்தும், மக்கள் ஒவ்வொரு நிமிஷமும் அழுத்தப்பட்டு, நசுக்கப்பட்டுக்கொண்டிருக்கும் பொழுதுங்கூட, இவைகளுக்கெல்லாம் காரணமாயிருப்பது, அழிக்க முடியாத தயாபரமான ஒரு காரணம் என்பதை நம்பவேண்டுமாம்! இதையும் அநேக மக்கள் நம்புகிறார்கள்! —இல்லை! — நம்புவதாகப் பாசாங்கு செய்கிறார்கள்!!

இவ்வுலகில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஒவ்வொரு விஷயமும், இவ்வுலகமானது ஒரு அறிவுள்ள ஜீவனால் ஆளப்படவில்லை என்பதை வெகு தெளிவாய்க்காட்டும். ஒரு ஜீவன் அறிவுள்ளதா? இல்லையா என்பது, அந்த ஜீவன் தனனுடைய எண்ணத்தை நிறைவேற்றுவதற்கு உபயோகிக்கும் சாதனங்களால் தான நிர்ணயிக்க வேண்டும். மனித சமூகத்தை சந்தோஷப்படுத்துவதே கடவுளின லட்சியம் என்று சொல்லப்படுகிறது. ஆனால நடைமுறையிலோ உணர்ச்சியுள்ள சகல ஜீவன்களும் அதிகமாய்க் கஷ்டப்பட்டும், சிறிது சுகத்தை மாத்திரம் அனுபவித்தும் கடைசியாய் மடிந்து போவதையுமே காண்கிறோம். மனித வாழ்க்கை இன்பமும, துன்பமும் கலந்ததாகவே இருக்கிறது. எங்கு பார்த்தாலும் நன்மையும், தீமையும் கலந்தே இருக்கிறது. ஒழுங்கு இருக்கும் இடத்தில் குழப்பம் வந்து விடுகிறது. பிறப்பு வந்ததும் அழிவும் அத்துடன் கூடவே வந்து விடுகிறது. கடவுளுடைய செயல்களெல்லாம் அற்புதங்கள்; அவைகளையெல்லாம் என்னால் அறிய முடியாது என்று சொல்வீர்களானால்; நான் சொல்லும் பதில்—ஆமாம்; கடவுள் அறிவுள்ளவர் எனபதை என்னால் சொல்ல முடியாது என்பதே.

55. கடவுள் மாற்றமுடியாதவரா?

கடவுள் மாற்ற முடியாதவரென்று சொல்லுகிறீர்கள்! ஆனால் அவருடைய ராஜ்யமாகிய இவ்வுலகில் சகல வஸ்துக்களும் சதா மாறிக்கொண்டே இருப்பதற்குக் காரணம் என்னவென்று உங்களைக்கேட்கிறேன். கண்ணுக்குத் தெரியாத இந்த அரசனுடைய [கடவுள்] ராஜ்யம் தவிர வேறு எந்த தேசமாவது அடிக்கடி இவ்வளவு குரூரமான புரட்சிகளுக்கு ஆளாகிக்கொண்டிருப்பதைப் பார்த்திருக்கிறீர்களா? இவ்விதம் ஒவ்வொரு அணுவும் சதா மாறிக்கொண்டிருந்தும் இவ்வுலகத்தை ஆள்பவன் மாற்ற முடியாதவனென்றும், அழியாதவனென்றும் நாம் எப்படிச் சொல்ல முடியும்? என்னுடைய இனமாகிய மனித சமூகத்திற்கு மோக்ஷமாய் இருக்கும் விஷயங்களையெல்லாம் அப்படியே மாற்றாமல் நிலைத்திருக்கும்படி செய்யக்கூடிய கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதைப்பற்றி நான் நினைக்கவேண்டுமானால், என்னுடைய இனத்தை சதா கஷ்டங்களிலேயே அழுத்திக்கொண்டிருப்பதற்குக் காரணஸ்தனான ஒரு கடவுளைப்பற்றி நான் என்ன நினைக்கவேண்டும்? ஆனால் நீங்கள சொல்லுவீர்கள்,—நாம் செய்யும் பாவங்களெல்லாம் அவர் நம்மைத் தண்டிக்கும்படி செய்கின்றன— என்பீர்கள். அப்படியானால் நான் சொல்வேன்,—கடவுள் மாறுபவரல்ல; ஏனெனில் மனிதனுடைய பாவங்களெல்லாம் அவருடைய குணத்தை (தயாபரன்) மாற்றும்படி செய்து விடுகின்றனவல்லவா?—சில சமயங்களில் கோபமடைவதும், சில சமயங்களில் சாந்தமடைவதுமான ஒரு ஜீவனை மாறாதது என்று எப்படிச்சொல்ல முடியும் என்பதை நீங்களே யோசித்துப்பாருங்கள்.

56. ஒன்றையும் மாற்றமுடியாத கடவுள் ஒன்று உண்டா?

உலகம் எப்படி இருக்க முடியுமோ அப்படித்தானிருக்கிறது. உணர்ச்சியுள்ள ஜீவன்கள் அத்தனையும் உலகில் சுகதுக்கங்களை அனுபவித்துக் கொண்டுதானிருக்கின்றன. அதாவது, சில சமயங்களில் திருப்திகரமாகவும், சிலசமயங்களில் அதிருப்திகரமாகவும் அவைகள் இயங்கிக்கொண்டுதானிருக்கின்றன. இந்தக்காரியங்கள் அவசியமாய் நடந்துதான் ஆகவேண்டும். அவைகள் இயங்குவதற்குக்காரணம், அவைகளுக்குள்ள இயற்கையான குணங்களேயாகும். இந்தக் காரியங்கள் என்னுடைய இயற்கைக்குத்தக்க மாதிரி என்னைத் திருப்திப் படுத்த வேண்டும் அல்லது அதிருப்திப் படுத்த வேண்டும். இதே இயற்கைதான் சில விஷயங்களை சண்டையிட்டுத் தடுத்து ஒதுக்கும்படியான எண்ணத்தையும், எனக்குள் உண்டாகும்படி செய்கிறது. அவசியம் காரணமாக ஒவ்வொரு நிகழ்ச்சியும் நடக்கக்கூடிய ஒரு உலகத்தில், ஒன்றையும் திருத்தி அமைக்க முடியாத ஒரு கடவுள், —எல்லாம் சுயேச்சையாகவே நடந்து கொண்டிருக்கும்படி விட்டுக்கொண்டிருக்கும் கடவுள்— அவசியம் என்பதை வாசகர்களே சொல்லட்டும். இயற்கைக்குள்ளே தானும் கட்டுப்பட்டு, அதன் சட்டங்களைச் சிறிதுகூட மாற்றுவதற்கு வல்லமை இல்லாத ஒரு கடவுளை செவிட்டுக்கடவுள் என்று தான் சொல்லவேண்டும். எனக்குத்திருப்தியளிக்கக்கூடியதாயும், எனக்குச் சந்தோஷத்தைத்தரக்கூடியதாயும் உள்ள விஷயங்களை ஆயிரத்துக்கு ஒன்றுகூட செய்ய இஷ்டமில்லாத, செய்ய முடியாத ஒரு கடவுள்,—தயாபரராயிருந்தாலென்ன? அளவிட முடியாதவராயிருந்தாலென்ன? வேறு எப்படி இருந்தாலுமென்ன? அவரைப்பற்றி நான் ஏன் கவலையெடுத்துக்கொள்ளவேண்டும்? என்னுடைய சந்தோஷத்தைப்பற்றியும் சிறிதுகூட கவலை கொள்ளாத கடவுள், அன்பே சொரூபமென்றால் அதை நான் எப்படி நம்ப முடியும்? எனக்கு அளவு கடந்த நன்மையைச் செய்ய வல்லமையுள்ளதாகச் சொல்லப்படும் ஒரு கடவுள், எனக்கு அவைகளில் ஒரு சிறுபாகத்தைக்கூடச் செய்ய இஷ்டமில்லையென்றால்,—அந்தக் கடவுளால், எனக்கு என்ன பிரயோஜனம் ஏற்படக்கூடும்?

[தொடரும்]

"தமிழ்நாடு"

தமிழ்நாடு பத்திரிகை 25—1—33 தேதி தலையங்கத்தில் தோழர்கள் ரங்கையர் டாக்டர், சுப்பராயன் மசோதாக்களைப் பற்றி எழுதுகையில் குறிப்பிடுவதாவது:—

"பிரஸ்தாப சட்டங்கள் தீண்டாமையை பரி பூரணமாக ஒழித்து விடாது என்ற போதிலும் கூடிய சீக்கிரத்தில் ஏற்படவிருக்கும் சமத்துவப் புரட்சிக்கு ரங்கையா முயற்சியானது பெரும் ஆதரவாக அமையும் என்பதில் சந்தேகமில்லை ஜாதி வேற்றுமைகளை நிலைநிறுத்தி உயர்வு தாழ்வு என்ற அக்கிரமங்களை பாதுகாக்கவேண்டுமென்பது தென்னாட்டு பிராமணர்களுடைய லக்ஷியம் என்பதை நாம் விளக்கிக் காட்ட வேண்டியதில்லை. தீண்டாமை விலக்கிற்கும் சர்வ ஜன ஆலய தரிசனத்துக்கும் எதிர் பிரசாரம் செய்கின்றவர்கள் அனைவரும் தமிழ்நாட்டு பிராமணர்கள் என்பது பகிரங்க ரகசியமாகும்."

திருமண அழைப்பு.

30-1-33 திங்கள் கிழமை காலை 9 மணிக்கு கோவை, துடியலூர் ரஸ்தாவில் 27-லக்கமிட்ட எனது இல்லத்தில் தோழர் மடப்பள்ளி அவர்கள் குமாரர் தோழர் சின்னப்பாவுக்கும் தோழர் எம். சின்னுசாமி அவர்கள் சகோதரர் தோழர் எம். சின்னுராஜு குமாரத்தி தோழர் சிங்காரம்மாளுக்கும், ஈரோடு, "குடி அரசு" ஆசிரியர் தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெறும் என எம். சின்னுசாமி அழைக்கிறார்கள். தோழர்கள் நல்வரவை கோவை ஜில்லா போர்டு உபதலைவர் தோழர் எஸ். என். பொன்னையா அவர்களும் கோவை முனிசிபல் உதவி சேர்மென் தோழர் ஆர். கே. வெங்கடாசலம் அவர்களும் எதிர் பார்க்கிறார்கள்.

ஜார்ஜ் பர்னட்ஷா.

அமெரிக்கா சொற்பொழிவு.

(சென்ற வாரத்தொடர்ச்சி)

ஆகலால் இம்மாதிரியான கொலைக் குற்றங்களுக்கு 4-அல்லது 5-வருஷ சாதாரண காவல் தண்டனையே விதிப்பார்கள். மற்றும் குற்றவாளிகளிடம் அவர்கள் வெகு சலுகை காட்டுவார்கள். இவைகளையெல்லாம் கேட்பதற்கு உங்களுக்கு இப்போது அதிசயமாய்த் தோன்றலாம்.

பொது உடமைக்கொள்கை என்றால் என்ன? என்பதை நன்றாய் அறிந்தபிறகுதான் சோவியத்ஆட்சியாகிய குடிகளின் பஞ்சாயத்துஆட்சி நோக்கம் இன்னது என்று நன்றாய் அறிய முடியும். அதன் பிறகுஅக்கொள்கை அமெரிக்கா சிக்காகோ அல்லது பிட்ஸ்பரோ, அல்லது டிட்ரோய்ட் முதலிய இடங்களில் அதிசயிக்கும்படி பரவுவதும் உங்களுக்குத் தெரியும். ஒன்று இரண்டு நாளில் அது தழைத்து ஓங்குவதும் விளங்கும். இன்றைய தினம் உங்கள் கண்களுக்கு ரஷியா "இந்திரலோக"மாக இருக்கும் என்று எண்ணிவிடாதீர்கள். ரஷியா உலகில் ஒரு பெரிய தேசம். அதை ஒழுங்குபடுத்திவிடுவது என்பது சுலபமான காரியம் அல்ல. ஏனெனில் ஸார் சக்கரவர்த்தி காலத்தில் அத்தேசம் இருந்த ஏழ்மை நிலையையும் மக்களின் அறியாமையையும், காட்டு மிராண்டி நிலைமையையும் அறிந்தவர்கள் இந்த 14 வருஷ காலத்திற்குள் அவ்வளவு தூரம் தரித்திரத்தையும் அறியாமையையும் அடியோடு அந்நாட்டைவிட்டு நீக்கிவிட முடியுமா? என்பதை யோசித்துப்பாருங்கள்.

ரஷியா 80 லட்சம் சதுரமைல் விஸ்தீர்ணமுடைய பெரிய தேசம். அமெரிக்கா ஐக்கிய நாட்டைவிட 40 லட்சம் சதுரமைல் பெரிய தேசம். அதாவதுஅதைவிட இரட்டிப்பு மடங்குஅகண்ட தேசமாகும் ரஷியாவின்ஜனத்தொகை 16 கோடியாகும். அமெரிக்க ஜனத்தொகையைவிட 175 லட்சம் ஜனங்களதிகம். ஆதலால் அந்நாட்டில் இன்னமும்கூட பட்டினியும், அறியாமையும், அநாகரீகமும் இருக்கலாம். ஆனபோதிலும் மற்ற தேசத்தார்களைப்போல் ரஷியர்கள் தேசியம், தேசபக்தி என்னும் பேரால் சுயநலத்தையும், பேராசையையும் பிரதானமாய்க்கொண்ட மிருகத்தனமான யுத்தமுறைக்கு ஆதரவளித்து யுத்த முஸ்தீப்புகளை தயாரிப்பதற்காக நாட்டுச்செல்வங்களைப் பாழாக்கி, மக்களுக்கு துன்பத்தையும், தரித்திரக்கஷ்டத்தையும் உண்டாக்கியும், அதன் பயனாய் தொழிலாளிகளிடம் அதிக வேலை வாங்கவும், குறைந்த கூலி கொடுக்கவுமான கொடுமைகள் செய்யாமல் பொதுவுடமைக் கொள்கைகளை வெற்றி முரசுடன் நடத்திக்கொண்டும், நிலையாக முன்னேறிக்கொண்டும் இருப்பது காணப்படுகின்றதல்லவா?

ஆனால் நீங்கள் ரஷ்யாவில் உள்ள கெடுதி என்ன என்பதைப்பார்க்க அவ்வளவு தூரம் போகவேண்டியதில்லை. உங்கள் நாட்டில் உள்ள கெடுதிகளேதான் அங்கும் இருக்கலாமேயொழிய உங்கள் நாட்டில இல்லாத கெடுதி ஒன்றும் அங்கு காண முடியாது ஆகையால் அதற்காக உங்கள் தேசத்தைவிட்டு ரஷியாபோகவேண்டியதில்லை. மற்றபடி நீங்கள் அமெரிக்காவின் பொருளாதார நிலை என்னும் கப்பலானது உலகப் பொருளாதார நெருக்கடி என்னும் புயல் காற்றால் தாக்குண்டு முழுகிப்போகும் நிலைமையில் இருக்கும் காலத்தில் ரஷியப் பொருளாதார நிலை என்னும் கப்பல் எவ்வித ஆட்டமும், அசைவும் இல்லாமல் சுகமே ரஷியக்கரை சேர்ந்திருக்கும் பெருமையின் காட்சியைப்பார்க்க வேண்டுமானால் நீங்கள் அங்கு செல்லுங்கள். உங்கள் நாட்டு மக்கள் அடைந்துவரும் கஷ்டங்களுக்குக் காரணம் உங்கள் தலைவர்களின் முட்டாள் தனமான நிர்வாகத்தினாலும், பொதுநலங்களைஇழிவானதும்அயோக்கியத்தனமானதுமான சுயநலங்களுக்கு பயன்படுத்திக் கொண்டதாலும் ஒவ்வொருவரும் தாங்கள் மாத்திரம் மேன்மை அடைந்தால்போதும் என்று கருதிய அற்ப குணத்தாலும் ஏற்பட்ட கொடுமைகளை, இயற்கையாய் ஏற்பட்டது என்று கருதி இருக்கும் முட்டாள் தனத்தை விட்டுவிட்டு அங்குசெல்லுங்கள். ரஷியர்கள் இவ்வித கெட்ட குணங்களையும், பேராசை, சுயநலம், சோம்பேரி வாழ்க்கை ஆகிய இழிகுணங்களையும் விட்டவர்கள் என்பதை நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். ஆகையால் அவைகளை எப்படி ஒழித்தார்கள் என்பதையும் நீங்கள் பார்க்க ஆசைப்படலாம்.

ரஷியர்களால் ஆகக்கூடிய காரியம் உங்களாலும் ஆகக்கூடும். நீங்கள் ஒரு சமயம் உங்களால் முடியாது என்று எண்ணலாம். ஆனால் கண்டிப்பாய் உங்களால் முடியும். சிறைக்குள் இருக்கும் ஒரு கைதி அதன் கதவுகள் திறந்து கிடப்பதை அறியாமல் ஜன்னல் கம்பிகளை தகரத் துண்டுகளால் அறுத்துவெளிவரமுயற்சித்துக்கொண்டிருப்பதுபோல் உங்கள் முயர்ச்சி இருக்கிறது.

உங்கள் வாழ்நாள் முழுவதும் விடுதலை பெற உண்மையான வழியறியாமல் இப்படித்தான் அடைபட்டிருக்கக்கூடும். ஆனால் உங்கள்பிள்ளைகள் உங்களைப்போன்றே வகையறியா சோம்பேரிகளாக இல்லாமல், உலக விடுதலை நாகரீகப் போட்டியில் ரஷியர்களைவிட முன் செல்லக்கூடிய வேக முடையவர்களாய் இருப்பார்கள் என்றே எதிர்பார்க்கின்றேன்.

உங்களுக்கு மேன்மை உண்டாக வேண்டுமென்று வாழ்த்தி உங்களிடமிருந்து தற்காலம் விடைபெற்றுக் கொள்ளுகிறேன்.

ஏழைகள் கண்விழித்தால் என்ன கதியாகும்?

(உ. க.)

உலகில் அப்போதைக்கப்போது அநேக கட்சி பேதங்கள் உண்டாகி, ஒன்றை ஒன்று வென்றும், தோல்வியடைந்தும், மறைந்தும் போயிருக்கின்றன. உதாரணமாக ஆஸ்திகம், நாஸ்திகம் முதலியன. ஆனால் உலகம் தோன்றிய நாள் முதல் ஏழை பணக்காரன் என இரு கட்சி பெரும் பிரிவாகி இன்று வரை பணக்காரன் கட்சி ஏழைக் கட்சியை அடிமையாக்கி முதன்மை ஸ்தானம் வகித்து வருகிறது. தேச சரித்திரத்தில் அப்போதைக்கப்போது வறுமையால் துன்புற்ற ஏழையின் கட்சி, பணக்காரக் கட்சியை தோல்வியுறச் செய்துதான் தலைதூக்கியதுபோல் தோன்றினாலும், அது வெறும் வெளித்தோற்றமாகவே காணப்பட்டு சொற்ப நாழிகைக்குள் ஏழையின் வெற்றி அடியோடு மறைந்து, செல்வவான்களது ஜெயக்கொடியே பறக்கலாயிற்று என்று காண்கிறோம். பணத்திமிரை அடக்கி நிரந்தரமான வெற்றிகொண்டு இன்புற்று வாழ்ந்த "வறுமையாளர்கள்" எத்தேசத்திலும் இருந்ததாக தேசசரித்திரங்களில் குறிப்பிடவில்லை.

ஆறாவது அறிவு பெற்ற ஒவ்வொரு மனிதனும் இதை ஆலோசித்து காரணமறிய முயலுகிறான். அவனது பகுத்தறிவு உண்மையை தெள்ளென எடுத்துக்காண்பிக்கிறது. ஆனால் அப்பகுத்தறிவின் ஆராய்ச்சியின் முடிவு—விடைவெளியானால் ஆமோதிப்பவர்கள் நூற்றுக்கு ஒருவர் இருவர் கிடைப்பது அரிதாயிருக்கிறது. ஆகவே பணக்காரன் ஏழை என இருவரது பாகுபாடுகண்டு இன்பதுன்பத்தின் காரணமும், விமோசனமும் கூறும் பகுத்தறிவின் சக்தி உலகில் உல்லங்கனம் செய்யப்பட்டு ஒளிமழுங்குகிறது. பகுத்தறிவை குருடாக்கி வைத்துக்கொண்டிருக்கும் எந்த சன சமூகமும் வறுமையும், துன்பமும், சதாகாலமும் அனுபவித்துக்கொண்டிருப்பது ஒரு அதிசயமாகுமா?

சமமான பூமியில் ஒரு பக்கம் சிறிதளவு உயர்ந்திருக்குமாயின் மறுபகுதி பெரும் பள்ளமாயிருப்பதைக் காண்கிறோம். அதுபோல உலக செல்வங்கள் ஒரு தனிமனிதனிடத்தில் அமோகமாக குவிந்து காணப்படில் எண்ணிறந்த மனிதர்கள் தமது பங்கான அச்செல்வங்களை இழந்து வறுமை நிலையில் ஆழ்ந்துகிடக்கின்றனர் என்று தெரிகிறோம். இந்நிலைமைக்கு என்றும் விமோசனம் தேட வழியின்றி உலகம், மதம், கடவுள், என்ற பெருங் கோட்டைக்குள் சிறையில் கிடக்கிறது.

ஒரு மனிதன் இன்ன மதத்தைச்சேர்ந்தவன் என அவனது பிறப்புரிமையால் வகுக்கப்படுகிறான். அவ்வாறு மதத்தால் வேறுபட்ட மனிதன் தன்னையும், தனது முழுப்பொறுப்பையும் அம்மதத்தைச்சார்ந்த கடவுளிடம் ஒப்படைக்கிறான். அவன் அசைவது, ஆடுவது முதலிய அல்பகாரியங்களும் கடவுளின் மந்திரஜாலக்காரியங்களாகப் பாவிக்கப்படுகிறது. கடவுளைப்பற்றிய கவலையும், எண்ணமும் பலப்பட்டு உறுதியாய் நிற்க நிற்க விஷயங்களைச் சிக்கறுத்து பக்குவப்படுத்தி இன்பந்தரும் பகுத்தறிவு நாளடைவில் அடியோடு நபும்சகத் தன்மையடைகிறது.

ஆகவே துன்பப்படும் மனிதன் துன்பத்தை விலக்கச் சக்தியற்று கடவுளிடம் அடைக்கலம் புகுந்து விமோசனமின்றித் தவிக்கிறான். சொற்ப புத்தியும், சுயநல நோக்கமும் உள்ள பணக்காரர்கள் மென்மேலும் பெருகி நிரந்தரமாக வாழ ஹேது உண்டாயிற்று. கடவுளைப்பற்றிய நினைவே அடியோடு நீக்கப்பட்டு சொந்த அறிவால் சிறிது நாழிகை

தொடர்ச்சி பக்கம் 13ம் பார்க்க.

ஈ. வெ. ரா. வுக்கு

கோவை முனிசிபல் சங்கத்தார் வாசித்த உபசாரப்பத்திரமும், பதிலும்.

தோழர் ஈ. வெ. ராமசாமிக்கு கோவை முனிசிபல் சங்கத்தாரால் வரவேற்பு உபசாரப் பத்திரம் வாசித்துக்கொடுக்க 22-1-33ல் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது. அந்தப்படியே தோழர் ஈ.வெ. ராமசாமி, அ. இராகவன் அவர்கள் ஈரோட்டிலிருந்து கோவை வந்து சேர்ந்தார்கள். சேர்மன் தோழர் சி. எஸ். ஆர். அவர்கள் வீட்டிலிருந்து மாலே 6 மணிக்கு முனிசிபல் ஆபீசுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். ஆபீசில் அநேகர் மேளவாத்தியங்களுடன் வரவேற்று மேல்மாடி கௌன்சில் ஹாலுக்கு அழைத்துச் செல்லப் பட்டார்கள். குறிப்பிட்ட நேரத்துக்கு முன்பதாகவே கௌன்சில் ஹால் நிறைந்துஇருபாரண்டாக்களிலுமாக சுமார் 500, 600 பேர்கள் வரை நிரம்பி விட்டார்கள். மற்றும் இடமில்லாத காரணத்தால் சுமார் 500 பேர்களுக்கு மேலாகவே கீழ் காம்பவுண்டுக்குள் நின்று கொண்டிருந்தார்கள். முன்னணியில் இருந்தவர்கள்:- தோழர்கள் ஆர். கே. ஷண்முகம், எம். எல். ஏ. வெரிவாடா செட்டியார், வி. எல். ஏ. செங்கோட்டையா, ஈப்பன் சக்கரபாணி செட்டியார் ஈ. என். வெங்கிட்ட பெருமாள் நாயுடு, ஆர். கே. வெங்கடாசலம், வைஸ் சேர்மென், வி. பழனிசாமி நாயுடு, சி. எம். இராமசந்திரம் செட்டியார், ஏ. டி. கிருஷ்ணசாமி முதலியார், ஏ. டி. இலக்ஷ்மணசாமி முதலியார், அப்துல்ரகீம்சாகிப், நஞ்சையா, எம். பரமேஸ்வரம் செட்டியார், சின்னமருதாசல பண்ணடி, ஆர். பத்மநாப நாயுடு, கே. பொன்னுசாமி முதலியார், டி. இராமசந்திரம செட்டியார், எஸ். சுடலேமுத்து பிள்ளே, கே. பழனிக்கவுண்டர், சி. வி. செல்வராஜுலு நாயுடு, சி. எஸ். பேரேய கவுண்டர், சி. ஐ. இராமசாமி முதலியார், வி. சுந்தரராஜ முதலியார், எம். திருநாவுக்கரசு முதலியார் முதலிய அநேக பிரமுகர்கள் வீற்றிருந்தார்கள். ஈ. வெ. ராவை ஆசனத்தமரும்படி கேட்டுக் கொண்டதும் கரகோஷத்தினிடையே ஈ. வெ. ரா ஆசனத்தமர்ந்தார். பிறகு சேர்மன் தோழர் சி. எஸ். இரத்தின சபாபதி முதலியார் அவர்கள் எழுந்து சில வார்த்தைகள் சொல்லி உபசாரப்பத்திரத்தைப்படித்தார். (அது மற்றொரு பக்கம் பார்க்க)

பிறகு அவ்வுபசாரப்பத்திரத்திற்கு பதில் சொல்லுவதற்காக தோழர் ஈ. வெ. ரா. எழுந்தவுடன் கரகோஷமும் ஆரவாரமும் எழுந்தன. பேச ஆரம்பித்தவுடன் நிசப்தமாய் இருந்தது.

ஈ. வெ. ரா. பேசியதாவது.

அன்பு கொண்ட நகரசபை தலேவரவர்களே! அங்கத்தினர்களே !! மற்றும் இங்குகூடியுள்ள தோழர்களே!!!

கோவை நகரசபையின் சார்பாக எனக்கு வாசித்தளித்த உபசாரப்பத்திரத்திற்கு நான் மிகுதியும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டவனேயாவேன். ஆனால் அவ்வுபசாரப் பத்திரத்தை அப்படியே ஏற்றுக் கொள்ளுகின்றேன் என்று சொல்லுவேனேயானல் நான் உண்மையற்ற புகழை ஏற்றுக் கொண்டவன் என்னும் குற்றத்திற்காளானவனுவேன். ஏனெனில் தீண்டாமை விலக்கிலும், பொதுநல சேவையிலும், அரசியலிலும், ஸ்தல ஸ்தாபனங்களிலும் நான் ஏதோ பெரிய வேலேகள் செய்திருப்பதாக உங்கள் உபசாரப் பத்திரத்தில் புகழ்ந்து இருக்கிறீர்கள். உண்மையில் பார்ப்போமானுல் அத்துறையில் பொது மக்களுக்கு என்ன காரியம் செய்திருக்கிறேன் என்றுஇன்று உங்கள் முன்னிலேயில் நான் சொல்லக் கூடும்?

தோழர்களே! இந்தியாவில் பார்ப்பனர்களும் படித்த கூட்டத்தாரும் செல்வவான்களுமாகிய ஊரார் சரீர உழைப்பில் வாழ்வதற்கென்றே உயிர் வாழும் கூட்டங்களே அப்படியே வைத்துக் கொண்டு தீண்டாதாருக்கு பாடுபட்டிருக்கின்றேன், ஏழைகளுக்கு பாடு பட்டிருக்கின்றேன், தொழிலாளிக்கு பாடுபட்டிருக்கின்றேன், என்று ஒருவர் ஒப்புக் கொள்ளுவதானல் அப்படிபட்ட அவர், நான் மாத்திரமல்ல மற்றும் எப்படிப்பட்ட தேச பக்தர் ஆனுலும், தேசீய வாதி ஆனுலும், தேசப் பாதுகாப்புக்காக தேச மக்களுக்காகவே உயிர் வாழ்கின்றேன் மூச்சு விடுகின்றேன் என்று சொல்லுபவர்களானுலும் அதில் ஏதாவது நாணயமோ உண்மையோ, அறிவுடைமையோ பலன் தரும் தன்மையோ இருக்க முடியுமா என்பதை யோசித்துப் பாருங்கள். பொதுநலசேவை என்பது புரட்டு.

நான் வெகுநாளேக்குமுன்பதாகவே (Social service is a humbug) சோஷியல் சர்விஸ் இஸ் ஏ ஹம்பக். அதாவது சமூக சேவை என்று சொல்வது முழுப் புரட்டு என்றும் அதன் கருத்து பணக்காரர்களேயும் முதலாளிகளேயும் சோம்பேரிகளேயும் காப்பாற்றக் கோட்டை கட்டுதல் என்றும் சொல்லி இருக்கிறேன். இந்த அபிப்பிராயம் எனது மேல் நாட்டு சுற்றுப் பிரயாணத்தில் முன்னிலும் அதிகமாய் பலப்பட்டது என்று தான் சொல்லுவேன். நான் ஸ்பெயினில் ஒரு பெண்ணினிடம் பேசிக் கொண்டிருக்கும் போது அந்தம்மாள் பேச்சு சந்தாப்பத்தில் என் வேலே என்ன என்று கேட்ட காலத்தில் நான் சாதாரணமுறையில் ஏதோ என்று லான பொது ஜன சேவை செய்கிறேன் என்றுசொன்னேன். அதற்கு உடனே அந்தம்மாள் "பொது ஜன சேவை என்பது முழுதும் பித்தலாட்டம் என்றே நாங்கள் கருதுகிறோம்" என்று சொன்னர்கள். பிறகு நமது இயக்க விஷயத்தை சொன்ன பிறகு ஒரு அளவில் அந்தம்மாள் சரி என்று சொன்னர்கள். நமது நாட்டு பொதுஜன சேவை என்பதை என்ன என்று சற்று யோசித்துப் பாருங்கள்.

தீண்டாமை விலக்கு.

தீண்டாமை விலக்கு என்றால் ஒருவனேதொட்டு விடுவதாலும்;கோயிலுக்குள் புகவிட்டுவிடுதாலும் தீண்டாமை விலகிப் போய் விட்டது என்று கற்பித்து, அந்தப்படியே இந்நாட்டு மக்களே நம்பச் செய்து, அவ்வளவு செய்தாலே போது மென்று சொல்லி அதற்கே பெரிய புரட்சி செய்ய வேண்டியதாய் ஏற்பாடு செய்து வைத்திருக்கிறோம். அப்படிச் சொல்லுகின்றவர்களேயே மகான்கள்—மகாத்மாக்கள்—பொது ஜன சேவைக்காரர்—தீண்டாமை விலக்கு வீரர்--வைக்கம் வீரர்--என்றெல்லாம் ஆக்கி விட்டோம்.

"கங்காதரா மாண்டாயோ என்ற ஒரு வண்ணாத்தி அழுகைக்குரல் அரசன்வீடுவரைஅழச்செய்து விட்டது" என்ற கதை போல் இந்த காரியமே இப்போது தேசீய சேவையாய்—பொது ஜன சேவையாய்—சுயராஜ்ய சேவையாய்—அன்னிய ஆட்சியை விரட்டி அடிக்கும் சேவையாய் ஆக்கப்பட்டு எங்கு பார்த்தாலும் இதே தப்பட்டை அடிக்கப் படுகின்றது. அது மாத்திரமல்லாமல் மக்கள் எல்லோராலும் அப்படியே கருதப்படுகின்றது. இதனல் எல்லாம், உண்மை தீண்டாமை எப்படி விலகும்? தீண்டாமை விலக்கு என்றால் தீண்டாதவனேத் தொடுவதும் அவனே "மோட்சத்திற்கு அனுப்ப" என்று கோவிலுக்குள் கொண்டு விடுவதும் தானு? என்று கேட்கின்றேன். ஒரு மனிதனுக்கு சாப்பாடும் உடையும், இடமும், கல்வியும்வேண்டுமா? மனிதனேத் தொடுவதும் "செத்த பிறகு அனுபவிப்பதுமான மோக்ஷமும்" வேண்டுமா? என்று கேட்கின்றேன்.

தொடவும் கோவிலுக்குள் போகவும் விடப்பட்டு விட்டால் அவனுக்கு உண்டியும், உடையும், இடமும், கல்வியும் கிடைத்துவிடும் என்று சிலர் சொல்ல வருவார்கள். அப்படியானல் இன்று தொடவும், கோவிலுக்குள் போகவும் உரிமையுடையவர்களும் ஆயிரக்கணக்கான வருஷங்களாய் அவற்றை அனுபவித்து வருபவர்களுமான மனிதர்கள் எல்லாம் இன்றுசோறும், துணியும்,குடிசையும், படிப்பும் உடையவர்களாய் இருக்கிறார்களா? என்பதை சிந்தித்துப்பாருங்கள். சோற்றுக்கும், துணிக்கும் வழியென்ன? என்று கேள்க்கும்போது கல்லில்போய் முட்டிக் கொள்ளக்கூட்டிவிட்டதால், அது பொதுநல சேவை ஆகுமா? ஜீவகாருண்யமாகுமா? சமதர்மமாகுமா? என்றுயோசித்துப்பாருங்கள். அல்லது ஏழைகள்படும் கஷ்டத்துக்குவழி என்ன என்று கேட்கும்போது ஒரு நாளேக்கு ஏதோ இரண்டு மூட்டை அரிசியை வேகவைத்துப்போட்டு தர்மத்துக்கு வந்து சாப்பிடுங்கள் என்று தண்டோரு அடித்துவிட்டால் ஏழைகளின் பசியாற்றிய சேவை ஆகிவிடுமா? என்று யோசித்துப்பாருங்கள். எனவே இப்படிப்பட்ட காரியங்களே நாணயமானதும் பயன்தரத்தக்கதும், அறிவுடைமையானதும் என்று எப்படிச் சொல்ல முடியும்?

அரசியல்

நமது சுயராஜ்ஜியப்புரட்டும், ஸ்தலசுயாட்சிப்புரட்டும் இப்படித்தானே இருக்கின்றது. சுயராஜ்ஜியமென்றால் யாருக்கு என்று யோசித்துப்பாருங்கள். நாளேவரும் சுயராஜ்ஜியத்தில் 100-க்கு 90 மக்களாய் உள்ள ஏழைகளுக்கு என்ன புதியவசதி ஏற்படப்போகின்றது? ஏழைகள், தொழிலாளிகள், கடன்காரர்கள், ஏழை விவசாயக்கூலிகளான படிப்பில்லாதவர்கள் முதலாகிய மக்களுக்கு முறையே பணக்காரன், முதலாளி, லேவாதேவி, பாங்கிக்காரன், லேச்சுவான், ஜமீன்தாரன், படித்த பார்ப்பனன் ஆகியவர்கள்தானே போய் பிரதிநிதிகளாக உட்காரப்போகின்றார்கள். தீண்டாதார்கள் என்பவர்கள் "இந்து மதத்தை விட்டுவிடுவோம், எங்களுக்கு தனிப்பிரதி நிதித்துவம் வேண்டும்" என்று கேட்டதின் பயனுய் சிறிது பிரதி நிதித்துவமாவது கிடைத்தது. கோவிலுக்குள் வாருங்கள் என்று சிலர் கூப்பிடுகின்றார்கள். மற்றபடி மேல்கண்ட வகுப்பாருக்கு என்ன பலன் கிடைத்தது? என்பதை சற்று யோசித்துப்பாருங்கள். அவர்கள் குறைகளே நீக்கிக்கொள்ள அரசியலில் எங்காவது எந்த சட்டசபைகளிலாவது இடமளிக்கப்பட்டிருக்கின்றதா? இதுபோல்தானே இன்று ஸ்தல சுயாட்சியும் இருந்து வருகின்றது.

முனிசிபல் கௌன்சிலிலோ, தாலூகா ஜில்லா போர்டுகளிலோ, பட்டக்காரர்களும், ஜமீன்தாரர்களும், வெள்ளியங்கிரிக்கவுண்டர்களும், ரத்தினசபாபதி முதலியார்களும், ஷண்முகஞ்செட்டியார்களும்,மற்றும் இது போன்றவர்களும்தான் எங்கும் போட்டிபோட்டு அவரவர்கள் "பெரியவீ

தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க.

குடி அரசு.

ஈரோடு 1933 ஜனவரிமீ 29-உ

இந்தியப் பெண்களுக்கு இடம்.

—:0:—

நளபாக அடுப்பும், சப்ர மஞ்சக்கட்டிலும் பிரசவ ஆஸ்பத்திரியுமா?

சென்னையில் கூடிய பெண்கள் சங்கத்தில், பெண்கள் நலனுக்கென்று, சில பெண்கள் கூடி, சில தீர்மானங்கள் செய்திருக்கிறார்கள் என்பதாகத் தெரிய வருகிறது. அவற்றின் ஒரு தீர்மானமானது இந்திய ஸ்திரீ ரத்தினங்கள் நளபாக அடுப்பும், சப்ர மஞ்சக்கட்டிலும், பிரசவ ஆஸ்பத்திரியும் தவிர வேறு இடத்திற்குத் தகுதியானவர்கள் அல்ல என்கின்ற மனப்பான்மையைக் காட்டுவதாய் இருக்கின்றது.

அதாவது,

"சிறுவர் பாடசாலைகளில் சிறுமிகளுக்கு அவசியமாக வேண்டப்படும் சங்கீதம், கோலாட்டம், பின்னல், குடித்தனசாஸ்திரம் இவைகளைப்போதிக்க வேண்டியதிருப்பதால் சிறுவர் பாடசாலைகளையும், சிறுமிகள் பாடசாலைகளையும் ஒன்றாகச் சேர்க்கக் கூடாது"

என்று தீர்மானித்திருக்கிறார்கள்.

இந்தியப் பெண்கள் தாம் ஐரோப்பிய நாடுகளிலுள்ள மிருகங்களை விட கேவலமான நிலையில் இருப்பதைப்பற்றி சிறிதாவது கவலையோ, வெட்கமோ அடைந்ததாகத் தெரியவில்லை. "கல்வியறிவுள்ள மேதாவிப்" பெண்களான ஸ்திரீ ரத்தினங்களைப்பற்றியே நாம் பேசுகின்றோம்.

இவர்கள் நிலையே இப்படியானால், பிள்ளை பெறும் யந்திரங்களானமற்ற 'பதிவிரதாரத்னங்களை'ப் பற்றிப்பேசவும் வேண்டுமா? மேல்நாட்டுப் பெண்களின் இன்றைய யோக்கியதையை எடுத்துக்கொண்டால் அவர்கள் எந்நாட்டு ஆண் பிள்ளைகளுடனும், எத்துறையிலும் போட்டி போடத்தகுந்த கல்வியும், தொழில் திறமையும் கொண்ட சக்தியையும் உடையவர்களாய் இருக்கிறார்களே ஒழிய இந்திய "ஸ்திரீ ரத்தினங்கள்" கோருகிற மாதிரி சங்கீதம், கோலாட்டம், பின்னல், குடும்ப சாஸ்திரங்கள் ஆகியவைகளைக் கற்று சீதையைப் போலவும், சந்திரமதியைப்போலவும், திருவள்ளுவர் பெண்ஜாதியான வாசுகியைப்போலவும், நளாயினியைப்போலவும் இருக்கத் தகுதியற்றவர்களாகவே இருப்பார்கள்- இருக்கிறார்கள்.

உதாரணமாக இதன் கீழ் உலகப் பிரசித்திபெற்று வாழ்கின்ற ஒரு 6, 7 பெண்களைப்பற்றி மாத்திரம் குறிப்பிடுகின்றோம்.

1. எலினார் மிச்சேல் (Eleanormitchell) என்கிற ஐரோப்பிய மாது ஒரு நிமிடத்துக்கு 1000 எழுத்துக்கள் டைப்பு அடிக்கக்கூடிய சக்தியோடு கடந்த ஐந்து வருஷ காலமாக உலகிற் சிறந்த டைப்பிஸ்டாக முதற் பரிசு பெற்று வருகிறார்.

2. மிஸ். ஆமிஜான்சன் (Amy Johnson) என்கின்ற ஐரோப்பிய மாது, இந்தியாவுக்கும், இங்கிலாந்துக்கும் ஆகாய விமானத்தில் அதிவேகமாய்ச் செல்லக்கூடிய கீர்த்திபெற்றிருக்கிறார்.

3. ஜார்ஜ் என்னும் செல்வப்பேர் வாய்ந்த ஜாயி கூப்பர் (Joycecooper) என்கிற ஒரு ஐரோப்பிய ஆங்கிலமாது தண்ணீரில் நீந்துவதில் ஆண்களைவிட கீர்த்தி பெற்றிருக்கிறார். அத்துடன் தன்னைப்போலவே நீந்துவதில் பேர்பெற்ற, ப்ரியன் இசன் (Brian Hession) என்கின்ற ஒரு ஆண் மகனையே மணக்கப்போவதாக உறுதிகொண்டிருக்கிறார்.

4 மிஸஸ் கார்நல் (Cornell) என்கிற மற்றொரு மாது, பெண்கள் சரீர அப்பியாச சங்கத்திற்கு காரியதரிசியாயிருந்து கொண்டு சர்வதேச சரீர அப்பியாச சங்க பந்தயங்களில் அதிக தூரம் தாண்டும் பந்தயத்தில் முதலாவதாக தாண்டி, முதல் பரிசு பெற்று அட்லாண்டா (Atalanta) "என்கின்ற தெய்வம்" போல் பிரக்கியாதி பெற்றிருக்கிறார்.

5. சோனியா ஹெனஜ் (Sonia Henje) என்கின்ற மற்றொரு மாது, உரை பனியின்மீது சரிந்து நடக்கும் ஒருவித பந்தயத்தில் உலகப் போட்டியில் வெற்றி பெற்ற (World Champin) உலக சமர்த்தியசாலி என்ற பட்டம் பெற்றிருக்கிறார்.

6. மிஸஸ் ஸ்டுவர்ட் (Stewart) என்கின்ற மாது மூன்று சக்கர மோட்டார் ஸைக்கிள் விடுவதில் உலகத்தில் அதிக வேகமாய் விட்டவர்களின் அளவையெல்லாம் மீறி 1930ல் ஒரு மணிக்கு 130 மைல் வேகத்தில் விட்டு வெற்றி பெற்றிருக்கிறார்.

7 பெட்டி கார்ஸ்டேர்ஸ் (Betty Carstairs) என்கின்ற மாது 400-டன் எடையுள்ள மோட்டார் படகை தண்ணீரில் செலுத்தி பெரும் பெரும் பந்தயங்களில் வெற்றி பெற்று "மோட்டார் படகுராணி" எனப்பெயர் பெற்றிருக்கிறார்.

இப்படி இன்னமும் அநேக பெண்களை பிரத்தியட்ச காட்சியாக இன்றும் ஐரோப்பாவில் காணலாம்.

துருக்கியில் (கோஷா) படுதாவில் இருக்கவேண்டிய ஒருமாது போலீஸ்இலாக்கா இன்ஸ்பெக்டர் ஜனரலாயும், மற்றொருமாது அன்னிய நாடுகளுக்குச் சென்று பேசும் பிரதிநிதியாகவும் இருக்கிறார்.

மற்றும் ரஷியா முதலிய தேசங்களில் ரயில்வே இஞ்சின் ஓட்டுதல், பெரிய யந்திரசாலைக்குத் தலைமை வகித்தல் மற்றும் வைத்திய இலாக்கா தலைமை அதிகாரியாயிருத்தல் முதலிய அநேக காரியங்கள் திறமையாய் நடத்துகிறார்கள். இந்திய "ஸ்திரீ ரத்தினங்கள்"-கடைந்தெடுத்த அடிமை ரத்தினங்களாயிருப்பதற்கு ஏற்ற சங்கீதம், கும்மி, கோலாட்டம், பின்னல், குடும்ப சாஸ்திரம்ஆகியவைபடிக்க ஏற்பாடு செய்யப்படுகிறார்கள். ஆதலால் தான் அவர்கள் ஆண் பிள்ளைகள் கூடயிருந்து படிக்கக் கூடாது என்னும் தீர்மானம் செய்திருக்கிறார்கள் போலும்! இதைப்பார்த்த யார் தான் வெட்கப்படாமல் இருப்பார்கள்.

ரஷிய தேசத்தின் ஜனத்தொகை 17 கோடி என்றால், 17 கோடி மக்களும் ஆண் பெண் அடங்க மனிதத்தன்மை பெற்ற மனிதர்களாகவே இருக்கிறார்கள். இவர்கள் யாவரும் அத்தேச எல்லாக் காரியங்களையும் கவனிக்க அருகதையுள்ளவர்களாகவும், ஆட்சி புரியச் சக்தியுடையவர்களாகவும் இருப்பதோடு, இவ்வளவு பேர்களின் "குடும்ப காரியங்களை" கவனிக்க ஆண்களும் பெண்களுமாய்ச் சேர்ந்து 100க்கு ஒருவரோ, இருவரோ மாத்திரம் பெண்ணோ, அல்லது ஆணோ குடும்ப சாஸ்திரம்படித்திருந்தால்போதும் என்கின்ற நிலையில்இருக்கிறார்கள்: மற்றவர்கள் சுதந்திர சாஸ்திரத்தில் தீரர்களாயிருக்கிறார்கள்.

இந்தியாவில் 34 கோடி மக்கள் இருந்தாலும் இவர்களில் பகுதியான 17 கோடி பேர்களான ஸ்திரீ ரத்தினங்கள் ஆடல், பாடல், குடும்ப சாஸ்திரம், கோலாட்டம், பின்னல் கும்மி கற்றவர்கள் என்று கழித்து விட்டால்மீதி எவ்வளவு என்று பாருங்கள்.

அன்றியும், இந்த ஆடல், பாடல், கும்மி, கோலாட்டம், குடும்பசாஸ்திரம் ஆகியவற்றில் வாழும் ஸ்திரீ ரத்தினங்கள் வயிற்றில் பிறக்க நேர்ந்த பிண்டங்களாகிய ஆண்களுக்குந்தான் எவ்வளவு யோக்கியதை இருக்க முடியும் என்று யோசித்துப்பாருங்கள்.

மேற்கண்ட ஸ்திரீ ரத்தினங்களின் ஆடல், பாடல்களுக்குத் தாளம் போடவும்: கோலாட்டத்திற்குக் கோல் சீவிக்கொடுக்கவும், குடும்ப சாஸ்திரத்து வித்தாயிருக்கவும் தவிர வேறு என்ன வேலைக்கு லாயக்குடையவர்கள் ஆவார்கள் என்பது நமக்கே விளங்கவில்லை. பெண்கள் முன்னேற்றத்திலும் கூட பார்ப்பனீயப்பேய்த் தன்மை புகுந்து நாட்டைப் பாழாக்குகின்றதென்றால் பிறகு இவர்களுக்கு வேறு என்ன தான் கதி என்பது நமக்கு விளங்கவில்லை. ஏனெனில் பச்சைப்பார்ப்பனீயத்தில்தான் பெண்களுக்கு இந்த யோக்கியதைகள் தறப்பிடிப்பட்டிருக்கின்றன.

நிற்க, கற்ப ஆட்சி கூடாதென்றும், கல்யாண ரத்து கூடாதென்றும் தீர்மானங்கள் செய்ததும், கூட இந்த ஸ்திரீ ரத்தினங்கள்தான் என்றால் இவர்களே கூடிய கூட்டங்களில், கும்மி, கோலாட்டம், ஆடல், பாடல், பின்னல் குடும்ப சாஸ்திரங்களுக்குத் தான் பெண்கள் லாயக்கு என்று தீர்மானிப்பதில் அதிசயம் ஏதும் இருப்பதாக நமக்குக் காணமுடியவில்லை.

அன்றியும், ஆண் பிள்ளைகளுடன் பெண் பிள்ளைகள் சேர்ந்து படிக்கக்கூடாது என்பதின் கருத்தும் நமக்கு விளங்கவில்லை. ஒரு சமயம் ஆண்களுடன் பெண்கள் சேர்ந்து படிப்பதால்—பழகுவதால், பெண்கள் மீது ஆண்களுக்கு உள்ள குருட்டு மோகம் குறைந்து விடுமோ என்னமோ என்கின்ற பயம் காரணமாய் இருந்தாலும் இருக்கலாம் என்றுதான் எண்ணவேண்டியிருக்கின்றது.

ஆண்களுடன் பெண்கள் நெருங்கி பழகவும், சேர்ந்து படிக்கவும் இடம் கொடுத்து விட்டால் கண்டிப்பாய் இன்றைய தினம் பெண்களுக்கு உள்ளது போன்ற அடிமை நிலையான குடும்ப சாஸ்திரம் என்னும் அடுப்பூதும் நிலையும், குழந்தை விவசாயம் செய்யும் பண்ணை நிலையும், கும்மி, கோலாட்டம், ஆடல், பாடல்களால் அல்லாமல் ஜீவிக்க முடி

யாத நிலையும், அதாவது பெண்களுக்கு மேற்கண்டவைகளே முக்கியமானது என்கின்றதான நிலைகள் பறந்தே போய் விடும். ஒரு சமயம் மேல்கண்டவைகள் எல்லாம் கலைஞானமென்றும் அவைகள் இல்லாவிட்டால் மிருகங்களுக்குச்சமானமென்றும், சில சனுதன மேதாவிகள் சொல்லக் கூடும். அப்படியானால் அந்த அருங்குணங்கள் இல்லாத ஆண்கள் கலைஞானமற்ற—மிருகங்களுக்கு சமானமானவர்களா என்று அவர்களைப் பணிவுடன் கேட்கின்றோம்.

அப்படிக்கில்லாமல் ஒரு சமயம் ஆண்களுக்கேற்ற கலைவேறு, பெண்களுக்கேற்ற கலை வேறு என்று சொல்லுவார்களானால் அந்தப்புத்தியைத்தான் என்ன் செய்தாவது ஒழிக்க வேண்டும் என்று நாம் சொல்லுகின்றோம். அந்தப் புத்தியின் உணர்ச்சி தான் பெண்களை கும்மி, கோலாட்டம், ஆடல், பாடல், குடும்ப சாஸ்திரம் ஆகியவை வேண்டும் என்று சொல்லுகின்றது என்று சொல்லுகின்றோம்.

தவிர இந்தத் தீர்மானங்களை நிறைவேற்றிய ஸ்திரீ ரத்தினங்களில் நமக்குத் தெரிந்த, அறிமுகமுள்ள தோழர் பெண்களும் சிலர் இருந்திருக்கிறார்கள். அவர்களை ஒன்று கேட்கின்றோம். அதாவது அவர்களுடைய இன்றைய வாழ்க்கையில் கோலாட்டமும், சங்கீதமும், பின்னலும், குடும்ப சாஸ்திரமென்பதும் எவ்வளவு தூரம் பயன்படுகின்றது? அதனால் அவர்களது முன்னேற்றம் எவ்வளவு ஏற்பட்டிருக்கின்றது? என்று அறிய விரும்புகின்றோம்.

எனவே இந்த ஸ்திரீ ரத்தினங்கள் இந்தியப் பெண்களுக்கு அடிமைப்பட்ட மிருகத்திலும் கேவலமாய் சமயல் காரியாகவும், ஆயமாளாகவுமே இருந்து வரும் பெண்கள் ரத்தினங்களுக்கு அவர்களை மனித ரத்தினங்களாக்கஎப்படிபிரதிநிதிகளாயிருக்கதகுந்தவர்கள் என்பது தான் நமக்கு புரியாத விஷயமாயிருக்கின்றது.

சுயமரியாதையைப் பற்றி காந்தி அபிப்பிராயம்.

சென்றவாரம் வெளியான தினசரி பத்திரிகைகளில் தோழர் காந்தியவர்களால் கலப்புமணத்தையும்,சமபந்தி போஜனத்தையும் ஆதரிப்பதில்லை என்று எழுதப் பட்டிருக்கிறது. ஆனால் இந்த வாரம் வந்த தினசரிகளில் சுகாதார முறையில் தயாரிக்கப் பட்ட ஆகாரத்தையும் சுயமரியாதையை லட்சியமாய் கொண்டகலப்பு மணத்தையும் தான் ஆதரிப்பதாகச் சொன்னதாய் காணப்படுகின்றது.

இதைப் பார்க்கும் போது ஒரு கேள்வி புறப்படுகின்றது. அதாவது சமஜாதி மக்களால் சமைக்கப் பட்ட ஆகாரம் சம ஜாதிமக்களுடன் கூட இருந்து உண்ணும் ஆகாரம் ஆகியவைகள் சுகாதார முறைப்படி சமைக்கப் பட வேண்டிய அவசிய மில்லையா என்ற கேள்வி பிறக்கின்றது. ஒரு சமயம் இரண்டு வித மக்களுடனும் கலந்து உட்கார்ந்து உண்ணும் ஆகாரத்துக்கும் சுகாதாரமுறை பக்குவம் வேண்டுமானால் அதை இந்த சமயத்தில் தனியாய் குறிப்பிடக் காரணம் என்ன? என்கின்ற கேள்வி பிறக்கின்றது.

அது போலவே சுயஜாதி மணம் செய்து கொள்வதானாலும் சுயமரியாதை இலட்சியம் இருக்க வேண்டியது அவசியம் என்றால் கலப்பு மணத்தைப் பற்றிச் சொல்லும் போது மாத்திரம் சுயமரியாதை இலட்சியத்தைப் பற்றிக் கவலைப்படுவானேன்? என்கின்ற கேள்வியும் பிறக்கின்றது. ஒரு சமயம் கலப்பு மணம் இல்லாவிட்டால் திருமண விஷயத்தில் சுயமரியாதை இலட்சியம் தேவையில்லையோ என்கின்ற சந்தேகமும் பிறக்கின்றன.

எது எப்படி இருந்தாலும் கலப்பு மண விஷயத்திலாவது மக்களுக்கு சுயமரியாதை இலட்சியம் இருக்க வேண்டும் என்று தோழர் காந்தி ஒப்புக் கொண்டதைக் குறித்து நாம் மகிழ்ச்சியடையாமல் இருக்க முடியவில்லை.

மத்திய மாகாணம்.

மத்திய மாகாண அரசாங்கத்தார் சட்ட சபையில் கவர்ன்மெண்ட் செலவில் கட்டப்பட்ட ரஸ்தா, பாடசாலை, நந்தவனம், மார்க்கட்டு, சத்திரம், சுடுகாடு, நதி, கிணறு, குளம் முதலிய விடங்களில் ஜாதி வித்தியாசம் காட்டக்கூடாது. யாராவது தடுத்தால் அவர்களுக்கு 50 ரூபா வரை அபராதம் என்பதாக ஒரு சட்டம் நிறைவேற்றி இருக்கிறார்கள்.

வேண்டுகோள்.

முந்திய வாரங்களில் நமது வேண்டுகோளின்படி தெரிவிக்கப்பட்ட சுயமரியாதைக்கிளைச்சங்கங்கள் 46. அதற்குப்பின் வந்த சங்கங்கள் பின்வருமாறு:—

47. மகாதேவி, 48. பெரிய காஞ்சிபுரம், 49. தூத்துக்குடி, 50. சிவகாசி, 51. வாகனேரி, 52. பெருஞ்சாளிப் புதுப்பட்டி, 53. மன்னார்குடி, 54. இராசிபுரம், 55. அம்மனூர், 56. ஓமலூர், 57. கொன்னூர் மேலயம்பதி, 58. புதுப்பாளையம் (வடஆற்காடு ஜில்லா) 59. செந்துல், (கோலாலம்பூர்) 60. ரெட்டியார்பட்டி [திருநெல்வேலி ஜில்லா], 61. இருகூர், 62. எம். புதுப்பட்டி, 63. கும்பகோணம், 64. வதிரி [இலங்கை], 65. பூலம்பாடி, 66. குத்தம்பொருத்தானிருப்பு, 67. விருதுநகர் நாடார் பரிபாலன சங்கம், 68. சமதர்மசங்கம் விருதுநகர், 69. இளைஞர் சுயமரியாதை சங்கம் விருதுநகர், 70. அமெரிக்கன் சுயமரியாதைச் சங்கம் விருதுநகர்.

மற்றுமுள்ள சங்கங்களையும், புதுப்பிக்கப்பட்ட சங்கங்களையும், நிர்வாக சபை அங்கத்தினர்கள் பெயர்களையும் சீக்கிரம் தெரிவிக்க வேண்டுகிறோம்.

ஈரோடு முனிசிபாலிட்டி.

தீண்டாதார்களுக்கு தனிப்பள்ளிக்கூடம் வேண்டியதில்லை என்கின்ற தீர்மானம் 18 கௌன்சில் மெம்பர்களால் கை யெழுத்திடப்பட்டு அனுப்பப் பட்டது. அதைப் பற்றி சிறிது விவாதம் நடந்தது. என்றாலும் கடைசியில் முதலாவது இரண்டாவது வகுப்பு பிள்ளைகள் மிக சிறிய குழந்தைகளாய் இருப்பதால் அவர்கள் நடந்து வர முடியாது என்கின்ற காரணத்திற்காக அவர்களுக்கு மாத்திரம், அவர்கள் வசிக்கும் இடத்துக்கு சமீபத்தில் ஒரு பள்ளிக் கூடம் இருக்க அனுமதிக்கப்பட்டு, மற்ற 3, 4,5வது வகுப்பு பிள்ளைகளுக்குஏற்பட்டிருந்த வகுப்புகளை எடுத்து விடுவது என்று ஏக மனதாய் நிறைவேற்றப் பட்டது.

காந்தியின் தத்துவம்.

ஆல்பிரெட் வாட்சன் பேசியது.

தோழர் சர். ஆல்பிரெட் வாட்சன் பேசியதாவது:—

இப்போது இவ்வுலகிலேயே காந்திதான் மிகவும் பிற்போக்கான மனிதராவர். அவருடைய கொள்கையால் நடு மோசமான பிற்போக்கமான நிலைமை ஏற்பட்டிருப்பதுடன், அதனால் பாதி ஜனங்கள் பட்டினியாலும், பஞ்சத்தினாலும் பரிதவிக்கும் படி நேருமென்பதில் சந்தேகமில்லை. இந்தியாவிலுள்ள ஜமீன்தார்களும், மில் முதலாளிகளும் தங்க விஷ்டப்படி ஜனங்களைச் சுரண்டி ஆட்சி செய்யலாமென கனவு கண்டு வருகிறார்கள். அவர்களுடையகனவுதான் காந்தி கொள்கையின் அந்தரங்க தத்துவமாகும். வங்காளத்தில் விவசாயிகளை கஷ்டபடுத்தி பிழிந்து ஜமீன்தார்கள் நகரங்களில் வந்து தங்கள் ஆதிக்கத்தை செலுத்தி வருவதுடன், விவசாயிகளும் இயற்கையாக தலைவர் பதவிகளை வகிக்கும் உரிமையையும் மறுத்து வருகிறார்கள். எனவே இந்தியாவிலுள்ள ஓர் சில ஜமீன்தார்களிடமும் மில் முதலாளிகளிடமும் அதிகாரத்தை மாற்றும் ஆபத்தை தடுக்க, இந்தியர்களிடை கல்வி அதிகமாக பரவும்படி செய்ய வேண்டியது அவசியமாகும்.

(தோழர் காந்தி இந்தியாவில் முதலாளி தனத்தையே நாட்ட முயல்கின்றார் என நாம் கூறிக்கொண்டே வந்தோம். சிலர் ஏழைகளுக்காக உழைக்கின்றார் என்றார்கள் அவர்கள் இதை கவனிப்பார்களாக.)

தீண்டாதாருக்குத் தனிப் பள்ளிக்கூடம் வேண்டாம்.

ஆமதாபாத் முனிசிபாலிட்டியில் தீண்டப்படாதாருக்குத் தனிப்பள்ளிக்கூடம் வேண்டாமென்றும், தண்ணீர் விநியோகிப்பதில் தனி பிரிவுப் பாத்திரம் கூடாதென்றும், தாழ்த்தப் பட்டவர்களுக்கே பியூன் முதலிய உத்தியோகங்கள் கொடுக்கப் பட வேண்டும் என்றும் ஒரு தீண்டப் படாத மெம்பர் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்.

சுயமரியாதைப் பிரசாரம்.

சேலம் குகையில் மாரியம்மன் கோவிலுக்கு சமீபத்தில் 25-1-33உ மாலை தோழர் பவானிசிங் அவர்கள் தலைமையின் கீழ் தோழர்கள் எ. சித்தையா. எஸ். ராமநாதன் ஆர். நடேசன் இவர்கள் "சமூக சீர்திருத்தம்" என்பது பற்றி பேசினார்கள்

(ஒரு நிருபர்.)

கோவை உபசார பத்திரம்

ஈரோடு தோழர் ஈ. வே. இராமசாமி அவர்களுக்கு கோவை முனிசிபல் சங்கத்தார் அளித்த உபசாரப்பத்திரம்.

அன்பிற் சிறந்த பெரியோய்!

வருக, வருக. எங்கள் அழைப்புக் கிணங்கி அன்புடன் எம்மிடை விஜயம் செய்து எமக்கு மனமகிழ்ச்சியை அளித்த தங்களுக்கு உள்ளம் உவந்து நல்வரவு கூறுகிறோம்.

'பிறர் பொருட்டுழைத்துப் பெருக பேர் இன்பம்' (Serve and rejoice) என்பதையே கட்டளையாக் கொண்ட நாங்கள், பிறர் நலம் நாடி உழைத்தலையே பெருங்கடனாகக்கொண்டொழுகும் தங்களுக்கு மனம் உவந்தளிக்கும் இதனை ஏற்றுக்கொள்வீராக! பல்லாண்டுகட்கு முன்னர் தாங்கள் ஈரோடு நகரசபைக்குத் தலைவராக வீற்றிருந்து, அந்நகரின் பல்வகை நலனும்நாடிஉழைத்து வந்திருக்கின்றீர்கள்; பின்னர், நாட்டின் பெருநலன் கருதி அரசியற் றுறையில் இறங்கி, அருஞ்சமர் தொடங்கி, முன்னணியில் நின்று, அஞ்சா நெஞ்சுடன் ஆற்றிய தேசபக்திப் போரும், சுயநலம் ஒரு சிறிதும் கருதாது பொதுநலமே கருதிச் செய்த தங்களது தியாக குணமும், நம்மவர்களது மனதை முற்றிலும் கொள்ளை கொண்டு விட்டன. இம்மட்டேயோ, சமூக சீர்திருத்தம் செய்தலை மேற்கொண்டு உழைக்கத் தலைப்பட்டீர்கள். அதில் பல பெருந்தடைகள் உளவாயின; எனினும் "அடுக்கிவரினும் அழிவிலான் உற்ற இடுக்கண் இடுக்கட்படும்" என்னும் திருவள்ளுவர் வாக்கிற்கிணங்க, 'அசைவிலா ஊக்கம்' தங்கள்பால் அவை செல்லாவாயின. தங்களை ஆசிரியராகவும், பொறுப்பாளராகவும் கொண்டு, தங்கு தடையின்றி உலாவி, மக்களுக்குப் பகுத்தறிவையும், சுயமரியாதையையும் ஊட்டிவரும் "குடி அரசு" தங்களது உள்ளக்கிடக்கையை ஒளியாது காட்டும் பளிங்கே அன்றோ! தேசநன்மைக்காகவும், பொது ஜனசேவைக்காகவும் வாழ்நாளை அர்ப்பணம் செய்துள்ள தங்களை நம் நாடு என்றும் மறவாது.

நம் நாட்டின் நன்மையை முன்னிட்டு நாம் இன்றியமையாது செய்ய வேண்டிய சீர்திருத்தங்களும், கடைப்பிடித்து ஒழுகும் கடமைகளும் பலவுள. எனினும், முதலாவதாகத் தீண்டாமையை ஒழிக்க முற்பட வேண்டும். இஃதொரு பொல்லா நோய். இதனை அறவே ஒழித்தற்கு வேண்டுவன செய்தல் வேண்டும். இத்துறையிற் புகுந்த முதற் பெரும் வீரர் "வைக்கம் வீரர்" என்னும் தாங்களே யன்றோ? பொல்லாத இப்பெரு நோயின் அழிவே நம் நாட்டிற்கு என்று மழியாத ஆக்கமாம். இப்பெரு நோயை ஒழிக்கக் காலமும் இப்போது அநுகூலமாகவேஇருக்கின்றது. இத்தருணம் மக்கள் மனதைக்கவர்ந்துள்ள தங்களை யொத்த தலைவர்களது பொறுப்புச் சொல்லுந்தரத்தன்று.

"தேசாடனம் செய்தல் அறிவின் அபிவிர்த்திக்கு அடிப்படை" என்று கூறுவர் அறிஞர். ஆதலின், அறிவின் ஆக்கத்தில் சீரிய நோக்கம் கொண்ட தாங்கள், மேல் நாட்டில் யாத்திரை செய்து மீண்டுள்ளீர்கள். ஆங்காங்கு தாங்கள்கண்டதும், கேட்டதுமாகிய பல வேறு வகைப்பட்ட பொருள்களால் தங்களது இயற்கைப் பேரறிவு பொலிவு பெற்றிருக்குமன்றோ! அது, தாங்கள் நமது நாட்டின் நன்மையை நாடி உழைக்குங்கால் கைகொடுத்துதவும் என்று நம்புகிறோம்.

அதிமதி நுட்பமோடு அருங்கலை பயின்று, அந்நிய நாடுகளில் சென்று, செயற்கையறிவால் இயற்கையறிவையும் அரிதிற் பெருக்கிக் கொண்டு எம்மிடை மீண்ட தாங்கள், இன்னும் பற்பல ஆண்டு வாழ்ந்து, தாங்கள் அறிந்துள்ள உண்மைகளை மக்கட்குப் புகட்டி, அருந் தொண்டு ஆற்றி வருவீர்களாக! அதற்கு வேண்டற்பாலதான தேக பலமும் மனோதிடமும் மாசின்றிப் பெற்று விளக்கு வீராக!

இங்ஙனம் கோவை நகரபரிபாலன சபையார்.

சுயமரியாதைத் திருமணம்

தோழர்கள் அபிமன்னன்— நாகம்மாள் திருமணம்.

தோழர் ஆர். அன்னபூரணி தலைமை வகித்தார்.

உறையூர், தமிழ்நாட்டு புரோகித மறுப்புச்சங்கத்தினுதவியில், திருச்சி முனிசிபல் சத்திரத்தில் 22-1-33ந் தேதி ஞாயிறன்று நடைபெற்ற தோழர்கள் அபிமன்னன்· நாகம்மாள் ஆகிய தாழ்த்தப்பட்ட தோழர்களின் திருமணத்தை முன்னிட்டு தோழர்கள் அ இரத்தினசபாபதி ஆர். அன்னபூரணி ஆகியோர் 21-1-33சனியன்று காலையில் ஈரோட்டிலிருந்து புறப்பட்டு திருச்சிசென்று தோழர்கள் பரமசிவம் அபிமன்னன் முதலியோரால் ஸ்டேஷனில் வரவேற்கப்பட்டு, தோழர்கள் எஸ். நீலாவதி ராமசுப்ரமண்யம் அவர்களின் விருந்தினராயத்தாமதித்தனர்.

பொதுக்கூட்டங்கள்.

அன்று மாலை 4மணிக்கு தாழ்த்தப்பட்ட தோழர் ஒருவரின் இல்லத்தில் சிற்றுண்டிவிருந்து நடந்தது மேல் பொதுக்கூட்டமொன்றுகூட்டப்பட்டது. தோழர் கிருஷ்ணனால் கீதம் பாடப்பட்டன. அதில் பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட கத்தோலிக்கத்தோழர்கள் குழுமியிருந்தனர். பெண்டிரின் கூட்டமும் அதிகமாயிருந்தது, தோழர் அற்புதசாமியவர்களால் பிரரேபிக்கப்பட்டு ஆமோதிக்கப்பட்ட பின் தோழர் ஆர். அன்னபூரணி அக்கூட்டத்திற்குந்தலைமை வகித்து, தாழ்த்தப்பட்டாரின் சமூக முன்னேற்றம் பற்றி சொற்பெருக்காற்றினர். பின்னர் தோழர் இரத்தினசபாபதி, ஜாதிபேதங்களையும் மத பேதங்களையும் கண்டித்தும், தாழ்த்தப்பட்டாரின் விடுதலை பற்றியும் பேசினர். அதே மாலையில் மற்றொரு கூட்டத்திற்கும் செல்ல வேண்டியிருந்தமையின் தலைவரின் முடிவுரையுடன் அக்கூட்டம் முடிக்கப்பட்டது.

பின்னர் திருச்சிஆலமரத்துத் தெருவை வழங்குமிடத்திலுள்ள கத்தோலிக்கக்கோயிலின் முன்பாக மாபெருங்கூட்டமொன்று கூட்டப்பட்டது பிரசங்கமேடை பலவகைத் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. தாழ்த்தப்பட்ட கத்தோலிக்க ஆண் பெண்களும், ஆங்கிலோ இந்தியர்களும், இதர சுயமரியாதைத்தோழர்களுமாக சுமார் 500 பேர்களுக்கதிகமான மக்கள் குழுமியிருந்தனர். தோழர் கிருஷ்ணனும்மற்றோர் தோழருஞ்சுயமரியாதைக்கீதம் பாடிய பின் ஏற்கனவே பிரசுரமூலம் அறிவிக்கப்பட்டிருந்தபடி தோழர் ஆர். அன்னபூரணி தலைமை வகித்தார். அன்னோர் தனது முன்னுரையில் கிறிஸ்தவமதத்தில் ஜாதிபேதத்திற்கே இடமில்லையென்று கூறிக்கொள்ளப் பட்டும் கூடஅதிலுள்ள பல ஜாதிபேதங்களைக் கண்டித்தும், குறிப்பாக, தாழ்த்தப்பட்ட மக்கள்பால் அம்மதவாதிகளும் ஏனையோரும் காட்டும் பிற்போக்கான தன்மைகளையும் மிக்க பலமாய்க் கண்டித்துத் தனது முன்னுரையை நிகழ்த்தினர். பின்னர் தோழர்கள் எஸ் நீலாவதி, ஆர். இரத்தினசபாபதி, கே. வி. அழகர்சாமி ஆகியோர் அம்மதத்திலுள்ள ஊழல்களைக்கண்டித்தும், கிறிஸ்தவத் தாழ்த்தப்பட்ட மக்கள் கட்டுப்பாடாகக்கிளர்ச்சி செய்யவேண்டுமென்றும, கோவிலுள், (சாச்) பேதம் பாராட்டப்படுவதால் அவர்கள் ஏன் கோயில்களுக்குப்போகவேண்டும்என்றும் பேசினர்பின்னர்தலைவரின்முடிவுரைக்குப் பின் அனைவருக்கும் மாலைகள் சூட்டப்பட்டு சந்தோபசாரத்துடன் இரவு 9-30மணிக்குக்கூட்டம் கலைந்தது.

திருமணம்.

மறுநாள் 22-1-33 ஞாயிறன்று திருச்சி முனிசிபல் சத்திரத்திலுள்ள ஹாலில் ஏராளமான ஆண் பெண் மக்கள் குழுமியிருந்தனர். சரியாக 4-30.மணிக்கு மண மக்களான தோழர்கள் அபிமன்னன் நாகம்மாள் இருவரும் ஆசனத்தமர்ந்தனர். உறையூர் புரோகித மறுப்புச்சங்கக்காரியதரிசி தோழர் ச. ம. சி. பரமசிவம் அவர்கள் தோழர் ஆர். அன்னபூரணியாரை அறிமுகப்படுத்திவைத்து அவ்விழாவிற்குத் தலைமை வகிக்குமாறு பிரரேபிக்க, ஆமோதிக்கப்பட்டு தோழர்ஆர். அன்னபூரணிதலைமைவகித்து தனது முன்னுரையை நிகழ்த்தினர். அதில் தற்காலம் நடைபெறும் திருமணங்களிலுள்ள குறைகளை எடுத்துக் காட்டி பால்யமணம், பொருந்தாமணம், முதலியவற்றைக் கண்டித்த தோடு. சாரதாசட்ட விஷயத்தில் கவர்ன்மெண்டார்காட்டும் அசிரத்தையையும் பலமாகக்கண்டித்து, நம்நாட்டிற்குக் கலப்புமணங்களும், காதல்மணங்களும், கைமை மணங்களும் அவசியம் என்று குறிப்பிட்டார். பின்னர் மணமக்கள் பெருத்தகரகோஷத்திடையே மணமாலை மாற்றிக்கொண்டனர். திருச்சி வரகுனேரி ஆதிதிராவிட சங்கத்தாரால் மணமகனுக்கு ஓர் வாழ்த்துப்பத்திரம்படித்துக்கொடுக்கப்பட்டது.

ஹாலிலும் வெளிப்பக்கங்களிலும் மெத்தை ஜன்னல்களின் மீதுமாக ஜனங்கள் திரளாக இருந்தபடியாலும் மற்றும் பலர் கூட்டத்திற்கு வெளியில் நின்று கொண்டிருக்க ஏற்பட்டதாலும், அக்கூட்டத்தை வெளியில் கூட்டவேண்டுமாய்ப் பலர் விரும்பியபடி கட்டிடத்திற்குவெளியில் கூட்டப்பட்டது. அக்கூட்டத்தில் தோழர்கள் ஆர். இரத்தினசபாபதி, அ. பொன்னம்பலம், எஸ். விசாலாக்ஷி, எஸ். நீலாவதி, டி. வி. சோமசுந்தரம் கே. வி. அழகர்சாமிமுதலியோர் சொற்பெருக்காற்றினர்கள். இரவு 9மணிக்குவைபவம் இனிது முடிவுற்றது. அன்றிரவே தோழர்கள் சுப்பையா விசாலட்சி பொன்னம்பலம் ஆகியோர் 'காரைக்குடிக்கு மோட்டாரிலும், தோழர்கள் ஆர். இரத்தினசபாபதி அன்னபூரணி இரவு 11-30 மணிரயிலில் ஈரோட்டிற்கும் பிரயாண மானார்கள்

ஒரு நிருபர்.

இதுவும் தேச துரோகமா?

மீரத்சதி வழக்கில் கூறப்பட்ட தீர்ப்பை ஆட்சேபிக்க ஜனாப் குதுப் புதீன் ஆமதின் தலைமையின் கீழ் கல்கத்தாவில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அதில் மீரத் சதிவழக்கில் தண்டிக்கப் பட்டவர்களை நிபந்தனையில்லாமல் விடுதலை செய்ய வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன் பின் சிலர் பேசும் போது ஒருவர் இந்தியாவில் காந்தீயத்திற்கும் லெனின் கொள்கைக்குமே போராட்டம் நடைபெறுகிறது என்றார். இன்னொருவர் காங்கிரஸ் அரசாங்கத்தோடு ஒத்துழைக்கத்தயாராகி யிருக்கின்ற தென்றும், அவ்வொத்துழைப்பு ராஜி யேற்பட்டு விட்டால் காங்கிரஸ் போராடும் மனப்பான்மை யொழிந்து விடுமென்றும், அனால் லெனின் கொள்கை கடைசிவரையிலும் போராடி நிற்குமெனவும் கூறினர்.

(குமரன்)

[8-ம் பக்கத்தொடர்ச்சி.]

உலகத்தை நோக்கிச் சிந்திக்கும் எம்மனிதனுக்கும் "வறுமையின் காரணமும் அதை அறவே நீக்க உபாயமும்" தோன்றாமல் போகாது.

பணக்காரனின் செல்வ நிலைமையைக் கண்டு ஏழைகள் கோபங்கொண்டு தமது எல்லையை மீறி வலிமையைக் காண்பிக்க அவர்கள் மனம் தூண்டாதவாறு "ஏழைகளும் துன்பமனுபவிக்கின்றனர். பணக்காரர்களும் கஷ்டப்படுகின்றனர்" என்று (மழையால் உப்பு மூட்டைக்காரன் அழும் போது தேங்காய் மூட்டைக் காரனும் சேர்ந்து அழுதானும் என்றகதை போல) ஏழைகளோடு பணக்காரர்களும் துக்கம் கொண்டாடுகின்றனர். பிறர் ராஜ்ஜியமான ஆயிரக்கணக்கான வெளி நிலங்களைத் தமக்கொருவருக்கே பட்டா செய்து கொண்டு, டஜன் கணக்கில் நின்ற தண்டவாளப் பெட்டிகளில் தங்கக் கட்டிகளை நிரப்பி அழகு பார்த்து, உத்தியோகவிஷயத்தில் படிப்படியாய் உயர்ந்து சமஸ்தான திவான் வேலையில் இருக்கும் பிரபு "இன்னும் நாம் மகாராஜா ஆக முடியவில்லையே!" என்று துக்கப்படும் மேற்படி திவானினது விசனமும், "வயறு சோறு கண்டு மூன்று தினங்கள் ஆயின கல்லையும், மண்ணையும் தின்று ஜீவிக்கும்படி நமது வயறு அமையப்பெறவில்லையே!" என்று கையால் அடிவயிற்றைப் பிடித்துக் கொண்டு சுருண்டு படுத்திருக்கும் ஏழையின் வறுமைக் கொடுமையும் ஒரே சமமான துக்கம் என்று கூறி விட முடியுமா? லட்சக் கணக்கில் பொருளை வாரிச் செலவிட்டு உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை ஏராளமான பட்டாலும், வயிரக் கற்களாலும் அலங்கரித்துக் கொண்டு வெல்வெட்டு சோபாவில் சாய்ந்து பொழுது போக்காக கிளியோடு கொஞ்சிக்கொண்டு நிற்கும் சீமாட்டி "அதிகால கோஹினூர் வயிரம் தனதுபதக்கத்தில் வைத்து இழைக்கவில்லையே" என்று ஏங்கிக் கண்ணீர் விடும் துக்கமும்; மானத்தை காப்பாற்றி மறைக்க ஒரு சிறு துணி இல்லையே! காய்ச்சலும் குளிரும் தேகத்தைநடுக்குவித்து பிராணனை அணு அணுவாகப் போக்கிக் கொண்டிருக்கையில் ஈரமான இத்தரையில் எந்நேரம் படுத்திருப்பது? இப்பிராணன் விரைவில் போய் விடக்கூடாதா!" என்று ஓவெனக் கதறி அழும் ஏழைப் பெண்ணின் துயரமும் ஒரே சமமான கஷ்டந் தானா? இதுபோல எவ்வளவோ வித்தியாசங்களைக் கூறி பணக்காரர்களின் பணத் திமிரையும் அத்திமிரால் ஏழை படும்பாட்டையும் எடுத்துக் காட்டலாம்.

ஏழைகள் கண் விழித்தால் அந்தட்சணம் செல்வத்தால் கஷ்டமென்பதையே அது வரை கண்டறியாதவர்கள் தெருவில் நின்று தவிக்க நேரிடும். அவ்வளவு தூரம் தமது நிலைமையை செல்வந்தர்கள் கொண்டு போகாமல் பரந்த நோக்கத்தோடு ஏழைகளை நோக்குவார்களாக ஏழைகளை மிதிக்க தம்மைச் சுற்றி நிற்கும் பாதுகாப்பாளருக்கும், சேம பேரிகளுக்கும் தமது செல்வத்தை வாரி இறைப்பதை இனியாவது நிறுத்தட்டும். "ஏழை யழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும்" என்பது இதுவரை புத்தக நீதியாய் நின்றது கண்ட ஏழைகள் உண்மையிலேயே கூரிய வாளை கைக்கொண்டு பழமொழியை மெய்ப் படுத்தியதாக தற்கால சில தேச சரித்திரங்களில் காண்கிறோம். ஒவ்வொரு பணக்கார தேசமும் "ஏழைகள் பொறுமைக்கும் அளவு உண்டு" என்பதை உணர்ந்து, சகோதரத்துவத்தை நிலை நாட்டுவதற்கு நான் முன், நீ முன் என போட்டி போட்டிக் கொண்டு முன்னணிக்கு வருங் காலம் கூடிய சீக்கிரம் என எதிர் பார்க்கலாம்.

(9-ம் பக்கத்தொடர்ச்சி)

ட்டு"சொத்துகளைப்போல் பங்குபோட்டுக்கொள்ளுவதுபோல் தேர்தல்கள் நடக்கின்றனவேயொழிய உண்மையான ஏழை,கூலி,தொழிலாளி,பயிர் செய்பவன்போட்டி போடவோ வெற்றிபெறவோ முடிகின்றதா என்று பாருங்கள். சொத்தின் பேரிலும் படிப்பின் பேரிலும்தான் ஓட்டர் லிஸ்ட்டும், அம்பட்சகர் லிஸ்ட்டும் தயாரிக்கப்பட்டிருக்கிறதே தவிர சொத்தும், படிபபும் இல்லாத மக்கள் கதி என்ன? என்பதை யோசித்துப்பாருங்கள். தோழர்களே இந்த மாதிரியான பொது நல சேவை சுயராஜ்ஜிய சேவை,தேசிய சேவை,தீண்டாமை விலக்கு சேவை ஆகியவைகளால் என்ன காரியங்கள் ஆகப்போகின்றது என்றுகருதி இருக்கிறீர்கள். நான் யாருடைய மனதையும் நோகும்படி செய்வதற்காகப்பேசவில்லை. என்னுடைய பொது நல சேவையையும், தீண்டாமை விலக்கு வேலையையும், சிலாகித்து, சிலாகித்து திருப்பித் திருப்பி உபசாரப்பதில் எழுதிப்புகழ்ந்திருக்கிறீர்கள். நான் எப்படி அவைகளை ஒப்புக்கொள்ள முடியும். அதைக்கேட்டு நான் வெட்கப்படத்தானே வேண்டியிருக்கிறது. உண்மையான பொதுநல சேவையோ தீண்டாமை விலக்கு வேலை நான் என்ன செய்துவிட்டேன்? இப்போது ஏதோ செய்யவேண்டும் என்று கருதுகிறேன் என்றாலும் அதற்கு எவ்வளவு எதிர்ப்பு, எவ்வளவு தொல்லைகள் இருக்கின்றன என்று யோசித்துப்பாருங்கள். நான் செய்ய நினைக்கும்பொது ஜனசேவை தீண்டாமை விலக்கு வேலைஎன்பவை மதத்துரோகம், கடவுள் துரோகம், ஜாதித்துவேஷம், வகுப்புத்துவேஷம், தேசியத்துரோகம், ராஜத்துரோகம் என்றெல்லாம் ஆகிவிடுகின்றன. ஆகையால் இந்நிலையில் சுலபத்தில், உண்மையான பொதுநல சேவையும், தீண்டாமைவிலக்கு சேவையும், காரியத்தில் பயன்படும்படி செய்யமுடியும் என்று நான் நினைக்கவில்லை. பொது நல சேவை என்றால் என்ன? தீண்டாமை விலக்கு என்றால் என்ன? என்பதை மக்களுக்கு தெரியும்படி செய்தாலே போதும் என்று நினைக்கிறேன் அந்த வேலைதான் செய்யவேண்டியது முக்கிய கடமையாய் இருக்கிறது என்று கருதியிருக்கிறேன்.

இந்த வேலை இந்தியாவுக்கு மாத்திரம் அவசியம் என்று நான் கருதிவிடவில்லை. "தீண்டாமை" என்பது இல்லாத ஊரிலும், அன்னிய ஆட்சி என்பது இல்லாத ஊரிலும், ஏகாதிபத்தியமோ, சக்கரவர்த்தியோ, ராஜாக்களோ, இல்லாத ஊரிலும் இப்படித்தான் இருக்கிறது. "குபேரபட்டணம்" என்று சொல்லும் அமெரிக்காவிலும், சக்கரவர்த்தியை ஒழித்து சமதர்ம ஆட்சி நடத்தும் ஜர்மனியிலும், சொந்த தேச அரசர் ஆளும் இங்கிலாந்திலும், அரசரை விரட்டி அடித்த குடி அரசு நாடான ஸ்பெயினிலும்,இந்த கதிதான் இருக்கிறது. சில இடங்களில் ஒரு கட்டிலில் படுதிபடுக்கையை வாடகைக்கு விட்டு ஜீவிக்கவேண்டி இருக்கின்றன. வெரும் சகிக்க முடியாத பட்டினிக்காகவே பெண்கள்தெருக்களில்வந்து கையைப்பிடித்து இழுத்துக்கொண்டு போய்விபசாரித்தனம் செய்து ஜீவிக்கவேண்டி இருக்கின்றன.

இதற்கெல்லாம் காரணம் முதலாளிகளின் ஆட்சியே தவிர வேறு ஒன்றும் இல்லை என்றே உணருகிறேன்.

தோழர்களே! இவைகள் என் சொந்த அபிப்பிராயமே யொழிய தர்க்கித்து முடிவுகண்டு முடிந்த முடிவு என்று சொல்ல வரவில்லை. நான் பார்க்கும் கண்ணாடி துவேஷக்கண்ணாடியாய், பாரபட்சக்கண்ணாடியாய் இருக்கலாம். ஆகையால் நீங்கள் இவற்றை உங்கள் நடு நிலைக்கண்ணாடிகொண்டு பார்த்து உங்களுக்கு தோன்றியபடி நடவுங்கள் என்று சொல்லுவதோடு,மறுமுறையும் எனக்கு இவ்வித சந்தர்ப்பமளித்து ஊக்கமளித்ததற்காக உங்கள்எல்லோருக்கும் உங்கள் பிரதிநிதியாகிய கோவை முனிசிபல் அங்கத்தினர்களுக்கும் அவர்களது அக்கிராசனாதிபதி அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

தீண்டாமைக்கு சாவுமணி.

பம்பாய்.

பம்பாய் கவர்ன்மெண்டார் தீண்டாமை விஷயமாய் ஒரு சுற்றறிக்கை விடுத்திருக்கிறார்கள். அதாவது,

தீண்டாதார் கல்வி விஷயத்தில் மற்ற ஜாதி இந்துக்கள் என்பவர்களோடு சரிசமானமாய் இருந்து படிப்பதற்கு எவ்வித தடையும்இருக்கக்கூடாது. அவர்களும் சர்க்காருக்கு வரி கொடுப்பவர்களானதால் மற்ற எல்லோருக்கும் உள்ள உரிமைகளை அடைய அவர்களும் அருகர்களாவார்கள்.

தீண்டாதவர்களுடன் சரி சமமாக உட்கார்ந்து வாசிக்க இஷ்டமில்லாத பிள்ளைகளின் பெற்றோர்கள் தங்கள் சொந்த செலவில் வேறு பள்ளிக்கூடம் ஏற்பாடு செய்து கொள்ள வேண்டியது. இனி தாழ்ந்த வகுப்பார் என்பவர்களுக்கு கல்வி விஷயத்தில் எவ்வித அசௌகரியமும் இருக்கக் கூடாது என்று உத்திரவிட்டிருக்கிறார்கள்.

12-8-0ரூ-க்கு 5000 ரூ. பெறலாம்.

நாஷனல் இண்டியன் டொனேஷன் பண்ட்ஸ் ஆலப்புழை.

ஒவ்வொரு வருடத்திலும் 40000 ரூ. சன்மானங்கள்
1-ம் சன்மானம் 5000 ரூ. 2-ம் சன்மானம் 2000 ரூ.
மரணப்பண்டு 500 ரூபாய்வரை.

தமிழ் ஜில்லாக்களில் 50 ரூபாய் சம்பளத்தில் ஆற்கனைசிங் இன்ஸ்பெக்டர்களும் கமிஷன் ஏஜண்டுகளும் தேவை. ஸ்டாம்புடன் எழுதுங்கள்.

மானேஜிங் டைரக்டர்,

National Indian Insurance Co., Ltd., Alleppey.

கோயமுத்தூர் முனிசிபாலிடி.

கட்டாய இலவசக் கல்வித்திட்டம்.

17—1—33 தேதியின் 653 நெ. தீர்மானத்தில் அங்கீகாரம் செய்யப்பட்ட விளம்பரம்.

1930 வருஷம் 10 நெ. ஆக்டால் திருத்தப்பட்ட சென்னை டிஸ்ரிக்டு முனிசிபாலிட்டி 1920 வருஷம் 5வது ஆக்டு 78வது
பிரிவின் 3வது உட்பிரிவின்படி 1933 வருஷம் ஏப்ரல் மாதம் 1 தேதி முதல் சொத்துவரியை கீழே குறிப்பிட்ட வீதப்படியும், விகிதப்
படியும் விதிக்கலாமென்று கோயமுத்தூர் முனிசிபல் சங்கத்தார் உத்தேசித்திருப்பதால் இதுவிஷயமாயுள்ள எல்லா ஆக்ஷேபணைகளும்
10—3—33 தேதியிலாவது அதற்கு முன்பாவது முனிசிபல் ஆபீசில் சேர்ப்பிக்க வேண்டுமென்றும், அப்படி சேர்ப்பிக்கப்பட்ட ஆக்ஷே
பணைகளை 1933 வருஷம் மார்ச்சு மாதம் 17ம் தேதி அல்லது மற்ற எந்த தேதிக்கு ஷை விஷயத்தை ஆலோசனைக்கு சங்கத்தார் ஒத்தி
வைக்கிறார்களோ அந்தத்தேதியில் யோசிக்கப்படுமென்று இதனால் எல்லோருக்கும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(1) மேலே சொல்லிய ஆக்டினாலாவது வேறே யாதொரு சட்டத்தினாலாவது அவைகளின்படியாவது நிவாரணையாயிருக்கும்
கட்டிடங்களும் நிலங்களும் நீங்கலாக முனிசிபல் எல்லைக்குள்ளிருக்கும் சகல கட்டிடங்களுக்கும் நிலங்களுககும் அவைகளின் வருஷாந்
திர மதிப்பின் பேரில் 100க்கு 7 வீதமும் அரை வருஷ சொத்துவரி அதாவது,

(a) பொதுக்காரியங்களுக்கு மேலே சொல்லிய மதிப்பின் பேரில் 100க்கு 2½ வீதமும்,

(b) ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டுள்ள அல்லது இனி மேல் ஏற்படுத்தப்போகிற ஜலசர்ப்பரா சாக்கடை நீர்க்கால் கட்டுவேலை
கள்கட்டுவதற்காவது, பராமரிப்பதற்காவது, மராமத்து செய்வதற்காவது விஸ்தரிப்பதற்காவது சீர்திருத்துவதற்காவது சம்பந்தப்பட்ட
செலவுகளைசெய்வதற்காக தண்ணீர் சாக்கடை வரி மேற்சொல்லிய மதிப்பின் பேரில் 100க்கு 4½ வீதமும் இந்த 4½ விகிதத்தில் 100க்கு
4-ஜல சர்ப்பரா வேலைகளுக்கும் பாக்கி சாக்கடை நீர்க்கால் வேலைகளுக்கு உரியதாகும்.

(2) விவசாய சம்பந்தமான காரியங்களுக்கு மாத்திரமே உபயோகிக்கப்படாததும் கட்டடமில்லாமலாவது கட்டடத்தைச்
சேர்ந்தாவது இல்லாத நிலங்களுக்கு ஒவ்வொரு 80 சதுர கெஜ விஸ்தீரணத்திற்கும் அல்லது அதற்குக் குறைவாயுள்ள பாகவிஸ்தீரணத்
திற்கும் கீழ்க்கண்ட விபரப்படி அரை வருஷ சொத்துவரி அணா நான்கு (0—4—0) அதாவது,

(a) பொதுக்காரியங்களுக்கு வரி, 80 சதுர கெஜம் அல்லது அதற்கு குறைவாயுள்ள பாகத்திற்கு இரண்டணா (0—2—0)
வீதமும்,

(b) ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டுள்ள அல்லது இனி மேல் ஏற்படுத்தப்போகிற ஜலசர்ப்பரா சாக்கடை நீர்க்கால், கட்டு
வேலைகள் கட்டுவதற்காவது பராமரிப்பதற்காவது மராமத்து செய்வதற்காவது விஸ்தரிப்பதற்காவது சீர்திருத்துவதற்காவது சம்பந்தப்
பட்ட செலவுகளை செய்வதற்காகத் தண்ணீர் சாக்கடை வரி 80 சதுர கெஜம் அல்லது அதற்குக் குறைவாயுள்ள பாகத்திற்கு இரண்டணா
(0—2—0) வீதமும்,

(3) முனிசிபல் எல்லைக்குள் விவசாயத்திற்கு மாத்திரமே உபயோகிக்கும் நிலங்களின் வருஷ வாரி மதிப்பின் பேரில் பொதுக்
காரியங்களுக்காக அரை வருஷ சொத்துவரி 100க்கு 2½ வீதம்.

(4) இன்னும் கோயமுத்தூர் முனிசிபல் சங்கத்தார் தங்கள் 29—11—32 தேதியின 569 நெ. தீர்மானத்தில் பள்ளிக்கூடத்
திற்குப் போகும் பிராயமுள்ள எல்லாச் சிறுவர்களுக்கும சிறுமிகளுக்கும் மூலாதார இலவசக் கட்டாயக் கல்வித் திட்டத்தை அமுலுக்கு
கொண்டு வருவதற்காக முனிசிபல் எல்லை பூராவிலும் மூலாதாரக் கல்விச் சட்டத்தின் 34-வது பிரிவின்படி விதிக்கக் கூடிய கீழே கண்ட
வரியை 1—4—33 தேதியிலிருந்து வரி விதிப்பதற்காகவும் 1—6—33 தேதியிலிருந்து கட்டாயப்படிப்பு ஏற்படுத்தவும், ஆலோசனை
சபையிலுள்ள கவர்னர் அவர்களின் அனுமதியையும் கேட்கப்பட்டிருக்கிறது.

சொத்துவரி—கல்வி வரிக்காக அரை வருஷத்திற்கு முனிசிபல் எல்லைக்குள்ளிருக்கும் எல்லா கட்டிடங்களுக்கும் அவைகளின்
வருஷ மதிப்பின் பேரில் 10J க்கு ½ வீதம்.

தொழில் வரி—கல்வி வரிக்காக அரை வருஷத்திற்கு தொழில் வரியின் பேரில் 100க்கு 25 வீதம்.

முனிசிபல் ஆபீஸ், கோயமுத்தூர்.
17—1—33.

சி. எஸ். இரத்தினசபாபதி.
சேர்மன்.

வேண்டுகோள்.

1933ளு ஜனவரி-மீ 30-உ திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு கோவை விக்டோரியா டவுன் ஹாலில் தோழர் வி. வெரிவாடய்யா அவர்கள் தலைமையில் தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்களுக்கு கோவை சுயமரியாதை வாலிபர் சங்கத்தாரால் ஒரு வரவேற்பு உபசாரப்பத்திரம் வாசித்துக் கொடுப்பார்கள்.

அவ்வமயம் தோழர்கள் யாவரும் விஜயம் செய்ய வேணுமாய்க் கோருகிறேன் என ஷை சங்கத்தலைவர் தோழர் எ. ஆர். சிவானந்தம் எழுதுகிறார்.

சுயமரியாதைத் திருமணம்.

விருதுநகர் தோழர் அ. த. நாராயண நாடார், குமாரன் தோழர் தங்கப்பெருமாளுக்கும், சென்னை, ராயபுரம் பெ. பெரியசாமி நாடார் குமாரத்தி தோழர் ராசாத்தி அம்மாளுக்கும், ராயபுரம் நெ. 90. ஆதம்சாயபு தெருவில் 5-2-33 காலை 9மணிக்கு மேல் திருமணம் நடைபெறும்.

கோபி தாலூகா போர்டு

தோழர் கே. ஆர். சுப்பிரமணியக்கவுண்டர் தலைவராகவும், தாக்க நாய்க்கன்பாளையம் தோழர் டி. என். பெருமாள்கவுண்டர் அவர்கள் போட்டியின்றி உபதலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். (ஒரு நிருபர்.)

பவானி தாலூக போர்டு

கண்டிபாளையம் தோழர் முத்துசாமி பிள்ளை தலைவராகவும், பவானி, திருப்பூர், வடமலைபாளையம் தோழர் கவுண்டர் உபதலைவராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டார். ஒரு நிருபர்.

குஷ்டம்

வெண்குஷ்டம் · பத்து.

சமீபத்தில் எற்பட்டதாயிருந்தாலும்சரி, பரம்பரையாய் இருந்தாலும்சரி. அபாய இஞ்ஜக்ஷன் கிடையாது. 4- வாரங்களில் பூரணகுணம். வியாதி விபரங்களுடன் இங்கிலிஷில்எழுதவும்.

Post Box No- 11413
Calcutta- (k)

தென்மாப்பட்டு

வேண்டுகோள்.

தென்மாப்பட்டு, வைக்கம் வீரர் வாசகசாலையின், உபதலைவரும், பொதுஜன ஊழியருமான தோழர். மரு. வீர. கோவிந்தசாமி அவர்கள் தமது வீட்டாருடன் மனவருத்தங்கொண்டு 17-1-33 வெளியூர்சென்றுவிட்டதாக அறிகின்றோம்.

ஆதலால் அவர் எங்கிருப்பினும் தமது விலாசத்தை பாடசாலைக்கோ அல்லது வாசகசாலைக்கோ அறிவித்து, அனைவர்மனதையும் ஆற்ற வேண்டுமென்றுஷை வாசகசாலையார் எழுதுகிறார்கள்.

காரைக்குடி

சனாதனதர்மிகள் கூட்டம்.

12-1-33ல் சனாதனதர்மிகள் கூட்டம் ஒன்று நடந்தது. 10 அய்யங்கார்களும், 4 சாஸ்திரிகள் 2 குருக்கள் 4 கோவில் பரிசாரகர்கள், ஓதுவார் ஒருவர் ஆத்தங்குடி சிவநேசர் தோழர் கதிரேசன் செட்டியார் இவர்கள் தான் சனாதனதர்மிகளென்று கூறிக்கொண்டு கூட்டத்தை நடத்தினார்கள்.

அதுபோதுதோழர்கள். பொன்னம்பலனார், இ. சிவம், என். எஸ் கணபதி முதலியோர் கூட்டத்தில் கலந்து பல கேள்விகள் கேட்க, அவர்கள் பழக்கம், வழக்கம், கடவுள்வாக்கு; என்று கூறினார்கள். அடிக்கடி கூட்டத்தில் குழப்பம் உண்டாக, போலீஸ் வந்ததும் சனாதனதர்மிகள் கூட்டத்தைக் கலைக்கப்பட்டது.

(ஒரு நிருபர் எழுதுகிறார்)

கொழும்பு

கல்லிப்பட்டு பகுத்தறிவு அபிவிருத்தி சங்கம்.

9-1-33 இரவு 10 மணிக்கு சங்க அறையில் தோழர் எம். எஸ். சதாசிவம் அவர்களின் தலைமையில் கூடியது.

தோழர்கள் எம். துரைசாமி, பி. பெரியசாமி இவர்கள் "நாமும் நமது நாடும்" என்னும் விஷயமாய் சொற்பொழி வாற்றினார்கள். தலைவர் முடிவுரை கூறி பின கூட்டம் முடிந்தது ஒரு நிருபர் எழுதுகிறார்

மரணம்

அருப்புக்கோட்டை நாடார்குலவாலிபரும் நெசவுபயிற்சி சாலைக்கு தலைவருமான மு. நடராஜன் என்பவர் 14-1-33 தேதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு வைசூரியால் இறந்து போனார். அக்குடும்பதார்க்கு அனுதாபத்தை தெரிவித்துக் கொள்ளுகிறோம் என ஷை சாலையின் காரியதரிசி எழுதுகிறார்.

பொதுக்கூட்டம்.

நாளது 15-1-33 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு சேலம் செவ்வாய்ப்பேட்டை சுயமரியாதைச் சங்கத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஏராளமான மக்கள் விஜயம் செய்திருந்தனர். தோழர் சே. சிவபெருமாள் தலைமை வகித்தார். ஏற்காட்டிலிருந்து இங்கு விஜயம் செய்திருந்த திருவனந்தபுரம் தோழர் சுப்பராயன் அவர்கள் "சுயமரியாதை தோற்றம்" என்னும் பொருள் பற்றி வேதசாஸ்திர புராண இதிகாசங்களில் பல மேற்கோள்காட்டி மக்கள் மனதில் நன்கு பதியுமாறு பிரசங்கித்தார். அவரை தொடர்ந்து தோழர்கள் சே. குமாரசாமி ஏ. என். பாலு, பி. எஸ் துரைசாமி. ஏ சித்தையா முதலியவர்கள் பேசினார்கள். அக்கிராசனர் முன்னுரைக்குபின் தோழர். ஆர் எஸ் கந்தசாமியால் வந்தனம் கூறப்பட்டு கூட்டம் கலைந்ததென ஒரு நிருபர் எழுதுகிறார்.

பொதுக்கூட்டம்.

நாளது 14 1-33 சனிக்கிழமை மாலை 5-30 மணிக்கு, சேலம் டவுன் அரிசிபாளையம் மெயின் ரோட்டிலுள்ள கடலைக்களத்தில் சமதர்ம சங்கத்தின் ஆதரவில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. சுமார் 500 பேர்களுக்குமேல் விஜயம் செய்திருந்தனர் தோழர். ஏ. சிவநாராயணன் தலைமை வகித்தார். "சமதர்மமும், நமது கடமையும்" என்னும் பொருள் பற்றி தோழர்கள். ஏ. சித்தையாவும், ஆர். நடேசனும் சுமார்ஒன்றரை மணிநேரம் பிரசங்கம் செய்தார்கள். தோழர் பழனிசாமி அவர்களால் வந்தனம் கூறப்பட்டு இரவு 8 மணிக்குக்கூட்டம் கலைந்ததென ஒரு நிருபர் எழுதுகிறார்.

ஆனைமலையில், ஆதிதிராவிடருக்கு பாராட்டுக்கூட்டம்.

தோழர் எம். மாசாணி அவர்கள், அங்கத்தினராக ஆனைமலை பிர்க்காவில், போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டதைப் பாராட்ட ஏற்பட்ட, மகிழ்விழா 18-1-33ல் 3 மணிக்கு ஆனைமலை சுந்திரவிலாசமில்லில், தோழர் ஏ. இரங்கராம் எம். ஏ. அவர்கள் தலைமையில் வெகுவிமரிசையாக நடைபெற்றது. அச்சமயம், தோழர்கள் வி. கே. பழனிசாமிக்கவுண்டர் சி. என். நஞ்சப்பகவுண்டர் பொள்ளாச்சி தாசீல்தார் குட்டிகிருஷ்ணன் நாயர், பிர்க்காரிவினியூஇன்ஸ்பெக்டர், லோகநாதமுதலியார் மற்றும் உள்ளூர் பிரமுகர்கள் உள்பட விஜயம் செய்திருந்தனர். ஆரம்பத்தில் சிற்றுண்டி விழாவில், சமபந்தி போஜனம் நடந்தது. அதில் எல்லா பிரமுகர்களும் கலந்துகொண்டார்கள். சபைத்தலைவர் தோழர் ரங்கராம் அவர்கள் தோழர் மாசாமனி அவர்களுக்கு மாலை சூட்டினார். அதன்பின்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் மகிழ்ச்சிப்பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப்பட்டன.

தோழர் ஈ. வி. இரமசாமி, தோழர ஜெயராமன் தோழர எஸ். என். பொன்னேகவுண்டர், ஒய். எம். அன்சாரி சாகிப்பகதூர் முதலியோர்கள் எழுதிய கடிதங்களை வாசிக்கப்பட்டு, மாசானி அவர்கள் மறுமொழி கூறியபின் வந்தனோபசாரத்துடன் சபை கலைந்தது. அன்று காலையில் ஹரிஜனங்கள் 1000க்குமேல் அன்னமளிக்கப்பட்டது. இதன்றியும், சபை கலைந்தபின்னர், தோழர் வெங்கட்டராம் பாரதியால் ஹரிஜனங்களுக்கு புறத்தூய்மை, அகத்தூய்மை விஷயமாக உபந்நியாசம் செய்யப்பட்டது. ஒரு நிருபர்.

திருமயம்

1-1-33ல் சுயமரியாதைச் சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. அதற்கு நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அச்சங்கத்தைதோழர்கள் அ. பொன்னம்பலனார், பா. ஜீவானந்தம், ராமசுப்பையா, விசலாட்சி ஆகியவர்கள் 17-1-33ல் பார்வை இட்டார்கள்.

திருப்பத்தூர்

16-1-33 நாகப்பா பாடசாலை முன்புஒரு பொதுக் கூட்டம் தோழர் அ. பொன்னம்பலனார் அவர்கள் தலைமையில் நடை பெற்றது. மாணவர்களால் "சமதர்ம" பாட்டுகள் பாடப்பட்டபின் தோழர்கள் ப. ஜீவானந்தம், ராமசுப்பையா விசாலாட்கி, சி. முருகர், ஆகியவர்கள் "சுயமரியாதை இயக்கம்" தீண்டாமைக் கல்வி முதலியவைகளைப் பற்றிப் பேசினார்கள் தலைவர் முடிவுரைக்குப் பின் கூட்டம் கலைந்தது.

சிராவயல்

சமதர்மப் பிரசாரம்

15-1-33 ந்தேதி இரண்டு பொதுக் கூட்டங்கள் நடைபெற்றது. தோழர்கள் பா. ஜீவானந்தம், சி. முருகர், அ. பொன்னம்பலனார் ஆகியவர்கள் "சமதர்மம்" என்பது பற்றிப் பேசிய பின் கூட்டம் கலைந்தது. ஒரு நிருபர்.

சேலம்.

சுயமரியாதை சங்கம்

22-1-33 ஞாயிற்றுக் கிழமை மாலை 9 மணிக்கு செவ்வாய்ப்பேட்டை சுயமரியாதைச் சங்கத்தின் பார்க்கில் தோழர் சித்தையன் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் கூடியது. அதுசமயம் "தலைவர்விஜயம்" என்னும் விஷயத்தைப் பற்றி தோழர்களான எஸ். ராமநாதன் ஆர். நடேசன், ஏ. ஆர். பாலு; என். மருதாசலம் பி. எஸ். துரைசாமி முதலியவர்கள் பேசி இயக்க கொள்கைகளையும் பொது உடமை இலக்ஷியத்தின் அவசியத்தையும் தெளிவாக எடுத்துக் கூறினர். தலைவர் பின்னுரைக்குப் பின் வந்தனம் கூறப்பட்டு கூட்டம் கலைந்தது.

(ஒரு நிருபர்)

நோட்டீஸ்.

1933-34 வருஷத்தில் கோயமுத்தூர் முனிசிபல் சங்கத்தாருக்குப் பாத்தியப்பட்ட மார்க்கட்டுகள், வண்டிப்பேட்டை முதலியவைகளின் சுங்கம். வசூலிக்கும் பாத்தியதையும், குப்பை, கக்கூசு, எருவு டிப்போக்களிலிருந்து எருவுகளை எடுத்துக்கொள்ளும் சுதந்திரத்தையும், 1933 வருஷம் பிப்ரவரி மாதம் 20 தேதி திங்கட்கிழமை காலை 8-30 மணிக்கு கோயமுத்தூர் முனிசிபல் ஆபீசில் முனிசிபல் சங்கத்தாரால் ஏலம் போடப்படும்.

சி. எஸ். ரத்தினசபாபதி,
சேர்மென்.

முனிசிபல் ஆபீஸ்,
கோயமுத்தூர்,
24—1—1933.

"வெடி குண்டு"

தனிப்பிரதி விலை அரையணா

ஏஜண்டுகளுக்கு

மேல்நாட்டு விஞ்ஞான ஆராய்ச்சி கட்டுரைகளும், சமூக சமுதாய அரசியல் செய்திகளுடனும் அச்சமற்ற ஆணித்தரமான அபிப்பிராயங்களையும் கொண்டு கிரவுன் 1-க்கு 2 சைசில் விசித்திர படங்கள் போட்டு 12 பக்கம், ரேப்பருடன் பிரதி ஞாயிறு தோறும் மதுரையிலிருந்து வெளியிடும் "வெடி குண்டு" என்னும் தமிழ் வாரப்பத்திரிக்கைக்கு எல்லாவிடங்களிலும் விற்பதற்கு ஏஜண்டுகள் தேவை. தனிப்பிரதி விலை அரையணா. பிரதி ஒன்றுக்கு இரண்டு பைசா கமிஷன் கொடுக்கப்படும்; எத்தனை பிரதிகள் தேவையோ அத்தனை பிரதிகளின் நான்கு வாரத்திய தொகையை முன் பணமாக அனுப்பப்படாத ஏஜண்டுகளை பதிவு செய்து கொள்ளப்படமாட்டா. முன் பணம் வருடசந்தா ரூ இரண்டு. ஆறு மாதத்திற்கு ஒன்றேகால். வெளிநாடு வருஷசந்தா மூன்று.

A. S. ஆனந்தம்
மானேஜிங் எடிட்டர்
காரியாலயம் தெற்கு வாசல்
மதுரை.

(5ம் பக்கத் தொடர்ச்சி)

பதையும் நாம் நன்கறிவோம். நான்காவதான (ஜன சமூக) ஒற்றுமையைக் கிறிஸ்து மதக்கோட்பாடுகள் (Gospels) எவ்வாறு சிதைக்கச் செய்தன என்பதை இன்னும் அறிஞர் நன்கு ஆராய்ந்து தெளியாமலே இருக்கின்றனர். கிறிஸ்து மதக் கோவில் (The church) ஏசு நாதருடைய தாயாராகிய மேரி அம்மையாரைப் பாராட்டுகின்றதெனினும், ஏசு நாதர் என்ன கூறுகிறார்? அவருடைய வாக்கிலிருந்து மேரியம்மையாரைப் பற்றிய ஏதாவது ஒரு சில வார்த்தைகளாவது கூறப்பட்டதா? இல்லை. "பெண்ணே! உன்னால் எனக்கென்ன உபயோகம்" Woman, what have I to do with thee (St John II, 4) என்பதாக ஏசு கிறிஸ்து பெண்ணுலகத்தைப் பார்த்துக் கூறுவதிலிருந்து என்ன தெரிகின்றது? இன்னும் அவர் என்ன கூறுகின்றார்? "தகப்பனிடத்திலிருந்து மகனைப் பிரிக்கவும், தாயையும் மகனையும் வேறுபடுத்தவும், மருமகளுக்கும் மாமியாருக்கும் வேற்றுமை ஏற்படுத்தவுமே நான் அவதரித்திருக்கிறேன். அவரைத் தவிர ஏனைய தகப்பனையும் தாயையும் எவன் நேசிக்கின்றானோ அவன் அவரை அடைய மாட்டான்" (Matt X. 35 to 37.) என்பதாக ஏசு பறை சாற்றுவதிலிருந்து என்ன தெரிகின்றது? இயற்கையாக ஏற்பட்டுள்ள குடும்பப் பற்றுதல், மதத்தின் பெயரால் அழிக்கப்படுகின்றதென்பது நன்கு விளங்குகின்றதன்றோ! இக்காலத்தில்மேனாடுகளிலே ஜன சமுதாய வாழ்க்கை முறையில் பல கஷ்டங்கள் ஏற்பட்டு சஞ்சலமே எங்கு பார்த்தாலும் தலைவிரி கோலமாய் சஞ்சாரம் செய்வதற்குக் காரணம். கிறிஸ்து மதமே தவிர வேறு என்ன? தேசீய வாதிகளே! யோசித்துக் கூறுங்கள்.

9. இம்மாதிரியான ஆத்மஅநாத்ம அவிவேகத்தால் ஏற்பட்ட சுயநலக் கூற்றே, ஆத்மாவிற்கு, அழியாமை யெனும் சித்தாந்தத்தை சிருஷ்டி செய்து, அதற்கென ஒரு சுவர்க்க லோகமும், அதற்கு மாறுபட்ட கொள்கையை யுடையோருக்கு நரக லோகமும், சமயோசிதம் போல் மானஸ பூமியில் சிருஷ்டி செய்வதாயிற்று! இம்மாதிரியான நரகத்திற்கும் சுவர்க்கத்திற்கும் மாந்தரை அனுப்புவதற்கென ஏற்படுத்தப் பட்டுள்ள காரண காரியங்களை ஆராய்ந்தால் மிக்க விசித்திரமாகவே இருக்கின்றது. உதாரணமாக, ஒருவன் எத்தனை கெட்ட காரியங்களைச் செய்தவனாக இருப்பினும், அவன் சாகும் போது ஒரு பாதிரி (புரோஹிதரின்) பக்கத்திலிருந்து தண்ணீர் ஊற்றும் போது ஏதாவது சில (சிவ சிவ போன்ற) மந்திர வாக்கியங்களை உச்சரித்தபடி இறந்தால் உடனே தேவதூதர்கள் வந்து விடுவார்களாம், சுவர்க்க லோகத்தின் கதவு திறந்து கொடுக்குமாம், அவன் தேவ கணங்கள் புடை சூழ அளவிறந்த போகம் அனுபவிப்பானாம்! ஆனால், ஒருவன் எத்தனையோ நற்காரியங்களைச் செய்தவனாக இருப்பினும், பாதிரி கைத் தண்ணீர் கிடைக்கப் பெறாமல் திடீரென அகால மரணத் திற்குட்பட்டு மந்திர வாக்கியங்களை உச்சரிக்க சமயமேற்படாதவகையில் இறந்தானாகில், அவனுக்கு நரகம் தான் பிராப்தியாம், அவன் எமதூதர்களால் இழுத்தேகப் பட்டு பல வேதனைகளுக்கும் ஆட்பட வேண்டியதாம்!

இவ்வித அநியாய ஆபாச மோசக் கொள்கைகளைத் தற்காலத்திய பிராடெஸ்டண்ட்ஸ் கிறிஸ்துவர்களும், பைபிள் வேதத்தைப் புரட்டிப் பாராத நவீன கத்தோலிக் கிறிஸ்துவர்களும், ஆமோதிக்க மாட்டார்களென்பது உண்மையே. ஆனால், கிறிஸ்துமத சம்பிரதாயப் பிரகாரம் இதுவாஸ்தவமே. ஏன்? நாகரீக முன்னேற்றமடைந்துள்ள இந்நாளிலும் கூட மௌடீகக் கொள்கைகளைக் குரங்குப் பிடியாய்ப் பிடித்து வாதிப் போரையும் நாம் காணலாம்.

கிறிஸ்து மதத்தின் பயனாகத் தோன்றிய ஆத்மாவைப் பற்றிய சித்தாந்தத்தாலும், அதற்கெனச் சிருஷ்டிக்கப் பட்ட சுவர்க்க லோக சித்தாந்தத்தாலும் கிறிஸ்துவ உலகில் காணப்படும் ஆபாசக் கூற்றுகள் எண்ணிறந்தன. மெக்ஸிகோ, பெரு (Mexico, Peru) என்ற இடங்களிலிருந்த ஸ்பெயின் தேசக் கிறிஸ்துவர்கள் (Spaniards), அங்குள்ள இந்தியக்குழந்தையைப்பிடித்து தண்ணீர் தெளித்து (Baptism) உடனே அந்த இளைஞர்களைத் துப்பாக்கியால் சுட்டுச் சாகச் செய்து மகிழ்வார்களாம்! ஏன்?

அவ்வாறு ஞான தீர்த்தமிட்டு அவர்களைச் சாகச் செய்வதால், அக்குழந்தைகளைச் சுவர்க்க லோகத்திற்கு அனுப்புவதாக அம்மூடக் கிறிஸ்துவர்கள் நினைத்தார்கள். என்ன கொடுமை! இம்மடமைக்குக் காரணம் எது? மதமே யன்றோ மதப்பற்றுள்ள-மத வெறியில் மதி மயங்கியுள்ள-எவனும் அவர்களுடைய செயலைக் குற்றமெனக் கொள்ளவே மாட்டான். ஆனால் அறிவு விளக்கம் பெற்ற இக்காலத்தில் அவர்களது செயல் கண்டிக்கப்படுகின்றது. இதனால் என்ன விளங்குகின்றது? மாந்தர் தம் ஆத்மா அழியாதது என்பதாகக் கொண்ட மூடக்கொள்கையையே எண்ணிறந்த ஆபாசங்களுக்கு வித்தாக இருக்கின்றதென்பதும் தவிர, ஆத்மாவை தேகத்தினின்று பிரித்த அவிவேகமே அநேக ஞான நூல்களில் ஆபாசத்தைக் குவித்து வைக்க இடமளித்ததென்பதும் நன்றாக விளங்குகின்றதன்றோ? அறிஞர் இவற்றை நன்கு ஆராய்ந்து இவ்வித மூடப் பழக்க வழக்கங்களை அறவே ஒழித்து, ஆபாச சித்தாந்தங்களைத் தலையெடுக்காதபடி நிர்மூலமாக அழிப்பார்களாக.

நாகை சுயமரியாதைச் சங்கம்.

வாராந்திரக்கூட்டம்.

15-1-33ந்தேதி மாலை 6மணிக்கு சங்கத்தலைவர் தோழர் ஆர். வி. கோபால் தலைமையில் கூடியது. சுயமரியாதைக்கீதம் பாடியபின் "நமது சங்க வேலைத்திட்டம்" என்பது பற்றி தோழர்கள் எம். ஆர். பதி, எம். எஸ் ராஜகோபால், எ. கோவிந்தம் எம். கோவிந்தராஜலு கே. முருகேசன் முதலியவர்கள் பேசினார்கள். தலைவர் முடிவுரைகூற 9மணிக்கு கூட்டம் முடிந்தது.

நிர்வாகக்கூட்டம்.

18-1-33ந்தேதி மாலை சங்கக்கட்டிடத்தில் சங்கத்தலைவர் தலைமையில் கூடியது.

கீழ்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

நாகை தாலூக்காவிலுள்ள, சுயமரியாதைத் தோழர்கள் ஆங்காங்கே, கும்பகோண மகாமகத்திற்கு மக்கள் போவதால் ஏற்படும் தீங்கை விரிவாக எடுத்துக் கூறவேண்டுமென்பது.

ஒரு நிருபர்.

மகாதேவி. சுயமரியாதைச்சங்கம்.

22-1-33உ தோழர் பி. கே. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையின் கீழ் ஒரு கூட்டம் கூடியது. அது பொழுது நிர்வாகஸ்தர்களைத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

பின் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

(1) தோழர் கே. பி. சுப்பிரமணியம் அவர்கள் நிர்வாகத்தில் நடைபெற்றுவரும் தேசீய இலவச கலாசாலைக்கு 32, 33ம் வருடத்திற்கு கிராண்டு கொடுக்குமாறு திருச்சி கல்விக் கழகத்தாரைக் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

(2) ஈரோட்டில் நடைபெற்ற வேலைத்திட்டத்தின் தீர்மானங்களை இக்கூட்டம் ஒப்புக்கொள்ளுகின்றது.

ஒரு நிருபர்.

நாகர் கோவில். சுயமரியாதை இளைஞர் சங்கம்.

இச்சங்கத்தின் ஐந்தாவது பொதுக்கூட்டம் வெள்ளிக்கிழமை மாலை 5மணிக்கு கோட்டாறு சுயமரியாதை வாசிப்புசாலைக்கு சமீபத்தில் தோழர் ஆர். மாடசாமி அவர்கள் தலைமையின் கீழ்கூடியது. தலைவர் முன்னுரைகூறியபின் தோழர்களான வள்ளியம்மாள், லக்ஷ்மி பாஞ்சாலியம்மாள் ராம கிருஷ்ணன் முதலியோர்கள் "மதம்" தீண்டாமை, ஒற்றுமை, என்னும் பொருள் பற்றி சொற்பொழிவாற்றினார்கள். தலைவர் முடிவுரையுடன் காரியதரிசி வந்தனோபசாரம் கூற கூட்டம் 8மணிக்கு முடிவுற்றது. பின் தோழர் ஆர். மாடசாமி வீட்டில் ஒரு தேநீர் விருந்து நடைபெற்றது. ஒரு நிருபர்.

உங்கள்.
கண்ணையும்
காதையும்
கவனித்துக் கொள்ளுங்கள்

பூவிழல்!!

கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

செவிடு!!

பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கரையில்லை. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.

விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

"Sri" Works
Beadon St. Calcutta



புது வருஷ விற்பனை.

மிகவும் நம்பிக்கையுள்ளதும், விலை குறைந்ததுமான லீவர் கைக்கெடியாரங்கள். உறுதியான யந்திரங்களினால், நாகரீகமாய்ச் செய்யப்பட்டது. மிகக்குறைந்த விலை. புதிய சரக்கு. விலை ரூ. 3—0—0.
உருண்டை வடிவம் ,, 3—8—0.
முதல்தரம் ,, 4—8—0.

உடைக்க முடியாத லார் புரூப் லீவர் பாக்கெட் கடியாரம் 2¼, 3¼, 4¼. ஆபீஸ் கிளாக் பெரியது சைஸ் 19"×12" ரூ. 7-8-0.
,, 21 × 14 ரூ. 10-8-0.

கிளாக்கு தேவையுள்ளவர்கள் பக்கத்து ரயில்வே ஸ்டேஷனை எழுதி, ரூ. 3 அட்வான்ஸ் அனுப்பவேண்டும்.

ஒவ்வொரு பார்சலிலும், புதுவருட கேலண்டரும், டைரியும் இனமாய் அனுப்பப்படும். ஒரே தடவையில் 3 கடியாரம் வாங்குபவர்களுக்குத் தபால் செலவு இனம்!

Princely India Watch Co.,
P. Box 1. (Section 45) Calcutta.

[4-ம் பக்கத்தொடர்ச்சி.]

ய்கிறன் சகல பூதங்களிலும் ஆத்ம ஸ்வரூபமாய் உள்ள ஈசுவரனாகிய என்னை விட்டுவிட்டு முட்டாள் தனத்தினால் அர்ச்சையையார் தொழுகிறனோ அவன் செய்யும் பூஜை சாப்பாலிற்கொட்டிய நெய்யிற்கொப்பாம். ஓ! நிஷ்தோஷமானவனே! சகல பூதங்களுக்கும் அவமானம் விளையும்படியாக என்னை அர்ச்சையாகி உயர்ந்த பதார்த்தங்களைக் கொண்டு பூஜிப்பவனிடத்தில் நான் சந்தோஷமடையமாட்டேன்.

“அக்நிர்தேவோ த்விஜாதீநாம், முனிநாம் ஹிருதி தைவதம், ப்ரதிமாஸ்வப் ரபுத்தானும்; ஸர்வத்திர சமதர்சிந;

உத்திரகீதை.

இதன் பொருள்:— துவிஜர்களுக்கு தெய்வம் அக்கினியில், முனிவர்களுக்கு தெய்வம் இருதயத்தில், சமதிருஷ்டியுடையவர்களுக்கு தெய்வம் எங்குமென்று சொல்லப்படுகிறது. புராண இதிகாசங்களில் இப்படி சொல்லி இருப்பதோடு வேதத்துக்கு முக்கியமான தசோபநிடதமென்று சொல்லப்படும் “சாந்தோக்கியம், ஈசோபம், கடோபம், பிரசனோபம், பிரஹதாரண்யம், முண்டகம், தைதீரியம், கேனோபம், ஐதரேயம், கவுசிதகி போன்ற உபநிதங்களில் விக்கிரகாராதனைக்கு ஆதாரமில்லை.

சுமார்த்தர்களுக்கு விக்கிரகமில்லை

சுமார்த்த பிராமணர்களுக்கும், சங்கரமதத்திற்கும் விக்கிரகாராதனையே கிடையாது. இப்பொழுது நாட்டில் கோயிலின் பெயரால் சொல்லப்படும் தெய்வங்களின் பெயர்களும் வேதத்தில் காணப்படவில்லை. ஆகவே, கோவிலின் பெயரால் கிளர்ச்சி செய்துவரும் வைதீக மதத்தினரும், காந்தி மதத்தின்ரும் புத்தி தீக்ஷண்யமுள்ளவர்களே தவிர புத்தி குன்றிய பாமரத்தன்மை மிகுந்த மூடர்களல்ல. உலகம் போற்றும் உத்தமர் காந்தி. அவருடைய ஆத்ம சக்தியே எங்கும் வியாபித்திருக்கிறதென்று சொல்கிறார்கள். அவரைப்பின் பற்றுபவரெல்லாம் உலகமறிந்த அறிவாளிகள். அக்குழுபினரை எதிர்க்கும் சங்கராச்சாரிகள் மடாதிபதிகள், திவான்பகதூர்கள், ராவ்பகதூர்கள், மாஜி ஐகோர்ட் ஜட்ஜுகள், எம்.கே. ஆச்சாரி போன்றவர்கள் எல்லாம் புத்திசாலிகளே தவிர பாமரர்கள் அல்ல. இவர்களுக்கெல்லாம், பாவனார்த்தம், கல்சிலையிலும், மரசிலையிலும் செம்புச்சிலையிலுமிருக்க முடியாது. புத்தி குன்றியவர்களுக்கும், பாமரர்களுக்கும், மூடர்களுக்கும்தான் கல்சிலையிலும், மண்ணுருவத்திலும் தெய்வமிருப்பதாக சாஸ்திரம் சொல்லுகிறது. இதை காந்தி கோஷ்டியாரும், வைதீக கோஷ்டியாரும் கூர்ந்து நோக்கவேண்டும். ஆதிதிராவிடர்களை பாமரத்தன்மை மிகுந்த மூடர்களாதலால் அவர்களுக்கு ஆலயம் வேண்டுமென்று சொல்லலாம். அது சுத்தத்தவறு! ஏனென்றால் “பலமாக ஒரு கூட்டம்” வெகு நாளாகவே ஆதிதிராவிட சமூகத்தை மேலெழ வொட்டாமல் அடக்கி வைத்துக்கொண்டிருக்கிறார்களே தவிர அவர்கள் உழுது பயிரிடும் கிருஷிகள் பல தொழில் செய்யக்கூடியவர்கள். ஜனசமுதாயமே உண்டு ஜீவிப்பதற்கு உயிர் நாடியாய் இருப்பவர்கள். ஆகவே அவர்கள் புத்திசாலிகளே தவிர பாமரத்தன்மை மிகுந்த மூடர்கள் அல்ல. ஆனால் அவர்கள் வருமானத்தை ஒரு கூட்டம் கொள்ளை கொண்டிருப்பதினால் வருவாய் இல்லாத காரணத்தால் நாகரீகமற்றவர்களென்று சொல்லலாமே ஒழிய மூடர்களென்று சொல்ல முடியாது.

அயோக்கியர்களுக்கே கோயில்.

ஆகவே அவர்களுக்கும் கோயில் பிரவேசம் வேண்டுவதில்லை. ஆனால் கோயில் பிரவேசம் மேலே குறிப்பிட்ட சாஸ்திரப்படி யாருக்கு வேண்டுமென்பதை யோசித்தால், அயோக்கியர்களுக்கும், சோம்பேரிகளுக்கும், முடிச்சுமாறிகளுக்கும் தான் வேண்டும். இதற்கு ஆதாரம் வேண்டுமானால் கோயில்களின் விதிகளுக்கு அடிப்படையாக எழுதியிருக்கும் புராணங்களைப்பார்த்தாலே விளங்கும். அவைகளில் யோக்கியர்களுக்கு மோக்ஷம் கொடுத்ததாகவே கிடையாது. உதாரணமாக:—

குரு பத்தினியை சம்சர்க்கம் செய்த “அம்புலி” என்பவனுக்கும் “பாவப் பிராயசித்தம் செய்யப்பட்டிருக்கிறது.

திருநாகேஸ்வர புராணம்
27வது படலம்.

தாயைப் புணர்ந்ததோடு அக்காரியத்திற்கு இடையூருக விருந்த தகப்பனையும் கொன்ற அவந்திப்பிராமணன் என்ற மகா பாதகனுக்கு மோட்சம் கொடுக்கப் பட்டிருக்கிறது.

“திருவிளையாடல் புராணம்
மகாபாதகம் தீர்த்த படலம்.”

ஒரு கொடிய சண்டாளன்தாயைப் புணர்ந்ததை அறிந்த பெற்ற தகப்பன் தக்க புத்தி சொன்னதற்காக கொலை செய்து விட்டான். அவனுடைய சகோதரன் வந்து ஏன் இக்காரியத்தைச் செய்கிறாய் என்று கேட்டான். அவனையும் கொலை செய்து விட்டான் இப்பாவிப்பயலுக்கு முக்தி கொடுத்தானும் பரமசிவன்.

“திருவையாற்றுப் புராணம்.”

ஒரு பிராமணன் ராஜாவின் பிரதானியாக இருந்தான். அவன் செய்த கொடுந்துன்பங்கள் பல. அவன் இறந்ததும் நரகத்தில்விழுந்து கிடந்தான். அவனுடைய புத்திரன் திருக்குற்றாலத்தில் வந்து பிதாவை நோக்கி பிண்டம் வைத்துதர்ப்பணம் செய்தான். புத்திரன் அவ்வூரில் வந்து செய்ததற்காக நரகத்தில் கிடந்த அவன் தகப்பனை சொர்க்கத்துக்கு அனுப்பினனும் பரமசிவன்.

தாமிரபரணி மகத்துவம்.

இம்மாதிரியான புரட்டுகளும், போக்கிரித்தனங்களும், ஒவ்வொரு ஆலயத்துக்குரிய புராணங்களை எடுத்துக் கொண்டு எழுதுவதென்றால் ஏட்டிலடங்காது. ஆலயங்களில் நடக்கும் உத்சவாதிகளும் இழிதன்மையே பெரிதும் அடங்கி இருப்பதை பிரத்தியட்சமாய் பார்க்கலாம். இக்காரணங்களை எல்லாம் கொண்டுதான் ஆலயங்களை பகுத்தறிவுக்கு ஒத்த நிலையங்களாக செய்ய வேண்டுமென்று சுயமரியாதை இயக்கம் ஆதி முதல் சொல்லிக் கொண்டு வந்திருக்கிறது. சுயமரியாதை இயக்கம் சொல்வதற்காக ஒன்றும் செய்யாவிட்டாலும் சாஸ்திர நியதிக்காவது ஆலய தரிசனமென்பதை அடியோடு ஒழித்து ஆலயங்களை அறிவு நிலையங்களாகவும், அதன் சொத்துக்களை மக்கள் முன்னேற்றத்திற்காகவும் செய்வதற்கு காந்தீயமும் வைதீகமும் கவனம் செலுத்த வேண்டியது அவசியத்திலும் அவசியம்.

“எனக்கு விக்கிரக ஆராதனையில் சிறிதும் நம்பிக்கையில்லை ஜெபம் வேண்டாம், கோயில் சென்று தும்பிட வேண்டாம், சாம்பிராணி முதலியன செலவு செய்து பூஜை போட வேண்டாம், தாழ்த்தப் சட்டவர்களையும் தீண்டாதவரென்று கொடுமைப் படுத்தப் பட்டவர்களையும், நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த சரீரத்தால் வயல்களில் பாடுபட்டு உழைக்கின்ற ஏழைகளையும் பார் அவர்களை கவனிப்பதில் கடவுளைக் காண்.”

கவி, ரவீந்திரநாத் டாகூர்.

திண்டுக்கல்.

சமபந்தி போஜனம்.

23-12-33 காஸ்மாபாலிட்டன் கிளப்பில் சிரத்தா நந்தர் விழாவை பொட்டி தீண்டாமை விலக்குக் கூட்டமும் சமபந்தி போஜனமும் நடைபெற்றது.

ஒரு நிருபர்

ஆஸ்திக நாஸ்திக சம்வாதம்.

கடவுளைப்பற்றி தெள்ளத்தெளிய ஆராய்ந்து முடிவு கட்டும் ஓர் அறிய நூல். டிம்மி 170 பக்கம் கொண்டது.
பிரதி ஒன்றுக்கு விலை அணு. 0—6—0

நாஸ்திகன்

C. K. குப்புசாமி, சேலம் பட்டு ஜவுளி, பெரியகாஞ்சீபுரம்.

பண்டிட் ஆனந்தரின்,

அற்புத இயற்கை வைத்தியம்.

அநேக நோயாளர் அநேக மருந்துகளை பல நாள் அருந்தியும், நோய் நீங்காமல் துன்பமடைந்துக்கொண்டிருந்தவர்கள் கடைசியாக பண்டிட் ஆனந்தரின் அற்புத இயற்கை வைத்திய முறைகளால் நோய் நீங்கி நலமடைந்து வருகின்றார்கள்.

அநேக நோய்கள் அநேக டாக்டர்களால் ஆபரேஷன் செய்யவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்ட பின்னர் பண்டிட் ஆனந்தம் அவர்கள் ஆபரேஷன் இல்லாமல் இயற்கை வைத்தியத்தாலும், உள்ளுக்கு மருந்து கொடுப்பதாலும், நோய் நீங்கி சுகமடைந்து வருகிறார்கள்.

மேக நோய், குஷ்டநோய், மதுமேக நோய், க்ஷயநோய் முதலிய கொடி வியாதிகளுக்கு இயற்கை வைத்தியத்தோடு, செயற்கை வைத்தியமாகிய நவதாம்பிரம், தங்கம், முத்து, சுவர்ண அப்பிரேகம் முதலிய உயர்ந்த பஸ்ப சிந்தூரங்களாலும் நோய் நீக்கப்படுகிறது. நோயாளர் நேரில் வந்தேனும், தபால் மூலமாகவேனும் பண்டிட் ஆனந்தரின் ஆலோசனையின்படி நடந்து சுகமடையலாம்.

மானேஜர், பண்டிட் ஆனந்தரின் வைத்தியசாலை,
221, தங்கசாலை வீதி, சென்னை.

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

கிரகங்களும் சுற்றியோடும் விதம் தெரியாதவரை கடவுள் உலகையும் கிரகங்களையும் படைக்கும்போது அவைகளை சுழற்றிவிட்டார் என்றார் சில மதஸ்தர். கிரகங்களை சில பூதங்கள் ஓட்டுகின்றனவென்றார்சிலவான சாஸ்திரிகள். (Vepler) ஆனால் நியூடன் (Newton) தனது நிலக்கவர்ச்சி (Gravitation) திட்டத்தால் கிரகங்கள் ஓடும் விதத்தை நிரூபித்த பிறகு மதஸ்தர்களுடைய கடவுளும், பூதம், பேய், பிசாசுகளும் பரந்தோடிப்போயின. உலகம் வந்த வழி தெரியாதிருக்கும் வரை உலகத்தை பூமாதேவி என்றும், கடவுளால் சிருஷ்டி என்றும், மதஸ்தர்கள் கற்பித்து வந்தார்கள். மெஞ்ஞானம் இந்த சிருஷ்டிக்கதையை கற்பனை என்று நிரூபித்தவுடன் மதஸ்தர்கள் உலக சிருஷ்டியைவிட்டுவிட்டு உயிர் சிருஷ்டியை பிடித்துக் கொண்டார்கள். சடபதார்த்தமாகிய உலகம் மெஞ்ஞானம் சொல்வது போல் ஒரு காலத்தில் ஆவியாக இருந்து (Gaseous) கனத்தப்பொருளாக (Solid) வந்திருக்கலாம். ஆனால் உயிர் எப்படி வந்தது என்றார்கள்? சடவுலகிலிருந்து சித்து எப்படி உண்டாகும்? இதுதான் நமது தற்கால மதஸ்தர்களுடைய முக்கியவாதம். உயிர் உலகில் முளைத்த விபரம் மெஞ்ஞானத்திற்கு தெரியாதபடியால் அது கடவுளால் சிருஷ்டி செய்திருக்கவேண்டுமென்று மதஸ்தர் வாதிக்கின்றார்கள். மெஞ்ஞானத்தின் விளங்காத இடத்திலெல்லாம் மதம் "எலே பொத்தல், எலே பொத்தல்" என்று நுழையப்பார்க்கின்றதை முன்பே மெஞ்ஞான சரித்திரத்தில்கண்டுள்ளோம். ஆனால் இக்கும் நாளடைவில் மதம் புறமுதுகிட்டோடும் என்பதற்குத்தடையில்லை. ஒரு காலத்தில் உயிரால் செய்யப்படும் உடல் வஸ்த்துக்களை (Organic Substances) அதாவது எச்சில், மூத்திரம், பித்தம் ஜீரண வஸ்துக்கள், சர்க்கரை இவைகளை ஆராய்ச்சிசாலைகளில் (Laboratory) செயற்கையாக (Artificially) செய்யமுடியாதென்றார். சில மதப்பற்றுள்ள மெஞ்ஞானிகளும், மதஸ்தர்களும், இன்று அவைகளையும், இன்னும் அனேக உடலில்உண்டாகும் வஸ்துக்களையும், ஆராய்ச்சாலைகளில் செய்து முடித்துக்கொண்டு வருகின்றார்கள். இங்கேயும், மதக்கற்பனைகளுக்கு இடமில்லாமல் போயிற்று. உயிரையும் செய்யலாமென்ற கோரிக்கை அனேக மெஞ்ஞானிகளுக்குண்டு. முதலாவது உயிருக்கும் உயிரில்லாதவைகளுக்குமுள்ள வித்தியாசங்கள் குறைந்து வருகின்றன. இரண்டாவது சில பொருள்களை உயிருள்ள வஸ்த்து என்றாகிலும். உயிரில்லாதவஸ்து என்றாகிலும், சொல்ல முடியவில்லை. மூன்றாவது எல்லா உயிரும் உயிரற்ற வஸ்த்துகளால் தான் வளர்ந்து உயிர் வாழ்கின்றன. நான்காவது உயிர் செய்யும் வஸ்துக்களை உயிரற்ற வஸ்துக்களைக்கொண்டு செய்கின்றோம். ஐந்தாவது உயிர்களுக்கும், உயிரற்றவைகளுக்கும், பொதுவாக அனேகவித சம்பந்தங்களுண்டு. சேதன அசேதனப் பொருள்களுக்கு தேகம் ஒன்றே. கட்டடமும் ஒன்றே. ரூபமும்ஒன்றே (In body, in structure, in form, the living and the non living are one) இத்தியாதி ஒற்றுமைகளையுடைய இவ்விரண்டு வஸ்துக்களும் ஒன்றிலிருந்து ஏன் பெறக்கூடாது என்று விஞ்ஞானம் கேட்கின்றது? ஒன்று மாத்திரம் நிச்சயமாக யாவருக்கும் தெரிந்த விஷயம். அதாவது எல்லா உயிரும் ஒரு காலத்தில் உயிரற்றுப்போகும் என்பது பிரத்தியட்ச அனுபவம். இதையாரும் மறுக்க முடியாது. "முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும், கடையிலொரு பிடி சாம்பலாவது" நிச்சயம். ஆனால் அந்த சாம்பல் திரும்ப முடிசார்ந்த மன்னராவதுதான் தெரியவில்லை. மழை, இடி, மின்னல் முதலிய பிரகிருத வஸ்துக்களை செய்கின்றோம். உயிர்கள் அடையும் உருவங்களைச் செய்கின்றோம். உயிர் செய்யும் வஸ்துக்களையும், சேர்க்கையாக செய்துமுடிக்கின்றோம். இவ்வளவு செய்யத்திறமைகொண்ட நாம் உயிரைச் செய்யவும் துணிவு உண்டாகுமெனவும் அதிக. இந்தப்பிரச்சினையைதெரிந்துகொள்ள விருப்பமுடையோர் இனிவரும் உயிர் நூலை எதிர்பார்க்கவேண்டும். இயற்கைஉயிரைப் போல் செயற்கை உயிரை செய்வோமேயானால் மதங்கள் எங்குபோய் ஒழியும்? ஆஸ்திகம் தலைகுனியவும், நாஸ்திகம் தழைத்தோங்கவும் காலம் வருமென்பதற்குச் சந்தேகமில்லை. இனி நீதிநெறி மனிதர் வாழ்வில் வந்த விதத்தை மூன்றும் பாகத்தில் கண்டறிவோம்.

குறிப்பு:— உயிரில்லாத வஸ்துக்களிலிருந்து உயிருடைய உருவங்கள் வந்திருக்கலாமென்ற சிந்தனைக்கு, பின்வரும் நூல்களைப் பார்க்கவும்.

Dastre's-Lifeand Death.

Leduc's-Mechanism of Life.

Schafer's-Life [British Association address 1912)

Haldane's-Origin of Life

Rationalist Annual 1929.

———

பேரளம்

குடியரசு கிடைக்குமிடம்.

ச வை. குப்புசாமி,

புகையிலை மண்டி

ஜனரல் மர்ச்சண்ட்.

சாலாமிசிரி லேகியம்

(ரிஜிஸ்டர்டு)

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

மிகுந்த பலத்தையும், வீரிய விருத்தியையும் உண்டாக்கும்.

இந்த லேகியத்தால் குணமாகும் நோய்கள்.

கை கால் அசதி
இடுப்புவலி
பலக்குறைவு
ஆயாசம்
நரம்புத்தளர்ச்சி
சொர்ப்பனஸ்கலிதம்

சம்போக காலத்திலேற்படும் துரிதஸ்கலிதம் முதலியவைகளை நீக்கும்.

ஆண் தன்மைமை அதிகரிக்கச் செய்யும். தளர்ந்த நரம்பைக்கெட்டிப்படுத்தும். வீரியத்தை விருத்தி செய்யும்

திடசரீரத்தைஉண்டாக்கும். மனதிற்கு உற்சாகத்தைக் கொடுக்கும். எவ்வளவுகடின வேலை செய்தாலும் யாதொருகளைப்பும் உண்டாகாது. சுக்கிலத்தை ஸ்தம்பனம் செய்யும். சம்போக இன்பத்தை முற்றிலும் அனுபவிக்கச்செய்யும். சாப்பிட மதுரமுள்ளது.

ஆண், பெண், சிறுவர், வயோதிகர் யாவரும் சாப்பிடலாம். பத்தியமில்லை,

1-சேர் டப்பி ரூ. 2-8-0

பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும். விலாசம் தெரிவித்தால் கேட்லாக் அனுப்பப்படும். கமிஷன் ஏஜண்டுகள் தேவை

டி. சி. சிங்காரம் அண் கோ.,

சித்த-ஆயுர்வேத வைத்தியசாலை,

தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி.

Ready for Sale! Ready for Sale!!

The Crux of the Indian Problem
By Dr. Paranjpye M. A., D. Sc.

————)o(————

The English edition of the above book published by R. P. A. through Watts & Co., London, is ready for sale with us. All those who are sincerely interested in social advance and rejuvenation must go through Dr. Paranjpye's "Crux of the Indian Problem," a clear and vivid exposition of the present degraded social status of the Hindu Society, its abominable and vain observances practised in the name of Religion & God.

Clear cut ideas! Rationalistic views! Matured sentiments!!

English Print. Well gotup. Neatly bound.

Price per copy	... ...	Rs 1—0—0
For Subscribers of Kudi Arasu		As. 0—8—0

Can be had of:—

Kudi Arasu Book Depot, Erode.

குருட்டு நம்பிக்கைக்கு ஆதாரம்

கும்பகோண மகாமகம்.

விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

1.	சிதம்பர ரகசியம் ...	0—8—0
2.	சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை	0—4—0
3.	மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை	0—8—0
4.	ஆராய்ச்சி அணிகலம் ...	0—12—0
5.	சுயமரியாதை தத்துவ கீதங்கள் ...	0—4—0
6.	பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை	0—6—0
7.	மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) ...	2—0—0
	சுயராஜ்யம் யாருக்கு ...	0—1—0
	சாமிகளின் அடிமைகள் ...	0—12—0

The crux of the Indian Problem
By Dr. PARANJPYE (in English.)
விலை ரூ. 1—0—0
"குடி அரசு" சந்தாதாரர்களுக்கு ரூ. 0—8—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணுவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 6 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம்	ரூ.	4—0—0
ரிவோல்ட்டு ஒருவருஷமாலை பைண்ட் செய்தது கிரயம்	ரூ.	4—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு.

Dr. T.K.V. Chalam.

Goshaye office pillss.
கோஷாயி ஆபீஸ் மாத்திரை

மலச்சிக்கலுள்ள ஆண், பெண், பாலர், விருத்தர்களும் எவ்வித பத்தியமுமில்லாமல் சாப்பிட்டு குணமாகக்கூடிய கோஷாயி ஆபீஸ்மாத்திரை 51 கொண்ட சீசா 1க்கு ரூ. 1—10—0 101-க்கு 3—0—0. வி. பி. பாக்கிங் சார்ஜ் வேறு.

Proprietor. T. K. வெங்கடாசலம்,
(Disciple of Late Dr B. A. Ehiraj Cholera Bairi)
கோஷாயி வைத்தியசாலை,
தென்னூர், திருச்சி.

"தமிழன்"

ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தளராதுழைப்பவன் தமிழன். வெட்டு ஒன்று துண்டு இரண்டான அபிப்பிராயங்கள் அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அறிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.
உள் நாடு ரூ. 3—0—0.
வெளிநாடு ரூ. 5—0—0.

விலாசம்:—
மானேஜர், "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை போஸ்டு,
கோலார் தங்கவயல்.

Read.
The 'Citizen'

and become a True Citizen.
The only Monthly Magazine in India purely devoted to the civic, Social and economic Interests of the Indians. Annual Subscription Rs. 2—0—0.
For advertisement please apply to:—
The Publisher
The Citizen
86, East Andar Street,
Teppakulam, Trichy.

மதத்தை ஒழிப்பது
உயர்வு தாழ்வை ஒழிப்பதாகும்.

பிரமேக நிவாரணி.

நாட்பட்ட பிரமேகம், தந்திமேகம், வெள்ளை, வெட்டை, நீர்க்கடுக்கு, எரிச்சல், குத்தல், உடனே நிற்கும். நிச்சயமாய் 3 வேளையில் குணம் தரும். தவறாது. புட்டி ஒன்றுக்கு விலை ரூ. 2—0—0.

கெர்ப்ப எண்ணெய்.

இது ஸ்திரீகள் சஞ்சீவி என்னலாம். மாதாந்திர வியாதியை உடனே நிறுத்தும். சரியாய் பழித்தலை டையாகும், கர்ப்பாசயம், இனைப்பலை இருந்துள்ள சகல கெடுதல்களும் நீங்கி கெர்ப்பமுண்டாகும். புட்டி 1க்கு விலை ரூ. 2. தபால் சார்ஜ் வேறு.

எமது கியாட்லாக்

இனம்!

சகல வியாதிகளுக்கும் உயர்ந்த மருந்துகள் இருக்கின்றன. விபரத்திற்கு எழுதுங்கள்.

வெள்ளை நிவாரணி.

பலஹீனத்தை, உதிரச் சிக்கலும், சொப்பன ஸ்கலிதமும், இந்திரியம் வெளிப்படுவதைத் தடுத்து காக்கும். புட்டி ஒன்றுக்கு ரூ. 2—0—0.

மலையப்பசாமி,
வைத்தியசாலை, பழநி. S. I.

ANANGARANGABATIKA
(Enjoyment Pill)
DIVINE REMEDY FOR SEXUAL DISABILITY and IMPOTENCY Restore youthful Retentive & Erective Capacity ENSURE PLEASURE FOR ONE HOUR. Even an OLD one can fully enjoy the HEAVENLY BLISS derived From Sexual intercourse.
Complete satisfaction guarenteed. Money refunded in case of failure. Price for 60 Pills Rs. 8. Sample phial of 20 Pills Rs. 3 only. Please write in ENGLISH.
"SAILASRAM" (K)
Chandanpur,
(Khulna) E. B. R.

குடி அரசுப் பதிப்பக புஸ்தகங்கள்.

கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப்பட்டது. இக்கட்டுரைகளைப் படிப்பதால் அனேக சாஸ்திர புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு சமயப்புரட்டு முதலியவைகளையும் உணர்ந்து நிகரற்ற பண்டிதராகலாம். இதன் விலை அணா. 0—8—0

இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்பஇராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல்களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப் புரட்டுகளை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0

இரண்டாம் பாகம் அயோத்தியா காண்டம் அணா. 0—8—0

ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக் காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச்சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின் வண்டவாளம் முழுதும் தெரியும் பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜன சமூகம், சீர்திருத்தம் பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக் காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப் பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம், ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும்.

இதன் விலை அணா. [illegible]

தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொதுஜனங்களுக்குப் புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 0—3—0

பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப் போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அணா 0—4—0

மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னிமேயோ" எழுதியதிலுள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்—நமது நாட்டிலுள்ள வேறு பல ஆபாசங்களையும் எடுத்துக் காட்டிச் சீர்திருத்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.

இதன் விலை அணா 0—3—0

அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரத்திரப் புரட்டுக்களையும் தமிழ்நூல் ஆதாரங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0—2—0

கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாசப் புராணங்களின் ஆதாரங்களைக்கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0—2—0

கடவுளும், பிரபஞ்சமும்.

"கடவுள்" என்ற ஓர் அர்த்தமற்ற வார்த்தையை நம்பிகாலத்தையும், செல்வத்தையும், அதற்காகச்செலவு செய்து சோம்பேரிகளாய் வாழ்வது மதியீனமும் அறியாமையுமென்பது இப்புத்தகத்திலிருந்து தெளியலாம். சிறந்த ஆராய்ச்சி நூல். கல்லினுள் தேரையும், மாங்கொட்டையில் புழுவும் எப்படி ஜீவிக்கின்றன? கோழிமுந்தியதா? முட்டை முந்தியதா? என்ற கேள்விகளுக்கு விடையுடன் கூடியது.

இதன் விலை அணா 0—4—0.

சத்தியாக்கிரகமா சண்டித்தனமா?

விலை பை. 0—0—3

காந்தியின் உண்மைத் தோற்றம்.

விலை பை. 0—0—3

இராமசாமியின் இலங்கை உபன்யாசம்.

விலை பை. 0—0—6

இந்தியாவின் குறைபாடுகள்.

டாக்டர் பராஞ்சிபே எழுதியது விலை அணா. 0—8—0

குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா. 0—6—0

Crux of the Indian Problem இங்கிலீஷ் விலை ரூ. 1—0—0

குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா. 0—8—0

மநுநீதி மருமம்.

விலை அணா. 0—2—0

இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

விலை அணா. 0—2—0

சுயமரியாதைப்பாடல்.

விலை அணா 0—2—0.

கதர்-மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)

விலை அணா 0—2—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு தோழர் நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.